This ebook can be download from
www.vallalar.org



**தயவு**

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை**

# திருமூலரும் வள்ளலாரும்

**சன்மார்க்க தேசிகன் ஊரன் அடிகள்**

## முன்னுரை

வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்றோ என்று வள்ளலார் பாடுகிறார்.

**வாழையடி வாழைஎன வந்ததிருக் கூட்ட**
**மரபினில்யான் ஒருவன்அன்றோ வகைஅறியேன் இந்த**
**ஏழைபடும் பாடுனக்குந் திருவுளச்சம் மதமோ**
**இதுதகுமோ இதுமுறையோ இதுதருமந்தானோ**
**மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யான் உனக்கு**
**மகன்அலனோ நீஎனக்கு வாய்த்ததந்தை அலையோ**
**கோழைஉல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்**
**கொடுத்தருள்நின் அருள்ஒளியைக் கொடுத்தருள்இப் பொழுதே.**

**-திருஅருட்பா 3803.**

வாழையடி வாழையாக வரும் திருக்கூட்ட மரபில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வந்தவர் திருவருள்ளுவர்.

திருவள்ளுவர், திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர், பட்டினத்தார், அருணகிரியார், தாயுமானவர் என்று தொடர்ந்து வரும் இம்மரபைத்தான் வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபு என்று வள்ளற்பெருமான் குறிப்பிடுகிறார்.

நாயன்மார்கள் ஆழ்வார்கள் சித்தர்கள் முதலியோரெல்லாம் இம்மரபில் வருபவர்களே. வள்ளலாரின் சமகாலத்தவரான இராமகிருஷ்ணரும் இம்மரபில் வருபவரே. வள்ளலாருக்குப் பின் வந்த அரவிந்தர், ரமணர் போன்றோரையும் இம்மரபிற் சேர்க்கலாம். மகாத்மா காந்தியடிகளையும் மகாகவி பாரதியாரையும் ஒருவகையில் இம்மரபில் சேர்த்துக் கூறலாம். காந்தியடிகள் பாரதியார் இவ்விருவரின் ஆன்மிகம் அவர்களை இவ்வரிசையில் வைத்து எண்ணிப்பார்க்க இடமளிக்கிறது.

வள்ளுவருக்கு முன்னே இவ்வரிசையில் சேர்ப்பதற்குரிய பெருஞானிகள், வடக்கே தோன்றித் தமிழ் நாட்டிலும் பரவி, உலகளாவிய நிலையினரான மகாவீரரையும் புத்தரையும் சேர்க்கலாம். பின்னாளில் கடல் கடந்த நாடுகளில் தோன்றி உலகளாவிய நிலையில் விளங்கும் இயேசுவையும் நபிகளையும் கூட இம்மரபிற் சேர்க்கலாம். உலகில் தோன்றிய ஆன்மிக ஞானிகள் அனைவரும் வாழையடி வாழை என வரும் திருக்கூட்ட மரபினரே.

ஆயினும் நாம் இங்கு ஒப்பாய்வுக்கென எடுத்துக்கொள்வதில், வள்ளுவர் முதல் வள்ளலார் வரை உள்ளவர்களில் திருவள்ளுவர் - திருமூலர் - சைவ சமயகுரவர் நால்வர் - தாயுமானவர் - என எழுவரை மட்டும் எடுத்துக் கொண்டுள்ளோம். வள்ளற்பெருமானது சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகளுக்கு ஒத்த, வள்ளற்பெருமானே ஓரிடத்திற் குறிப்பிட்டுப் போற்றியுள்ள மகாவீரர் புத்தர் ஆகிய இருவரையும் வள்ளுவருக்கு முன் வைத்துள்ளோம். வள்ளலாருக்குப் பின் காந்தியடிகளையும் பாரதியாரையும் சேர்த்துக் கொண்டுள்ளோம்.

எனவே இவ்வாழையடி வாழை ஒப்பாய்வு வரிசை

1. மகாவீரரும் வள்ளலாரும்
2. புத்தரும் வள்ளலாரும்
3. வள்ளுவரும் வள்ளலாரும்
4. திருமூலரும் வள்ளலாரும்
5. சம்பந்தரும் வள்ளலாரும்
6. அப்பரும் வள்ளலாரும்
7. சுந்தரரும் வள்ளலாரும்
8. மாணிக்கவாசகரும் வள்ளலாரும்
9. தாயுமானவரும் வள்ளலாரும்
10. வள்ளலாரும் காந்தியடிகளும்
11. வள்ளலாரும் பாரதியாரும்

எனப் பதினோரு நூல்களாக அமைகிறது.

கம்பரும் வள்ளலாரும் என்றொரு நூலை 2003-இல் வெளியிட்டுள்ளோம். சேக்கிழாரும் வள்ளலாரும் ஒருசமயம் எழுதத் தொடங்கி இன்னும் முற்றுப்பெறாத நிலையில் உள்ளது.

இக்காலம் ஆய்வுக்காலம். அதிலும் ஒப்பாய்வுக் காலம் என்பதைக் கூறவேண்டியதில்லை. ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியவற்றை பார்த்துப் பொதுக்கருத்துகளையும் அனுபவங்களையும் அறிவது பல்வேறு சமரசங்களுக்கு ஏதுவாக இருக்கும்.

**திருமூலரும் வள்ளலாரும்**

திருமூலரின் திருமந்திரம் வள்ளலாருக்கு இறைவனால் எடுத்துக் காட்டப்பெற்ற நூல். வள்ளலார் கொண்ட வழிகாட்டி நூல். வள்ளலார் கண்ட தமிழ்ப் பிரஸ்தானத் திரயங்களுள் ஒன்று. சன்மார்க்கத்தின் உண்மை திருமந்திரத்தைக் கவனிக்கில் விளங்கும் என்று வள்ளற்பெருமான் உபதேசித்துள்ளார். வள்ளற்பெருமானின் சமரச சுத்த சன்மார்க்கத்திற்கு மூலமும் முதலும் கருவும் ஆன உண்மைகள் அரும் பொருள்கள் பல திருமந்திரத்தில் உள்ளன. திருமூலர் ஷடாந்தங்களையும் முதன் முதலில் எடுத்துக் கூறியவர். வேதாந்த சித்தாந்த சமரசம் பேசினார். திருமூலர் மரபில் வரும் மௌன குருவின் சீடரான தாயுமானவரும் வேதாந்த சித்தாந்த சமரசம் பேசுகிறார். தாயுமானவருக்குப் பின் வந்த வள்ளலார் ஆறந்தசமரசம் (ஷடாந்த சமரசம்) பேசினார். ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கத்தைக் கண்டு வெளிப்படுத்தினார். திருமந்திரம் தாயுமானவர் பாடல் திருவருட்பா ஆகிய மூன்றையும் நன்றாக ஆராய்ந்தால் திருமூலர் - தாயுமானவர் - வள்ளலார் என ஒரு மரபுண்மை புலப்படும்.

திருமூலர் வள்ளலார் இருவர் அருளிச் செயல்களையும் அனுபவங்களையும் நன்கு ஆராய்ந்து விளக்குவது இந்நூல்.

திருமூலரையும் வள்ளலாரையும் பல்வேறு வகைகளில் ஒப்பிட்டு ஆராய்ந்து இந்நூலில் விளக்கியுள்ளோம்.

அவ்வப்போது எமது பணிகளில் உதவிவரும் **திரு.குறிஞ்சி.ஞான.செல்வநாதன்,** எமது தனிப்பணியாளர் **திரு.இரா.இராஜேந்திரன்** ஆகிய இருவரும் இரவு பகல் பாராது இந்நூல்களின் உருவாக்கத்தின் போது உடனிருந்து பல வகைகளில் உதவினர். நம் சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையத்தில் கணினிப் பணியாற்றும் செல்வி. **தி.சுபா, செல்வி. ம.மணிமொழி** இருவரும் நன்றாகக் கணினி அச்சு செய்துதவினர். நமதன்பர் ஆர்க்காடு நல்லாசிரியர் புலவர் **திரு.ச.சுந்தரேசனார்** அவர்கள் நன்கு மெய்ப்புத் திருத்தி உதவினார். எமது நூல்களை வழக்கமாக அச்சிடும் சென்னை யுனைடெட் பிரிண்டர்ஸ் அச்சகத்தார் **திரு.இரா.கௌதமசங்கர் குறுகிய காலத்தில் அழகாக அச்சிட்டுதவினர்.** இவர்களுக்கு நம் அன்பான பாராட்டும் வாழ்த்துகளும் உரிய.

அன்பர்கள் இவ்வரிசை நூல்களை வாங்கிப் பயின்று பயன்பெறுவார்களாக.

**வாழ்க! வாழ்க!**

**வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே!**

22.05.2005 **ஊரன் அடிகள்**

# திருமூலரும் வள்ளலாரும்

## திருமூலர் வரலாறு

### திருமூலர் காலம்

திருமூலர் திருவள்ளுவருக்குக் காலத்தாற் பிற்பட்டவர். திருஞானசம்பந்தருக்கு முற்பட்டவர். திருமூலர் காலம் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு என்பது அண்மைக்கால, தற்கால, ஆய்வாளர் பலருக்கும் ஒப்ப முடிந்த கொள்கை.

திருவள்ளுவர் காலம் கி.பி.முதல் நூற்றாண்டு,
திருஞானசம்பந்தர் காலம் - கி.பி.ஏழாம் நூற்றாண்டு,
திருமூலர் காலம் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு,

என்று முடிவாகியுள்ளது.

## திருமூலர் கயிலாயவாசி

## கயிலையிலிருந்து வந்து கயிலைக்கே மீண்டவர்

திருமூலர் கயிலாயவாசி. கயிலையிலிருந்து வந்து கயிலைக்கே மீண்டவர்.

**அந்தி இளம்பிறைக் கண்ணி அண்ணலார் கயிலையினில்**
**முந்தை நிகழ் கோயிலுக்கு முதற்பெரு நாயகமாகி**
**இந்திரன் மால் அயன் முதலாம் இமையவர்கள் நெறி அருளும்**
**நந்தி திருவருள் பெற்ற நான்மறை யோகிகள் ஒருவர் -1**

**மற்றவர்தாம் அணிமாதி வருஞ் சித்தி பெற்றுடையார்**

**கொற்றவனார் திருக்கயிலை மலைநின்றும் குறுமுனிபால்**
**உற்றதொரு கேண்மையினால் உடன் சிலநாள் உறைவதற்கு**
**நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக்கொண்டார்-2**

என்று பெரியபுராணம் கயிலையிலிருந்து பொதியமலை நோக்கி அவர் வரும் வரவைக் கூறுகிறது.

-பெரியபுராணம் 3594; 3595

இவ்வாறே அவர் வரவைக் கூறும் பெரியபுராணம் திருவாவடுதுறையில் திருமந்திரப்பணியை நிறைவுசெய்து, நிறைவில், அவர் மீண்டும் திருக்கயிலைக்கே திரும்புவதை

**முன்னிய அப்பொருள்மாலைத் தமிழ் மூவாயிரஞ் சாத்தி**
**மன்னிய மூவாயிரத் தாண் டிப்புவிமேல் மகிழ்ந்திருந்து**
**சென்னிமதி அணிந்தார்தம் திருவருளால் திருக்கயிலை**
**தன்னில் அனைந் தொருகாலும் பிரியாமைத் தாளடைந்தார்**

-27

என்று கூறித் திருமூலநாயனார் புராணத்தை நிறைவுசெய்கிறது.

திருத்தொண்டர் புராணம் இவ்வாறு கூற, திருத்தொண்டர் புராணசாரம் பாடிய உமாபதி சிவாசாரியர், ஒரே பாடலில் திருமூலர் வரலாற்றைச் சுருங்கக் கூறுவாராய்,

**"கயிலாயத் தொருசித்தர் பொதியிற் சேர்வார்"**

என்று பாடலைத் தொடங்கி,

**"கோதிலை வடகயிலை குறுகினாரோ"**

என்று பாடலை முடிக்கிறார்.

திருமூலர் கயிலையிலிருந்து வந்தார் என்பதற்கு ஆதாரமான, அகச்சான்றான, பாடல்கள் திருமந்திரத்திலேயே உள்ளன.

## பொருளடக்கம்

1.முன்னுரை..........................................................................................1
2.*திருமூலர் வரலாறு*...................................................................4
3.கூடுவிட்டுக் கூடுபாய்ந்தது......................................................13
4.அரசடியில் தவம் - யோகம்.........................................................14
5.*திருமூலர் பிராமணரா?*.................................................................22
6.*திருமந்திர வரலாறு*...................................................................26
7.அன்பே சிவம்.............................................................................49
8.ஒருபண்டமாற்று - ஒருபரிவர்த்தனை அடியாரும் ஆண்டவனும்..70
9.*இந்நாளில் திருமந்திரம்*..........................................................97
10,இனிச் செய்யவேண்டிய திருமந்திரப் பணிகள்...........................100

செல்கின்ற வாறறி சிவமுனி சித்தசன்
வெல்கின்ற ஞானத்து மிக்கோர் முனிவராய்ப்
பல்கின்ற தேவர் அசுரர்நரர் தம்பால்
ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே -83

விளக்கிப் பரமாகும் மெய்ஞ்ஞானம் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி

**துளக்கரும் ஆனந்தக் கூத்தன்சொற் போந்து**
**வளப்பில் கயிலை வழியில்வந் தேனே** -91

வான்வழியூடு வந்தேனே, கயிலை வழியில் வந்தேனே என்பன, திருமூலர் வான்வழி வந்தவர் கயிலை வழிவந்தவர் என்பதற்கு அகச்சான்றுகள்.

திருமூலர் கயிலையிலிருந்து வருகிறார் - வரவு
திருவாவடுதுறையில் தங்கித் தவம் செய்கிறார்.

திருமந்திரத்தை அருளுகிறார் - இருப்பு
மீண்டும் கயிலைக்கே திரும்புகிறார் - செலவு

திருமூலர் வரலாறு கயிலையில் தொடங்கிக் கயிலையில் நிறைவுபெறுகிறது. இக்காலத்திய பாய்ண்ட் ட்டூ பாயிண்ட் (point to point)பேருந்துப் போக்குவரத்தைப் போல.

சுந்தரர் வரலாறும் இப்படித்தான். கயிலையில் தொடங்கிக் கயிலையில் முடிகிறது. முன்னம் கயிலாயவாசியாக இருந்த சுந்தரர், திருத்தொண்டத் தொகை தரப்போதுவார், திருநாவலூரில் வந்து பிறக்கிறார். பணி முடிந்ததும் இறைவன் மீண்டும் கயிலைக்கே அழைத்துக் கொள்கிறான். (பாயிண்ட் ட்டூ பாயிண்ட்).

பெரியபுராணமும் இப்படித்தான் கயிலையில் தொடங்கிக் கயிலையில் முடிகிறது. (பாயிண்ட் ட்டூ பாயிண்ட்).

பெரியபுராணத்தின் தொடக்கம் திருமலைச் சருக்கம் திருமலைச்சிறப்பு, கயிலையில் சுந்தரர் புகழ் பேசப்பெறுதல்.

பெரியபுராணத்தின் நிறைவு வெள்ளானைச் சருக்கம் சுந்தரர் வெள்ளை யானை ஏறிக் கயிலைக்கு மீள்தல்.

திருமலை என்ற பெயர் வைணவ உலகில்தான் மிகுதியாக வழங்குகிறது. வைணவப் பதிகள் பல. அவற்றுள் ஒன்றே ஒன்று “திரு” பெற்ற பதி; திருப்பதி. நெடுமாலின் மலைகள் பல. அவற்றுள் ஒரே ஒரு மலை “திரு” பெற்ற மலை; திருமலை (திருவேங்கடம்). திருப்பதி என்பது ஊரின் பெயர். திருமலை என்பது மலையின் பெயர். திருப்பதி திருமலை என்ற பெயர்கள் திருவேங்கடத்திற்கே உரிய திருவுடைய பொதுப் பெயர்களாய், சிறப்புப் பெயர்களாய் விளங்குகின்றன. திருவேங்கடம் என்றால் தெரிவதைவிடத் திருப்பதி திருமலை என்றாலே நன்கு தெரியும். வைணவ உலகில் திருமலை என்ற பெயரிடப் பெறுவோர் மிகப்பலர். திருவேங்கடமுடையான் கோயிலுக்குத் திருமலை திருப்பதிதேவஸ்தானம் (டி.டி.தேவஸ்தானம் T.T. Devasthanam) என்பதே அதிகாரப்பூர்வமான பெயர். திருமலை என்றவுடன் எல்லாருக்கும் பெரிதும் நினைவுக்கும் வருவது திருப்பதி மலையே. கயிலை மலையைத் திருமலை என்று எத்தனை சைவர்க்குத் தெரியும். பெரியபுராணம் படித்தவர்கள் மட்டுமே அறியக்கூடும். அவருள்ளும் எத்தனைபேர் நன்கு ஊன்றி நோக்கி உணர்ந்தார்களோ! இத்தகைய அருமைகளையெல்லாம் அறிஞர்களும் அன்பர்களும்

பொதுமக்களும் அறிந்து போற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இங்கிதனை இவ்வளவு தூரம் விரிப்பது.

பெரியபுராணத்தில் முதலில் கயிலை, முடிவில் கயிலை
சுந்தரர் வரலாற்றில் முதலில் கயிலை, முடிவில் கயிலை
திருமூலர் வரலாற்றில் முதலில் கயிலை, முடிவில் கயிலை

சைவத் தலங்களில் முதலில் கயிலை, முடிவில் கயிலை, என்பது தலவரிசை. முதலும் கயிலை முடிவும் கயிலை என்பது ஒரு தனிச்சிறப்பு. அச்சிறப்பைச் சுந்தரருக்கு முன்பே, பெரியபுராணத்திற்கு முன்பே திருமூலர் முதன்முதலிற் பெறுகிறார்.

**திருமூலரின் ஊர்**

திருமூலருடைய ஊர் மூலனுடைய ஊராகிய சாத்தனூரே என்பார் உளர். திருமூலர் தமிழ்நாட்டவரே என்றும் ஞானகல்வி கற்பதற்காகத் தமிழகத்திலிருந்தே அவர் கயிலைக் குருகுலத்துக்குச் சென்றிருந்தார் என்றும் துடிசைகிழார் சிதம்பரனார் கூறுகிறார். திருமூலர் தமிழ்நாட்டிற் பிறந்து வளர்ந்து பின்னர் கயிலை சென்றிருக்கலாம். திருமந்திலும், பெரிய புராணத்திலும், ஏனைய ஆதாரங்களிலும் அவரது ஊரைப் பற்றிய பேச்சு இல்லை. ஆதலின் திருமூலர் பிறந்த ஊர் இன்னதெனத் தெரியவில்லை என்பதே உண்மை.

**திருமூலரின் பெயர்**

"நம்பிரான் திருமூலன்" என்று சுந்தரர் கூறுகிறார்.

"மூலனாகிய அங்கணனே" என்கிறார்
நம்பியாண்டார்நம்பி.

'சாத்தனூர் ஆமேய்ப்பார் குடித்தோன்றி................
நிரைமெய்ப்பான்

மூலனெனும் பெயருடையான்...................
அவனுடலில் தம்முயிரைப் பாய்த்தினார்.

பாய்த்தியபின் திருமூலராய் எழலும்" என்று கூறுகிறார் சேக்கிழார்.

மூலனுடைய உடம்பில் திருமூலர் கூடுவிட்டுக் கூடுபாய்ந்தபின் அவருக்குத் திருமூலர் என்ற பெயர் ஏற்பட்டது என்பது சேக்கிழார் கருத்து. வரலாற்றுத் தொடக்கத்தில் திருமூலரின் முன்னைப் பெயர் இன்னதென்று சேக்கிழார் குறிப்பிடவில்லை. கயிலையில் நந்தியருள் பெற்ற நான்மறையோகிகள் ஒருவர் என்று மட்டுமே கூறுகிறார். கயிலாயத்து ஒரு சித்தர் என்று உமாபதி சிவம் கூறுகிறார்.

சாத்தனூர் இடையன் மூலனுடைய உடம்பிற் புகுந்தபின்னர்தான் அவருக்குத் திருமூலர் என்ற பெயர் ஏற்பட்டது. மூலன் உடம்பிற் புகுவதற்குமுன் அவருக்கு வழங்கிய பெயர், திருமூலரின் இயற்பெயர், இன்னதெனத் தெரியவில்லை என்பதே உண்மை.

திருமூலரின் இயற்பெயர் சுந்தரநாதன் என்று துடிசைகிழார் கூறுகிறார்.

“சுந்தரன் ஆகமச் சொன் மொழிந்தானே” - திருமந்திரம் என்ற திருமந்திரத்தையும்

“சுந்தர நாதன் சொல்லிய மந்திரம்” - மந்திரம் நூறு என்னும் மந்திரம் முந்நூறு பாடலையும் ஆதாரங்களாகக் காட்டுகிறார்.

“சுந்தரன் ஆகம” என்பது சரியான பாடமன்று, “சுந்தர ஆகமம்” என்பதே சரியான பாடம் என்றுகூறி அறிஞர் பலரும் துடிசைகிழாரின் கூற்றை ஏற்க மறுக்கின்றனர்.

திருமூலரின் இயற்பெயர் சிவமுனி சித்தசன் என்று கூறுவாரும் உளர். திருமூலர் திருமந்திரத்தில் “சிவமுனி சித்தசன்” என்று வருமிடத்தை (83) ஆதாரமாகக் காட்டுவர். இதுவும் பொருத்தமாகத் தோன்றவில்லை.

திருமூலதேவர்க்குச் சதாசிவமுனிகளென்றும் பெயர் என்று வெள்ளியம்பலவாணமுனிவர் முத்திநிச்சயப் பேருரையிற் கூறுகின்றார். முனிவரின் இக்கூற்று பொருத்தமாக உள்ளது; மதிக்கத் தக்கதாக உள்ளது.

**நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்**
**நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்**
**நந்தி அருளால் மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்**
**நந்தி அருளாலே நானிருந் தேனே** -92

என்னும் திருமந்திரத்தில் “சதாசிவன் ஆயினேன்” என வருவதைக் காண்க. சதாசிவ முனிகள் என்ற பெயர் திருமூலருக்கு முற்றிலும் பொருத்தமானது.

திருமந்திரத்திற்குச் சதாசிவ ஆகமம் என்னும் ஒரு பெயருண்டு. அண்மையில் 1977-இல் வெளிவந்த திருமந்திரம் மூலபாட ஆய்வுப்பதிப்பில் பதிப்பாசிரியர் டாக்டர் சுப.அண்ணாமலை சதாசிவ ஆகமம் என்னும் இப்பெயரை நூலின் முகப்பேட்டிலும் ஆய்வு முன்னுரையிலும் குறிப்பிட்டுள்ளார். சதாசிவன் என்பது திருமூலருக்கு நந்தி அருளிய தீக்கைப் பெயர் என்றும் கூறியுள்ளார்.

சுந்தரநாதன், சிவமுனிசித்தசன் என்ற பெயர்களெல்லாம் வேண்டாம். சதாசிவமுனிகள் என்ற பெயரும் சிறப்புப் பெயராக ஒருபுறம் இருக்கட்டும். அமையட்டும். அனைவரும் அறிந்த பொதுப்பெயரான திருமூலர் என்ற பெயரே அவருக்குப் போதும். பல சொல்லிக் குழப்பவேண்டாம்.

**திருமூலரின் குரு**

திருமூலரின் குரு திருநந்திதேவர். நந்திதேவர் கயிலாயத்தில் ஸ்ரீகண்ட பரமசிவத்திடம் உபதேசம் பெற்றவர். "நந்தி" என்பது சிவபெருமானுக்கும் பெயர். திருநந்திதேவருக்கும் பெயர். நந்திதேவர் கயிலையில் சிவபெருமான் சந்நிதியில் முதற்பெருநாயகமாகத் திகழ்பவர். எங்கெல்லாம் சிவம் உண்டோ அங்கெல்லாம் நந்திதேவர் உண்டு.

திருநந்திதேவரிடம் உபதேசம் பெற்றவர். திருநந்தி தேவரின் மாணாக்கர் (இன்றைய மொழியில் மாணவர்) திருமூலர்.

**நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்**
**நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி**
**மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்**
**என்(று) இவர் என்னோ(டு) எண்மரும் ஆமே - 67**

**நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம்**
**நந்தி அருளாலே மூலனை நாடினோம்**
**நந்தி அருளாவ(து)என்செயும் நாட்டினில்**
**நந்தி வழிகாட்ட நானிருந் தேனே -68**

**நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு**
**புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்(து)**
**அந்தி மதிபுனை அரனடி நாள்தோறும்**
**சிந்தை செய்(து) ஆகமம் செப்பலுற் றேனே -73**

என்னும் திருமந்திரங்கள் திருமூலர் வாக்காகிய அகச்சான்றுகளாம்.

**திருமூலரோடு உடன்பயின்றோர் - திருமூலரின்ஒரு சாலை மாணாக்கர்கள்**

திருமூலரோடு கயிலையில் உடன்பயின்றவர்கள், ஒரு சாலை மாணாக்கர்கள், எண்மர் (எட்டு பேர்). எண்மர் என்பதும் அவர் இன்னின்னார் என்பதும்

**நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்**
**நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி**
**மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்**
**என்(று) இவர் என்னோடு எண்மரு மாமே -67**

என்னும் திருமந்திரத்தாற் பெறப்படும்.

**நந்திகள் நால்வராவார்:**

1. **சனகர்**

2. **சனந்தனர்**

3. **சனாதனர்**

4. **சனத்குமாரர்**

இச்சனகாதி நால்வரோடு

5. **சிவயோகமாமுனி**

6. **பதஞ்சலி**

7. **வியாக்கிரமர்**

8. **திருமூலர்**

ஆக எண்மர்.

நந்திகள் நால்வர் இன்னின்னோர், யார் யார், என்பதைத் திருமூலர் தமது நூலுள் எங்கும் கூறவில்லை. பின்வந்தோர், சனகர் முதலிய நால்வர் எனக் கூறியுள்ளனர். வெள்ளியம்பலவாணமுனிவர் முத்தி நிச்சயப் பேருரையில் "நந்திகணால்வராவார் சநகர், சநற்குமாரர், சநந்தனர், சநாதனர் என் போராவர்" என்று கூறுகிறார்.

**<u>திருமூலரின் வழிவந்தோர் - சீடர்கள்</u>**

திருமூலரோடு உடன்பயின்றோர் எழுவர்போன்றே திருமூலரின் வழி வந்தோரும் (சீடர்களும்) எழுவர்.

**மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்**
**இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்**
**கந்துாக் காலாங்கி கஞ்ச மலையனோடு**
**இந்த எழுவரும் என்வழி யாமே -69**

திருமூலரும் வழிவரும் எழுவர்.

| | | |
|---|---|---|
| 1. மாலாங்கன் | - | மாலங்க சித்தர் |
| 2. இந்திரன் | - | இந்திர சித்தர் |
| 3. சோமன் | - | சோமசித்தர் |

4. பிரமன் - பிரம சித்தர்
5. உருத்திரன் - உருத்திரசித்தர்
6. கந்துருக் காலாங்கி - காலாங்கி சித்தர்
7. கஞ்சமலையான் - கஞ்சமலைச் சித்தர்

இவர்களில் சிலருக்குத் தேவர் என்றும் பெயர். இவர்கள் எழுவரில் இன்று பலராலும் அறியப் பெறுவோர் காலாங்கியும் கஞ்சமலைச் சித்தரும் ஆவர். கஞ்சமலை சேலத்துக்கு அருகே உள்ளது. இரும்புத்தாது நிறைந்த இடம். இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஏற்பட்ட இடம்.

**திருமூலர் தென்னாடு போந்தது**

வடக்கே இமயம்
தெற்கே பொதியம்
இவ்விரண்டும் பண்டைக் காலந்தொட்டே
புகழ்பெற்றவை.

“பொற் கோட்டு இமயமும் பொதியமும்” என்பது புறநானூறு (2). வடக்கே இமயமால் வரையில் கயிலைமால் வரையில் சிவபெருமான் - தெற்கே பொதியமால் வரையில் அகத்தியர்.

சிவபெருமானுக்கு அடுத்த படியான சிறப்பு நந்தியம் பெருமானுக்கு உள்ளது போன்றே குறுமுனியாகிய அகத்தியருக்கும் உண்டு.

அகத்தியர் சிரஞ்சீவி, அன்றும் உள்ளவர், இன்றும் உள்ளவர், என்றும் உள்ளவர். என்றுமுள தென்றமிழ் போன்று என்று முள்ளவர் அகத்தியர்.

அகத்தியரைக் கண்டு அளவளாவி அவரோடு சில நாள் உறைய விரும்பிக் கயிலையிலிருந்து பொதிய மலைக்குப் புறப்படுகிறார் திருமூலர்.

“நந்தி திருவருள் பெற்ற நான்மறை யோகிகள் ஒருவர்..........திருக்கயிலை மலை நின்றும் குறுமுனியால் உற்றதொரு கேண்மையினால் உடன் சில நாள் உறைவதற்கு நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக்கொண்டார்” என்று திருமூலரின் பொதியமலைப் பயணத்தைச் சேக்கிழார்கூறுகிறார்.

பொதியம் நோக்கிப் புறப்பட்ட திருமூலர் வழியில்

**திருக்கேதாரம் வழிபட்டு**
**பசுபதி நேபாளத்தைப் பணிந்து**
**கங்கையாடி**
**காசியைப் பணிந்தேத்தி**
**திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) இறைஞ்சி**
**திருக்காளத்தியை வணங்கி**

**திருவாலங்காட்டைத் தொழுது**
**ஏகாம்பரம் (காஞ்சி) பணிந்து**

காஞ்சி நகரில் சில காலம் வைகினார். அங்கிருந்த யோக முனிவர்களுடன் அளவளாவிப் பின்னர்

திருவதிகையை இறைஞ்சி
பெரும்பற்றப்புலியூராம் தில்லையை (சிதம்பரத்தை) வந்தடைந்தார்.

**தில்லையில் திருநடனங்கண்டது**

தில்லை வந்தடைந்த திருமூலர் அங்கேயே சிலகாலம் தங்கித் திருச்சிற்றம்பலத்துள் திருநடனங் கண்டு இன்புற்றார். கயிலை மலைச் சித்தர்களுள் சிலர் பலர் தில்லைக்கு வந்து திருநடனங் கண்டவர்களே. அவர்களுள் முக்கியமானோர் பதஞ்சலியும் வியாக்கிரபாதரும். இவ்விருவரும் திருமூலரது ஒரு சாலை மாணாக்கர்கள். பதஞ்சலி தில்லையில் திருநடனங் கண்டவரென்பதைத் திருமூலர் மன்றுதொழுத பதஞ்சலி என்று குறிப்பிடுகிறார். பதஞ்சலியையும் வியாக்கிர பாதரையும் போன்றே திருமூலரும் தில்லையில் திருநடனங்கண்டவர்.

**"தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்**
**ஒப்பில் எழுகோடியுகம் இருந்தேனே"** -74

என்பது திருமந்திரம். திருமூலர் கண்ட திருக்கூத்தின் திறம் திருமந்திரத்தில் திருக்கூத்துத் தரிசனம் என்ற தலைப்பில் ஒன்பதாந் தந்திரத்தில் 2722 முதல் 2803 முடிய உள்ள 82 பாடல்களில் கூறப்பெறுகிறது.

**திருவாவடுதுறையை வழிபட்டது**

தில்லையில் தங்கி வழிபட்டுத் திருநடனங்கண்ட திருமூலர் திருவாவடுதுறைக்குச் செல்லுவதற்குகாகப் புறப்பட்டு வழியில் காவிரிக்கரையை அடைந்தார். காவிரிக்கரையை அடைந்ததைச் சேக்கிழார் "கடல்வயிறு நிறையாத காவிரியின் கரை அணைந்தார்" என்று பாடுகின்றார் (3576) அன்றைய காவிரி கடல் வயிறு நிறையாத காவிரி. இன்று காவிரி நீர் கடலை எட்டவே இல்லை. காவிரி நீர்ப்பங்கீட்டில் கர்நாடக மாநிலத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் தகராறு. சங்க இலக்கியக் காவிரியையும் சிலப்பதிகாரக் காவிரியையும் படித்து விட்டு இன்று கண்ணெதிரே காவிரியின் காட்சியைக் காணும்போது கண்கள் கலங்குகின்றன.

திருமூலர் "காவிரி நீர்ப் பெருந்தீர்த்தம் கலந்தாடி"னார். காவிரியைக் கடந்து கரை ஏறி ஆவடுதுறையை அடைந்தார். சிலகாலம் திருவாவடுதுறையில் தங்கி வழிபட்டார்.

# கூடுவிட்டுக் கூடுபாய்ந்தது

திருவாவடுதுறையை நீங்கிப் பொதியத்தை நோக்கிப் புறப்பட்டார். புறப்படும் போது அவ்விடத்தை விட்டு நீங்கவேண்டாம் என்ற எண்ணம் முளைத்து எழுந்தது. அக்குறிப்பினால் தடைபடாது புறப்பட்டார். அருகிலுள்ள சாத்தனூரில் காவிரிக் கரைப்படுகையில் பசுக்கூட்டமொன்று வருந்திப் புலம்புவதைக் கண்டார்.

சாத்தனூர் அந்தணர் தம் அழகிய ஊர். அவ்வூரில் ஆமேய்ப்பார் குடியில் தோன்றியவன் மூலன் என்னும் பெயருடைய இடையன். அவன் காவிரிக்கரைப் படுகரில் பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்தபோது வினை வந்து சூழ உயிரிழந்து நிலத்தில் வீழ்ந்தான். இறந்து கிடந்த இடையன் மூலனின் உடம்பை அங்கே மேய்ந்து கொண்டிருந்த பசுக்கள் வந்து சூழ்ந்து மோந்து பார்த்துக் கதறின. இக்காட்சியைக் கண்ட திருமூலர் இறைவன் அருளாலே அப்பசுக்களின் துயரத்தை நீக்கவேண்டும் என்று எண்ணினார். இறந்தவர் உயிர் பெற்று எழுந்தாலன்றி ஆக்கள் இடர்நீங்கா என்று உணர்ந்தார். தாம் பெற்றுள்ள கூடுவிட்டுக் கூடுபாயும் பரகாயப் பிரவேச சித்தியால், மூலன் உடலில் தம் உயிரை அடைவிக்க எண்ணி, தம் உடம்புக்கு அரண் செய்து, அவனுடைய உடலில் தம்முடைய உயிரைப் பாய்த்தினார் (பாய்ச்சினார்) பாய்த்தியபின் மூலன் உடம்பில் திருமூலராய் எழுந்தார். பசுக்களெல்லாம் மகிழ்நுத் நாத்தழும்ப நக்கி, மோந்து, கனைத்து, களிப்பினால் வாலெடுத்துத்துள்ளி, துயர்நீங்கியவாய், போய் மேயத் தொடங்கின.

பசு மந்தை மகிழ்வுறக் கண்ட திருமூலர் அவை மேயுமிடம்தோறும் பின் சென்று, அவை மேய்ந்தபின் காவிரித்துறையில் நீர் அருந்தி நிழலுக்கு வரும் வரை இனிதாகப் புறங்காத்தார். மாலை வந்துற்றதும் பசுக்கள் கன்றுகளை நினைந்து சாத்தனூர் நோக்கித் திரும்பின. திருமூலரும் அவற்றின் பின் சென்றார். சென்றவர், பசுக்களெல்லாம் மனைதோறும் புகத் தாம் வெளியே நின்றார்.

தன்வீட்டு வாயிலில் நிற்பதைக் கண்ட இடையன் மூலனின் மனைவி பொழுது போனபின் காலந்தாழ்த்து மீண்டார் என்று பயத்துடன் அவர் அருகே சென்று அவர் நின்ற நிலையைக் கண்டு அவர்க்கு ஏதோ தீங்கு நேர்ந்துள்ளது என்று எண்ணி அவரைத் தொடப்போக, தம்மைத் தொடுதற்குத் திருமூலர் இசையவில்லை.

பிள்ளைகளும் உறவினர்களும் இல்லாத அவள் மனமயங்கி நிலைதளர்ந்து என்செய்தீர்? உங்களுக்கு என்ன நேர்ந்தது? என்று கேட்டாள். அதற்குத் திருமூலர் இங்கு உனக்கு என்னோடு ஒரு தொடர்பும் இல்லை என்று மறுதலித்துக்கூறி அப்பால் சென்று அங்கிருந்த ஒரு பொது மடத்தினுள் புகுந்தார்.

மூலன் மனைவி, தன் கணவன் இயல்பு வேறானமைகண்டு இரவெல்லாம் அவரோடு பேசாமலும் அவரை நெருங்காமலும் உறங்காமலும் இருந்த பொழுது விடிந்தபின் இதனைப் பலரிடத்தும் முறையிட்டாள். இவற்றையெல்லாம் கண்ட அங்கிருந்த நல்லோர்கள், இது பித்தன்று, வேறெதுவும் அன்று, இவர் சிவயோகத்தில்

இருக்கிறார், இதன் பெருமை யாராலும் அளப்பதற்கு அரியது, இவர் முற்றும் உணர்ந்த முனிவராகி விட்டார், முன்போல் உங்கள் இல்லற வாழ்வின் இயல்புக்கு எய்தார் என்று கூறி அவளைத் தேற்றி அவ்விடம் விட்டு அழைத்துச் சென்றனர்.

இந்நிலையில் திருமூலர் அங்கிருந்து எழுந்திருந்து பசுக்கள் வந்த வழியே சென்று, தாம் காப்பில் வைத்திருந்த தம் உடலைத் தேடியபோது அது காணாமற் போயிருப்பதைக் கண்டார்.

கூடுவிட்டுக் கூடுபாயும் பரகாயப் பிரவேச சித்தியைப் பெற்றிருந்த திருமூலர் பசுக்களின்மீது கொண்ட பரிவால், இடையன் மூலனின் சிறந்த உடம்பில் தம் உயிரைப் புகுத்தினார். பசுக்களின் அப்போதிய துயரம் தீர்ந்தன. இப்போது திருமூலரின் சொந்த உடம்பு காணாமற் போய்விட்டது. அகப்படவில்லை. இடையன் மூலன் உடம்பிலேயே இருக்கவேண்டிய இன்றியமையாமை(கட்டாயம்) ஏற்பட்டுவிட்டது. இடையன் உடலிலேயே சித்தர் இருந்துவிட்டார். அவனது பெயரே சித்தருக்கும் பெயராயிற்று. உயிர் சித்தருடையது. உடம்பும் பேரும் மூலனுடையவை சித்தர் உயிரும் மூலன் உடம்பும் சேர்ந்து திருமூலராயின.

**மீண்டும் திருவாவடுதுறையை அடைந்தது**

மூலன் உடலிலேயே தாம் இருக்க வேண்டியதையும், முன்னர் திருவாவடுதுறையை விட்டு அகலும்போதே “அந்நிலைமைத் தானத்தை அகலாதொரு கருத்து முன்னி எழுந்த குறிப்பை” யும் கருதித் திருவாவடுதுறையிலேயே இருந்துவிட எண்ணினார். சாத்தனூரினின்றும் தம்மைத் தொடர்ந்து வந்த இடைக் குலத்தார்க்கு ஆறுதல் கூறி அனுப்பி அவர்கள் தம்மூர்க்கு மீண்டபின் திருவாவடுதுறைக் கோயிலை அடைந்தார்.

## அரசடியில் தவம் - யோகம்

## திருமூலரும் ஒரு போதி மாதவர்.

மீண்டும் திருவாவடுதுறைக்கு வந்துசேர்ந்த திருமூலர் திருவாவடுதுறைக் கோயிலில் உள்ள அரசமரத்தின் அடியில் அமர்ந்து பன்னெடுங்காலம் யோகிருந்தார்.

**நேரிழை யாவாள் நிரதிச யானந்தப்**
**பேருடை யாள்என் பிறப்பறுத் தாண்டவள்**
**சீருடை யாள் சிவன்ஆவடு தண்துறை**
**சீருடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே** -78
**சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனை**
**சேர்ந்திருந் தேன்சிவ ன்ஆவடு தண்துறை**
**சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்**
**சேர்ந்திருந் தேன்சிவ நாமங்கள் ஓதியே** -79

**ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு**
**ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்**
**ஞானப்பா லாட்டி நாதனை அர்ச்சித்து**
**நானும் இருந்தேன்நற் போதியின் கீழே -82**

என்னும் திருமந்திரங்கள் திருவாவடுதுறையில் அரச மரத்தின் அடியில் யோகத்திலிருந்ததற்கு அகச்சான்றுகளாம்.

**ஆவடுதண் துறை அணைந்து அங்(கு)**
**அரும்பொருளை உற வணங்கி**
**மேவுவார் புறக் குடபால்**
**மிக் குயர்ந்த அரசின் கீழ்த்**
**தேவிருக்கை அமர்ந்தருளிச்**
**சிவயோகந் தலை நின்று**
**பூ வலரும் இதயத்துப்**
**பொருளோடும் புணர்ந்திருந்தார் -3593**

என்பது பெரியபுராணம்.

புத்தரும் திருமூலரும் அரசமரத்தின் கீழ் தவமிருந்தவர்கள் அரசமரம் மரங்களுக்கெல்லாம் அரசு (king of Trees). அதனால் அரசமரம் என்று பெயர் பெற்றது. மரங்களில் நான் அரசமரமாக இருக்கிறேன் என்று கண்ணபிரான் கீதையில் கூறுகின்றார்.

மரங்களில் அரசு, வேம்பு, ஆல் இம்மூன்றும் சிறந்தவை

**அரசு ஆண்தன்மை உடையது**
**வேம்பு பெண்தன்மை உடையது**
**ஆல் இருதன்மையும் உடையது**
**அரசு சிவத்துக்கு உரியது**
**வேம்பு சக்திக்கு உரியது**
**ஆல் சிவம், விஷ்ணு இரண்டிற்கும் உரியது**

அரசடியில் தான் பகவான் புத்தர் ஞானம் பெற்றார். அரசுக்குப் போதி என்றொரு பெயர். போதம் என்றால் ஞானம். போதி மரம் என்றால் ஞானமரம். புத்தர் போதி மரத்தடியில் தவமிருந்து ஞானம் பெற்றதால் “போதி மாதவர்” எனப் பெயர் பெற்றார். போதி சத்துவர் எனப் பெயர் பெற்றார். பௌத்தர்கள் போதி விருட்சத்தை மிகவும் சிறப்பாகப் போற்றுவர். பௌத்த சங்கத்தை மகாபோதி சங்கம் என்றே வழங்குவர். ஆங்கிலத்திலும் மகா போதி சொசைட்டி என்பர். புத்த கயையிலிருந்த போதி மரத்தின் கிளையொன்று இலங்கைக்குக் கொண்டு செல்லப்பெற்று இலங்கையில் பௌத்தம் பரவக் காரணமாயிற்று. புத்தர் அரசமரத்தடியில் தவஞ்செய்தார், ஞானம் பெற்றார், புத்தர் போதி மாதவர் என்பது உலகம் நன்கறிந்தது.

திருமூலரும் அரசடியில் தவஞ்செய்தார், ஞானம் பெற்றார், திருமந்திரத்தை இயற்றினார், திருமூலரும் ஒரு போதிமாதவர் என்பதை அந்த அளவுக்கு உலகம் அறியாது.

**“சேர்ந்திருந்தேன் சிவ போதியின் நீழலில்”**
**“நானும் இருந்தேன்நற் போதியின் கீழே”**

என்று திருமூலரே கூறுகின்றார் (திருமந்திரம் 79;82) போதியைச் சிவபோதி என்கிறார்.

திருவாவடுதுறையின் தலமரம் அரசு. படர் அரசு அருகிலுள்ள மண்டபத்தின் மேலும் மதிளின் மேலும் அரசமரக் கிளைகள் படர்ந்திருப்பதை இன்றும் காணலாம். கிளைகள் விரிந்து படர்ந்திருப்பதால் படர் அரசு என்று பெயர் பெற்றது.

திருவாவடுதுறைக்கு அரசு வனம் என்று ஒரு பெயர். ஆவடுதுறைக் கோயிலின் அம்பலம் அரசம்பலம், போதி அம்பலம்.

அரச வனமாகிய திருவாவடுதுறையில் அரசம்பலமாகிய திருக்கோயிலில் படரரசாகிய சிவபோதியின் நீழலில், சிவபோதியின்கீழே யோகிருந்த திருமூலரும் ஒரு போதிமாதவர்.

## திருமந்திரம் அருளாலும் திருக்கயிலை சேர்தலும்

திருமூலர் திருமந்திர நூலை அருளியதையும் அதன்பின் திருக்கயிலைக்குச் சென்று சேர்ந்ததையும் பெரியபுராணம் பின்வருமாறு இரண்டு செய்யுள்களாற் கூறுகிறது.

**ஊன் உடம்பில் பிறவிவிடம்**
**தீர்ந்து உலகத்தோர் உய்ய**
**ஞானம் முதல் நான்கும் அலர்**
**நல் திருமந்திர மாலை**
**பான்மை முறை ஓராண்டுக்கு**
**ஒன்றாகப் பரம்பொருளாம்**
**ஏன எயிறு அணிந்தாரை**
**“ஒன்ற வன்தான்” என எடுத்து -3594**

**முன்னிய அப் பொருள் மாலை**
**தமிழ் மூவாயிரம் சாத்தி**
**மன்னிய மூவாயிரத் தாண்டு**
**இப் புவிமேல் மகிழ்ந்திருந்து**
**சென்னி மதி அணிந்தார்தம்**
**திரு அருளால் திருக்கயிலை**
**தன்னில் அணைந்து ஒருகாலும்**
**பிரியாமைத் தாள் அடைந்தார் -3595**

ஆண்டுக்கு ஒரு பாடலாகத் திருமந்திரம் மூவாயிரம் பாடலையும் பாடினாரென்றும், மூவாயிரம் ஆண்டுகள் இப்புவிமேல் மகிழ்ந்திருந்து அதன்மேல் சிவபெருமான் திருவருளால் திருக்கயிலையை அடைந்து எக்காலமும் சிவபெருமானை விட்டுப் பிரியாத நிலையை அடைந்தார் என்று பெரியபுராணம் கூறுகிறது.

## திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் இருந்தாரா?

"மூவாயிரத்தாண்டு இப்புவிமேல் மகிழ்ந்திருந்து" எனச் சேக்கிழார் கூறுகிறார். திருமந்திரம் மூவாயிரம் ஆண்டைக் குறிப்பிடவில்லை. ஏழு கோடி யுகங்கள் இருந்ததாகவும், எண்ணற்ற கோடி யுகங்கள் இருந்ததாகவும், ஒன்பது கோடி யுகங்கள் இருந்ததாகவும் கூறுகிறது.

**செப்பும் சிவாகமம் என்னும்அப் பேர்பெற்றும்**
**அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்**
**தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்**
**ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே -74**

**இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி**
**இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே**
**இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே**
**இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே -80**

**ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு**
**ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்**
**ஞானப்பா லாட்டி நாதனை அர்ச்சித்து**
**நானும் இருந்தேன்நற் போதியின் கீழே -82**

'ஏழுகோடியுகம்' 'எண்ணிலிகோடி' 'ஒன்பது கோடியும்' என்று கோடிக்கணக்கில் கூறுவதால் திருமூலரின் வாழ்நாளை இத்தனை ஆண்டுகள் என நிச்சயிக்க இயலவில்லை. அவர் சித்தராதலின் பன்னெடுங் காலம் இருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. திருமூலர் திருமந்திரத்தை இயற்றியருளிய காலம் (அவரது வாழ்வின் நிறைவானகாலம்) கி.பி.ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதி என்று ஆய்வாளர் பலரும் கொள்கின்றனர். இதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு

முன்பே திருமூலர் கயிலையினின்றும் தென்னாட்டுக்கு வந்திருக்கலாம். திருவாவடுதுறையில் நெடுங்காலம் இருந்திருக்கலாம். தென்னாட்டுக்கு வருவதற்கு முன் கயிலையில் அவர் இருந்தகாலம் எவ்வளவோ? திருமூலரைப் போன்ற சித்தர்களின் ஆயுள் இவ்வளவெனக் கணித்தறிதல் இயலாத ஒன்றாகும். திருமந்திரத்தின் பாடல்தொகை மூவாயிரம் ஆதலாலும், ஆண்டுக்கு ஒரு பாடலாகப் பாடினார் என்பதாலும் மூவாயிரம் ஆண்டுகள் அவர் இருந்தார் எனச் சேக்கிழார் கூறினார் போலும்.

## ஆண்டுக்கொரு பாடலாகப் பாடினாரா?

'ஓராண்டுக்கு ஒன்றாக' எனச் சேக்கிழாரும் 'ஆண்டுக்கொரு பாடலாக' எனச் சேக்கிழாரை அடியொற்றியே உமாபதி சிவமும் கூறுகின்றனர். இவர்கள் இவ்வாறு கூறுவதை உபசார வழக்காக எடுத்துக் கொள்ளவேண்டும் தவிர உண்மை வழக்காக ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

திருமந்திரத்தின் பல பகுதிகள் கருத்தாலும் நடையாலும் தொடர்ந்து வரும் அமைப்பில் உள்ளன. சிலபல பாடல்கள் எளிமையாக உள்ளன. மிக எளிமையாகவும் சிலபல உள்ளன. மிகக் கடுமையாகப் பரிபாடையால் அமைந்துள்ள பாடல்களும் சிலபல. அவை நமக்குத்தான் அறிதற்குக் கடுமையானவையேயன்றி, திருமூலருக்குப் பாடுவதற்குக் கடுமையானவை யன்று. ஒவ்வொரு பாடலையும் ஓராண்டு சிந்தனைக்குப் பின் பாடினார், ஆண்டுக்கு ஒரு பாவாகப் பாடினார் என்பது பொருத்தமாக இல்லை. சில பகுதிகளைத் தொடர்ந்தும், சிலபகுதிகளை இடையிடையே சிலகாலம் விட்டு விட்டும் பாடியிருக்கலாம். திருமந்திரத்தைச் செய்து முடிக்கக் சில ஆண்டுகள் ஆகியிருக்கலாம். அல்லது பல ஆண்டுகள் ஆகி இருக்கலாம். ஒரே மூச்சில் பாடி முடிக்க வேண்டும் என்பதில்லை. ஆண்டுக்கு ஒரு பாடலாகப் பாடவேண்டும் என்பதும் இல்லை. எல்லாம் திருவருள் வண்ணம். மிக்குச் சோதிப்பதில் பயனில்லை. அது (சில சமயங்களில் சில இடங்களில்) வேண்டாத வேலையுங்கூட. ஈண்டும் அவ்வாறே.

## திருமந்திரப் பாடல்தொகை

திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்டதென்று திருமந்திரச் செய்யுள்கள் நான்கும் (99;100;101;3046). பெரியபுராணமும் கூறுகின்றன. பெரிய புராணம் கூறுவதை முன்பு எடுத்துக்காட்டினோம். திருமந்திரம் மூவாயிரம் என்று கூறும் திருமந்திரச் செய்யுள்கள் பின்வருமாறு:

**மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்**
**ஞாலம் அறியவே நந்தி அருளது**
**காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்**
**ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே** -99

**வைத்த பரிசே வகைவகை நன்னூலின்**
**முத்தி முடிவிது மூவா யிரத்திலே**
**புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது**

**வைத்த சிறப்புத் தருமிவை தானே -100**

இவ்விருமந்திரங்களும் “திருமந்திரத் தொகைச்சிறப்பு” என்ற தலைப்பில் உள்ளன.

**வந்த மடமேழு மன்னுஞ்சன் மார்க்கத்தின்**
**முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை**
**தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்**
**சுந்தர ஆகமச் சொல்மொழிந் தானே -101**

இம்மந்திரம் ‘குருமட வரலாறு’ என்ற தலைப்பிலுள்ள இரண்டு மந்திரங்களுள் முதலாவது.

**மூல னுரைசெய்த மூவா யிரந்தமிழ்**
**மூல னுரைசெய்த முந்நூறு மந்திரம்**
**மூல னுரைசெய்த முப்ப துபதேசம்**
**மூல னுரைசெய்த மூன்றும் ஒன்றாமே -3046**

என்னும் இம்மந்திரம் திருமந்திரத்தின் ஈற்றில் ஈற்றயற் செய்யுளாக (கடைசிப்பாடலுக்கு முன்பாடலாக) உள்ளது. இதனை அடுத்து வாழ்த்துப் பாடலுடன் திருமந்திரநூல் முற்றுப்பெறுகிறது.

மூவாயிரம் மூவாயிரம் என்று ஒன்றுக்கு ஐந்தாக, ஐந்துமுறை, ஐந்து இடங்களில், கூறப்பெறுவதால் திருமந்திரத்தின் பாடல் தொகை 3000(மூவாயிரம்) என்பது உண்மையும் உறுதியும் ஆகிறது. திருமந்திரம் மூவாயிரமே. அதற்குமேலில்லை.

இப்போது வழங்கும் திருமந்திரப் பதிப்புகளில் மூவாயிரத்திற்கும் மிகுதியான (அதிகமான) பாடல்கள் காணப்படுகின்றன.

சமாஜப் பதிப்பில் ‘ஒன்றவன் தானே’ என்ற பாடல் தொடங்கி ‘வாழ்கவே வாழ்க’ என்ற பாடல் முடிய நூல் 3047 (மூவாயிரத்து நாற்பத்தேழு) பாடல். ‘இந்தின் இளம்பிறை’ என்னும் விநாயகர் காப்பு எண்ணிடப் பெறவில்லை. கணக்கிற் சேரவில்லை, நூலிற் சேரவில்லை, நூலின் முன்னர் வைக்கப்பெற்றுள்ளது. நூலிறுதியில் ‘பிற நூல்களிலும் உரைகளிலும் (அதிகமாகப்) காணப்படும் திருமந்திரம் செய்யுள்கள்’ என்று 11 (பதினோரு) பாடல்கள் தனியே சேர்க்கப்பெற்றுள்ளன.

திருப்பனந்தாள் காசிமடத்தின் (ஸ்ரீவைகுண்டம்) பதிப்பில், சமாஜப் பதிப்பைப் போன்றே நூல் 3047 (மூவாயிரத்து நாற்பத்தேழு) பாடல்கள். நூல் இறுதியில் அதிகப் பாடல்கள் என்று, உரைநூல்களில் காணப்பட்ட பாடல்கள் 47, எட்டுப் பிரதியில் காணப்பட்ட பாடல்கள் 14 சேர்த்து, அவற்றிற்கும் நூலைத் தொடர்ந்து தொடர் எண்ணிட்டு, திருமந்திரம் முற்றிற்று, ஆகச்செய்யுள் 3108 என்று முடித்துக் காட்டப்பெற்றுள்ளது.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பில் 3000 பாடல்கள் நூலாகவும் நூல் முதலில் சிறப்புப் பாயிரம் ஏழு பாடல்கள், நூல் இறுதியில் வாழ்த்து ஒரு பாடல் ஆக எட்டுப் பாடல்களும் உள்ளன.

திருமந்திரத்தில் ஒரே பாடல் இரண்டு முறை மூன்று முறை வெவ்வேறிடங்களில் வருகின்றன. அவற்றுள் சில சொற்கள் மட்டும் மாற்றம் பெற்று வருவன. அடிகள் முன் பின் மாறி வருவன சில.

**இடைச்செருகல்**

திருமந்திரம் மூவாயிரம் என்பது முடிந்த முடிபாதலின் மூவாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்கள் அதிகப்படியான 108 பாடல்கள் இடைச் செருகல் ஆகும். அவை எவை என்பதில் தான் சிக்கல். ஆய்வாளர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாகக் கூறுகின்றனர்.

டாக்டர் சுப.அண்ணாமலை அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு அண்மையில் 1997-இல் வெளிவந்துள்ள திருமந்திரம் மூலபாட ஆய்வுப்பதிப்பில் 2998 பாடல்களே உள்ளன. 49பாடல்களை இரண்டு முறை வந்தனவாகி விலக்கி 3047-49=2998 பாடல்களே நூலில்கொடுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள்ளும் 440 பாடல்கள் இடைச்செருகலாகலாம் என இனங்காட்டித் திருமூலர் வாக்காக 2558 பாடல்களே கொள்ளப் பெறுகின்றன என்ற ஒரு குறிப்பையும் முன்னுரையிற் கொடுக்கிறார்.

**பாடபேதம்**

திருமந்திரத்தில் இடைச் செருகல் ஒரு பெருஞ் சிக்கல் என்றால், பாடபேதம் அதைவிடப் பெருஞ் சிக்கல். சைவ சித்தாந்த மகாசமாஜப் பதிப்பில் ஏறத்தாழ பதினாயிரம் (10,000) பாட பேதங்கள் நூல் முழுவதிலும் பக்கத்திற்குப் பக்கம் அடிக்குறிப்பில் காட்டப் பெற்றுள்ளன.

**திருமந்திரம் மூவாயிரமா? எண்ணாயிரமா?**

திருமந்திரம் எண்ணாயிரம் (8000) என்றொரு வழக்கும் உள்ளது. ஆயிரம் அது சிறுபான்மை வழக்கே. வள்ளலாரின் உபதேசக் குறிப்பொன்றில் திருமந்திரம் மொத்தம் எண்ணாயிரம் என்று கூறப்பெற்றுள்ளது.

திருமூலர் பெயரைப் பின்னாளில் சிலர் ஆர்வமிகுதியால் வைத்துக் கொண்டனர். திருமூலர் பெயரால் வேறுசில பலவாதநூல்களும் வைத்திய நூல்களும் தோன்றலாயின. அவையும் திருமூலர் செய்ததே, திருமந்திரத்தைச் சேர்ந்ததே என்று எண்ணும் வழக்கம் அக்காலத்திலிருந்து. அதைக்கொண்டே வள்ளற்பெருமான் திருமந்திரம் மொத்தம் எண்ணாயிரம் என்று கூறினராதல் வேண்டும். அவ்வாறு கூறியதைக் கால வழக்காகவே கொள்ள வேண்டும்.வள்ளற்பெருமான் இதனைக் கூறுகின்ற காலத்தில் திருமந்திரம் அச்சு வடிவம் பெறவில்லை. ஏட்டுச் சுவடிகளாகவே இருந்தது. திருமூலர் பேரால் வழங்கிய வாத வைத்திய ஏடுகளையும் திருமந்திரத்தோடு சேர்த்து எண்ணப்பட்ட

காலம் அக்காலம். ஆதலின் வள்ளற்பெருமான் கூறியதைக் கால வழக்காவே கொள்ளவேண்டும்.

திருமந்திரம் அச்சுக்கு வந்து, பதிப்புகளும் ஆய்வுகளும் பெருகிவிட்ட இந்நாளில், வள்ளலார் கூறியதை உபசாரவழக்காகக் கொள்ள வேண்டுமே தவிர உண்மையாகக் கொள்ளலாகாது. அதனால் பெருமானுக்குக் குறையொன்றுமில்லை.

## திருமூலர் வேறு நூல்கள் செய்தாரா?

**மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்**
**மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்**
**மூலன் உரைசெய்த முப்ப துபதேசம்**
**மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே -3046**

என்ற திருமந்திர ஈற்றயற் செய்யுளைக் கொண்டு மூவாயிரந்தமிழ், முந்நூறு மந்திரம், முப்பது உபதேசம் ஆகிய மூன்றும் வெவ்வேறு மூன்று நூல்கள் எனக் கொள்வார் சிலர். 'மூன்றும் ஒன்றாமே' என்று திருமூலரே சொல்லிவிட்டதால் மூன்றும் வெவ்வேறு தனி நூல்களன்று, மூவாயிரந் தமிழாகிய திருமந்திரத்தில் முந்நூறு மந்திரமும், முப்பது உபதேசமும் அடங்கும் எனக் கொள்வார் பலர்.

திருமந்திரத்தில் பாயிரப் பகுதியை அடுத்து, முதல் தந்திரத்தின் தொடக்கத்தில் முதல் அதிகாரமாக "உபதேசம்" என்ற தலைப்பில் முப்பது பாடல்கள் உள்ளது. இம்முப்பதுமே "முப்பது உபதேசம்" என்பது பலரது கொள்கை. முப்பது உபதேசம் இதுவன்று, வேறு ஒரு தனி நூலாக இருக்கவேண்டும் என்பது சிலரது கொள்கை.

திருமூலர் அருளிய திருமந்திரமாலை முந்நூறு. உரையும் விளக்கமும் - என்றொரு நூல். பெருநூலாக, அண்ணாமலைப் - பல்கலைக் கழகப்பதிப்பாகச் சிதம்பரம் ந.சிவப்பிரகாச தேசிகரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1990 - உல் வெளிவந்தது. 'மூலன் உரை செய்த முந்நூறு மந்திரம்' இதுவே என்பது பதிப்பாசிரியர் தேசிகர் கருத்து. இதன் பாடல்களைப் பார்க்கும் போது அவை திருமூலர் வாக்காகத் தோன்றவில்லை. உயர்வான யோகஞான சித்திகலையே திருமூலர் திருமந்திரம் கூற, இந்நூலோ கீழான கர்மசித்திகளைக் கூறுகிறது. கூறும் பொருளும் நடையும் திருமூலருடையதாக இல்லை. திருக்குறள் செய்த திருவள்ளுவர் ஞானவெட்டியானையும் செய்தார் என்று சிலர் சொல்லுவது போல உள்ளது இது. திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் ஞானத்தாழிசை என்ற ஒன்றையும் பாடினார் என்று சிலர் சொல்லுவது போல உள்ளது இது.

திருவள்ளுவர் செய்தது திருக்குறள் ஒன்றே. அதேபோல் திருமூலர் செய்தது திருமந்திரம் ஒன்றே. வேறு நூல்கள் எதுவும் செய்யவில்லை. இதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை.

திருமூலர் திருமந்திரம் மூவாயிரத்தில், சிறப்பான முந்நூறு மந்திரம் முப்பது உபதேசமும் அடங்கியுள்ளன, மூன்றும் வேறு வேறு தனிநூல்களன்று, மூன்றும் ஒன்றே என்று கொள்வதுதான் திருமூலர் கருத்துக்கிசைந்தது.

## திருமூலர் பிராமணரா?

"திருமூலர் நந்தியின் அருள்பெற்றவர்; பிராமணச் சிவயோகி" என்று டாக்டர் மா.இராசமாணிக்கனார் எழுதுகிறார். இவரது ஆங்கில நூலிலும் "He was a Brahmin siva-yogin" என்றெழுதுகிறார். இவ்வாறு இவர் எழுதுவதற்கு ஆதாரம் என்னவென்று விளங்கவில்லை. சி.வி.நாராயண ஐயர் தமது ஆங்கிலநூலில் He was one of the Brahman Yogin என்று எழுதுகிறார். நாராயண ஐயரின் நூலிலிருந்து மிகப்பல செய்திகளை இராசமாணிக்கனார் மேற்கொண்டிருக்கிறார். நாராயண ஐயரின் பிரம்மயோகி என்று கொள்வதா? என்று சிந்திக்க வேண்டும். இராசமாணிக்கனார் பிராமணயோகி என்றே கொண்டிருக்கிறார். இருவரது ஆங்கில எழுத்திலும் ஓர் எழுத்து வேறுபடுகிறது நாராயண ஐயர் BRAHMAN என்கிறார். இராசமாணிக்கனார் BRAHMIN என்கிறார். தமிழில் பிராமண என்று தெளிவாக எழுதுகிறார். திருமூலர் பிரம்மயோகி என்பதா? பிராமணயோகி? என்பதா, என்பதை நன்கு சிந்திக்க வேண்டும். வேறு ஆய்வாளர்கள் யாரும் திருமூலரின் சாதியைப் பற்றிப் பேசியதாகத் தெரியவில்லை.

சுந்தரரும் நம்பிகளும் சேக்கிழாரும் திருமூலருக்குச் சாதி கூறவில்லை. சேக்கிழார் சாத்தனூர் ஆமேய்ப் போன் மூலனின் சாதியைக் குறிப்பிடுகிறாரே தவிர அவன் உடம்பில் தம் உயிரைப் பாய்ச்சிய கயிலை யோகியின் சாதியைக் குறிப்பிடவில்லை. இராசமாணிக்கனார் கூற்றும், அதற்கு ஆதாரம் போல் தோன்றும் நாராயண ஐயரின் கூற்றும் ஆய்வுக்குரியன.

சாத்தனூரை அந்தணர் தம் சாத்தனூர் என்று சேக்கிழார் கூறுகிறார். சிலர் கருதுவது போன்று யோகிகள் சாத்தனூரிற் பிறந்தவராயிருந்து கயிலைக்குச் சென்றிருந்தால் அவர் அந்தணராகக் கூட இருக்கலாம். "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" என்னும் திருக்குறளின் படி எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்ட அந்தணராக இருக்கலாம். திருமூலர் பசுக்களுக்கும் செந்தண்மை பூண்டவரன்றோ. நம்பியாண்டார் நம்பிகள் "மூலனாகிய அங்கணனே" என்கிறார். அங்கணன் என்பது இரக்க குணமுள்ளோரைக் குறிக்கும். சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி (லெக்சிகன்) "அங்கணன் - சிவன்" (தேவாரம் 989;4) அங்கணாளன் - கண்ணோட்ட முடையவன், அறனறிந்தொழுகு மங்கணாளனை (கலித் 144, 70) என்று கலித்தொகையும் எடுத்துக் காட்டுகிறது. "முருகன் எனும் அந்தணனே" என்று முருக நாயனாரையும் "நீலநக்கன் எனும் வேதியனே" என்று திருநீலக்கரையும் குறித்த நம்பிகள், திருமூலர் அந்தணராயின் "மூலனாகிய அந்தணனே" என்றன்றோ குறித்திருக்க வேண்டும். அவ்வாறன்றி "அங்கணனே" என்றும் குறித்திருப்பது திருமூலர் அந்தணராகார் என்று எண்ணச்செய்கிறது.

தமிழ்மொழி உணர்வும் தமிழர் என்ற இன உணர்வும் மிகுதியாகக் கொண்ட இராசமாணிக்கனார் “திருமூலர் பிராமணச் சிவயோகி” என்று கூறியிருப்பது வியப்பாக உள்ளது! இவ்வளவுதூரம் சிந்திக்க வைக்கிறது.

திருமூலர் அந்தணராக இருந்திருப்பார் என்றாலும். அவர் மகாகவி பாரதியாரைப் போலச் சீர்திருத்த அந்தணராகவே இருந்திருப்பார் எனலாம். பாரதியார் பாடல்கள் அந்தணர்களைப் பற்றிக் கூறப்பெறும் சீர்திருத்தக் கருத்துகளைப் போன்றே திருமந்திரத்திலும் அந்தணரைக் குறித்த சீர்திருத்தக் கருத்துகள் பல உள்ளதைக் காணலாம்.

## திருமூலரின் தனிச்சிறப்பு

திருமூலர் திருமுறை ஆசிரியர்களில் ஒருவராகவும், சைவ சித்தாந்தியாகவும், சித்தராகவும் விளங்குகிறார்.

திருமூலரை “நான்மறை யோகிகள் ஒருவர்” என்று சேக்கிழார் அறிமுகப் படுத்துகிறார்.

உமாபதிசிவம் “கயிலாயத்து ஒரு சித்தர்” என்று கூறுகிறார். யோகியாகவும் சித்தராகவும் இருக்கும் திருமூலர் சைவ சித்தாந்தியாகவும் இருக்கிறார். சித்தாந்தம், சைவ சித்தாந்தம் என்ற சொற்களை (பெயர்களை) திருமூலர் தான் முதன் முதலில் வழங்குகிறார்.

அவரது திருமந்திரம் தோத்திரங்களின் தொகுப்பான பன்னிரு திருமுறைகளில் சேர்கிறது.

பின்னாளில் தோன்றிய சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கிற்கும் முன்னோடியாகத் திகழ்கிறது. பின்னாளைய சித்தாந்த சாத்திரங்களிற் காணப்படும் தத்துவங்களையும், சித்தாந்தத்து நுண் பொருள்களையும் அனுபவங்களையும் இன்ன பிற பலவற்றையும் முதன் முதலில் தொகுத்தும் வகுத்தும் கூறுபவர் திருமூலரே, அவர் கூறியவற்றைப் பின்னாளைய சித்தாந்த சாத்திரங்கள் தனித்தனியே பல வகைகளில் விரித்துரைக்கின்றன. சித்தாந்தத்தை முதன் முதலில் தொகை வகை செய்தவர் திருமூலர். விரித்தவர் சித்தாந்த சாத்திர ஆசிரியர்கள். பின்னாளைய சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கிலும் சொல்லப் பெறாத நுண் பொருள்கள் பலவும் திருமூலர் திருமந்திரத்தில் காணப்பெறுகின்றன.

திருமூலர் கயிலையிலிருந்து வந்தவர். கயிலை பாரத நாட்டின் வடக்கு எல்லையிலும், காஷ்மீரம் வடமேற்கு எல்லையிலும் நேபாளம் வடகிழக்கு எல்லையிலும் அமைந்துள்ளன. காஷ்மீரத்தில் ஒரு தனி வகைச் சைவம் நிலவியிருந்தது. அதை காஷ்மீர சைவம் என்று இன்று வழங்குகிறோம். பழங்காலத்தில் காஷ்மீரம் சைவ நாடாக இருந்திருக்கிறது. இப்போதும் இந்து நாடே. நேபாளமும் சைவ நாடு. இன்றும் உலக நாடுகள் பலவற்றில் நேபாளம் ஒன்றே அதிகார பூர்வமான ஒரே ஒரு இந்துநாடு. அதன் முக்கியக்கோயில், தலைமைக் கோயில், பெருங்கோயில் பசுபதிநாதம் பஞ்சமுகலிங்க வழிபாட்டைக் கொண்டது. இன்றும் அதனைப் பூசிக்கும் சைவாசாரியார்கள் தென்னாட்டிலிருந்தே நியமிக்கப் பெறுகின்றனர். நேபாள மன்னருக்கு இராமேசுவரம் கோயில் கருவறையில் (மூலத்தானத்தில்) நுழைந்து வழிபாடு செய்யும் உரிமை கொடுக்கப் பெற்றிருக்கிறது. காஷ்மீரத்திலும் நேபாளத்திலும் அன்றும் இன்றும் மொழிகள் வேறு. ஆனால் சைவமே சமயமாக இருந்திருக்கிறது. இன்றும் இருக்கிறது. காஷ்மீர சைவம் என்று சொல்லும் போது நேபாள சைவம் என்று தனிப்படுத்திக் கூறா விட்டாலும் நேபாளத்தில் வழங்கும் சைவம் சில பல வகைகளில் தனித்தன்மை வாய்ந்ததே ஆகும். காஷ்மீர சைவமும் நேபாள சைவமும் இவ்வாறாயின் கயிலைச் சைவம் எவ்வாறிருந்திருக்கும்?

**தெற்கே தமிழ்நாட்டில் சித்தாந்த சைவம்**
**கர்நாடகத்தில் மத்திய இந்தியாவில் வீரசைவம்**
**வடமேற்கே காஷ்மீரத்தில் காஷ்மீர சைவம்**
**வடகிழக்கே நேபாளத்தில் நேபாள சைவம்**

வடக்கே கயிலாயத்தில் இத்தனைக்கும் பொதுவான ஒரு சைவம், அதைக் கயிலைச் சைவம் என வழங்கலாமோ?

அது சித்தாந்த சைவமும் சித்தர் சைவமும் கலந்ததாக இருக்கலாம். அதுவே திருமூலரின் சைவமாக இருக்கலாம்.

பாசுபத சைவம், காபாலிக சைவம், காளாமுக சைவம், மாவிரத சைவம், பைரவ சைவம் போன்ற பல்வேறு சைவங்கள் பாரதத்தின் பல பகுதிகளிலும் விளங்கியுள்ளனவே!

திருமூலர் எல்லா வகைச் சைவங்களையும் அறிந்தவர்.

சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் என நான்கு வகைச் சைவங்களைத் திருமூலர் கூறுகிறார். இந்நால்வகைச் சைவங்களைத் திருமூலர் ஒருவரைத் தவிர வேறு யாரும் கூறக்காணோம். திருமந்திரந்தவிர வேறு எந்த நூலும் சொல்லக் காணோம். இந்நால் வகைச் சைவமும் இன்று வழங்கவும் காணோம்.

சுத்தம், அசுத்தம், மார்க்கம், கடுஞ்சுத்தம் என்ற பிரிவே எப்படி இருக்கிறது? இன்றைய நம் சைவம் பெரும்பாலும் அசுத்தசைவமும் மார்க்க சைவமுமாக

இருக்கலாம். சுத்த சைவம் அரிதாக இருக்கலாம். கடுஞ்சுத்த சைவம் அரிதிலும் அரிது என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. சொல்லாமலேயே விளங்கும்.

மெய்கண்டாரும் சைவர் தான். சங்கரரும் சைவர் தான். சங்கரரின் சைவம் என்ன சைவம்? மெய்கண்டாரின் சைவம் சித்தாந்த சைவம். சங்கரரின் சைவம் வேதாந்த சைவமா? வேதாந்திக ளெல்லாம் சைவரே; வைணரவரல்லர். வேதாந்திகளை வைணவர் ஏலார்.

வேதாந்த சித்தாந்த சமரசம் பேசும் திருமூலர் என்ன சைவர்? "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை வகுத்த வித்தகச் சித்தர் கணமே" என்று சித்தர் கணத்தைப் பாடும் தாயுமானவர் என்ன சைவர்?

சித்தாந்திக்குச் சித்தாந்தியாய் சித்தருக்குச் சித்தராய் விளங்கி வேதாந்த சித்தாந்த சமரசம் பேசுதல் திருமூலரின் தனித்தன்மை, தனிச்சிறப்பு.

திருமூலரின் சமயம் சைவம்; வேதாந்த சித்தாந்த சமரசச் சைவம், சித்தாந்த சைவம், சித்தர் சைவம், சமரசச் சைவம்.

திருமூலரின் (தாய்) மொழி என்ன? திருமூலர் காலத்தில் கயிலையில் வழங்கிய மொழி என்ன?

வடக்கே வடமொழியும் (சமஸ்கிருதமும்) பிராகிருதமும் பாலியும் பெரும்பான்மையாக வழங்கின. தெற்கே நம் தமிழகத்தில் களப்பிரர் ஆட்சிக்காலம். வடமொழிக்கு இருந்த செல்வாக்கு, தமிழுக்கு இல்லை. சமண பௌத்த நூல்களே தமிழில் பலவாக இருந்தன. சைவ வைணவ நூல்கள் பெரும்பாலும் வடமொழியிலேயே இருந்தன.

திருமூலருடைய காலம் தமிழ்ச் சாத்திரம் பொங்கி மிகாமை வைத்த காலம். அதாவது தமிழில் ஞான நூல்கள் மிகுதியாக இல்லாதிருந்த காலம். ஞானநூல்கள் வடமொழியிலேயே அதிகமாக இருந்த காலம். அக்காலத்தில், தன்னை நன்றாகத் தமிழ் செய்வதற்கு இறைவன் திருமூலரைப் படைத்தான்.

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறே"**

என்கிறார் திருமூலர்.

வேதங்கள் வடமொழியில் இருந்தது போன்று ஆகமங்கள் அனைத்தும் வடமொழியிலேயே இருந்தன. தமிழில் ஒரு ஆகமமும் இல்லை. ஆகமந் தமிழ்ப்படுத்த வந்தார் திருமூலர். பின்னாளில் வேதம் தமிழ்செய்ய மாறன் வந்தார். அதற்கு முன்பே ஆகமந்தமிழ்ப் படுத்தத் திருமூலர் வந்துவிட்டார்.

கயிலைத் தமிழரான திருமூலருக்கு வடமொழியும் தெரியும். தமிழ் ஆரியம் ஆகிய இரண்டிலுமே அவர் பண்டிதர். ஆரியமும் தமிழும் உடனே சொல்லி (65) தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ்விரண்டும் (66) என்னும் அவரது வாக்குகளுக் கேற்பப் பண்டிதராவார் பதினெட்டுப் பாடையுங்கண்டவர், “பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்” என்று அவரே கூறுவது போன்று, பதினெட்டு மொழிகளிலும் அவர் பண்டிதர். கயிலை காஷ்மீரம் நேபாளம் முதலியவற்றிலும், வட இந்தியாவிலும், இந்திய நாடு முழுவதும், சிங்களம், சீனம் முதலிய நாடுகளிலும் வழங்கிய மொழிகளையும் அவர் அறிவார். அவற்றிலும் அவர் பண்டிதர். திருமூலர் பன்மொழிப் புலவர். பல்கலைக் குரிசில். யோகம், ஞானம், வாதம், வைத்தியம், சோதிடம், வான சாத்திரம் முதலிய பலகலைகளிலும் அவர் வல்லவர். சகலகலாவல்லவர். ஆயகலைகள் அறுபத்து8 நான்கும் அவருக்கு அத்துபடி. அதற்கு மேல் ஒரு கலையாகிய சாகாக் கலையிலும் அவர் வித்தகர். அட்டமா சித்தி வல்ல அவருக்கு ஏனையவை யெல்லாம் எம்மட்டு?

## திருமந்திர வரலாறு

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாம் திருமுறையாகத் திகழ்வது திருமூலரின் திருமந்திரம்.

| | | |
|---|---|---|
| திருஞானசம்பந்தர் தேவாரம் | - | 1-2-3(முதல் மூன்று) திருமுறைகள் |
| திருநாவுக்கரசர் தேவாரம் | - | 4-5-6 திருமுறைகள் |
| சுந்தரர் தேவாரம் | - | 7- ஆம் திருமுறை |
| மாணிக்கவாசகர் திருவாசகம் | - | 8-ஆம் திருமுறை திருக்கோவையாரும் இதிற்சேர்ந்தது |
| திருவிசைப்பா, திருப்பல்லாண்டு | - | 9-ஆம் திருமுறை |
| திருமூலர் திருமந்திரம் | - | 10 - ஆம் திருமுறை |

| | | |
|---|---|---|
| பதினோராந் திருமுறை | - | 11-ஆம் திருமுறை 12 அருளாளர்கள் பாடிய 40 (சிறு) நூல்கள் பிரபந்தங்கள். |
| பெரியபுராணம் (சேக்கிழார்) | - | 12-ஆம் திருமுறை |

முதல் 9 திருமுறைகள் இசைப் பாடல்கள்.

10;11;12 ஆம் திருமுறைகள் இயல்.

| | | |
|---|---|---|
| மூவர் தேவாரம் முதல் 7திருமுறைகள் | - | தமிழ் வேதம் |
| மாணிக்கவாசகர் திருவாசகம் 8ஆம் திருமுறை | - | தமிழ் உபநிடதம் |
| திருமூலர் திருமந்திரம் 10-ஆம் திருமுறை | - | தமிழ் ஆகமம் |
| சேக்கிழாரின் - 12 ஆம் திருமுறை பெரியபுராணம் | - | தமிழ்ப்புராணம் |

திருமந்திரம் என்ற பெயரே அருமையான பெயர்.

மந்திரம் என்பது என்ன? என்று விளக்கமளிக்கிறார் தொல்காப்பியர்.

**“நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம்என்ப”**

என்பது தொல்காப்பியம்.

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்**

என்பது திருக்குறள்.

மந்திரம் என்பது நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த (கூறிய) மறைமொழி என்கிறார் தொல்காப்பியர்.

உலகில் நிறைமொழி மாந்தருடைய பெருமையை அவர்கள் உரைத்த மறை மொழிகளே காட்டி விடும் என்கிறார் திருவள்ளுவர்.

தொல்காப்பியர் கூறுவதும் திருவள்ளுவர் கூறுவதும் ஒன்றை ஒன்று அப்படியே படி செய்தாற் போல உள்ளன.

நிறைமொழி மாந்தர் என்று இருவருமே கூறுகிறார்கள். நிறைமொழி, மறைமொழி என்பவற்றை இருவருமே கூறுகிறார்கள்.

நிறைமொழி எது? நிறைமொழி மாந்தர் யார்? மறைமொழி எது? சொன்னது சொன்னபடியே பலிக்கும் மொழி நிறைமொழி. அப்படிப்பட்ட நிறைமொழிகளைக் கூறவல்ல ஆற்றலுடையார் நிறைமொழி மாந்தர். வாக்குப் பலிதமுள்ளோர் நிறைமொழி மாந்தர். மறைத்துக் கூறப்பட்ட மொழி மறைமொழி. நிறைவான மொழி நிறைமொழி. மறைவான பொருள் கொண்டமொழி மறைமொழி.

ஆணையிற் கிளத்தல் என்றால் என்ன? ஆணையிட்டுரைத்தல். திருவள்ளுவர், திருமூலர், திருஞானசம்பந்தர், திருவருட்பிரகாச வள்ளலார் போன்ற அறிவர்கள் (ஞானிகள்) நிறைமொழி மாந்தர்கள். இவர்கள் வெளிப் படையாகவும் மறை மொழியாகவும். பொதுவாகவும் ஆணையிட்டும் உரைத்தவை யெல்லாம் மந்திரத்தன்மை உடையன. ஞானசம்பந்தரும் வள்ளலாரும் தம் மொழிகளை ஆணையிட் டுரைக்கிறார்கள். "ஆணை நமதே" என்று ஞானசம்பந்தர் ஆணையிட்டுரைக்கும் இடங்கள் நான்கு. வள்ளலார் ஆணையிட்டுரைக்கும் இடங்கள் மிகப்பல. 'எல்லாம் செயல் கூடும் என் ஆணை' என்பது அவற்றுள் முக்கியமான ஓரிடம்.

திருமூலர் நிறைமொழி மாந்தர் அவருடைய திருமந்திரத்தின் பல பகுதிகள் மறைமொழிகளால் ஆனவை. "சூனிய சம்பாஷணை" என்றே ஓர் அதிகாரம். சில பதிப்புகளில் அதற்கு "மறை பொருட்கூற்று" என்று தமிழ்ப் பெயரிட்டிருக்கிறார்கள். திருமந்திரத்தில் மிக எளிதாகப் பொருளுணரக் கூடியபாடல்களும் உண்டு. பொருள் செய்யவே இயலாது. பரிபாடையால் அமைந்த மிகக்கடின மானபாடல்களும் உண்டு. மறைமொழிகள் நிறைந்த இந்நூலை மந்திரம் என்பது எவ்வளவு பொருத்தம். சிறப்புக்கருதி இம்மந்திரநூல் 'திரு' என்ற அடைமொழி பெற்றுத் திருமந்திரமாயிற்று.

## <u>திருமந்திரத்தின் அமைப்பும் சிறப்பும்</u>

நூலுக்குப் பெயர் திருமந்திரம்
நூலின் பகுதிகளுக்குப் பெயர் தந்திரம்
திருமந்திரம் 3000 மந்திரங்களைக் கொண்டது.

ஒன்பது தந்திரங்களைக் கொண்டது.

திருமந்திரத்தின் பாடல்களைப் பாடல் என்றோ செய்யுள் என்றோ வழங்குவது மரபன்று. மந்திரம் என்று வழங்குவதே மரபு. திருமந்திரத்தில் நூறாவது பாடல், நூறாவது செய்யுள் என்று கூறுவது மரபன்று. நூறாவது மந்திரம் என்பதே மரபு.

திருமந்திரத்தைப் பொறுத்த வரை நூலும் மந்திரம். அதன் பாடல்களும் மந்திரங்கள். திருமந்திரம் முதல் தந்திரம் நூறாம் மந்திரம் என்பது போன்றே வழங்குவது மரபு.

நூல் - திருமந்திரம்
நூலின்பகுதி - தந்திரங்கள்
நூலின்பாக்கள்- மந்திரங்கள்

இது திருமந்திரத்தின் தனிச்சிறப்பு.

தந்திரங்கள் பெயர்கள் எண்ணுப் பெயர்களே. முதல் தந்திரம். இரண்டாம் தந்திரம், மூன்றாம் தந்திரம் என்று இப்படியே ஒன்பது தந்திரங்களும் எண்களால் பெயரிடப் பெற்றுள்ளன.

மணி - மந்திரம் - மருந்து என்று ஒருமும்மை சைவத் திறத்தில் உண்டு. அதே போன்று மந்திரம் - தந்திரம் - யந்திரம் என்று இன்னொரு மும்மையும் உண்டு. இவ்விரு மும்மையிலுமே மந்திரம் இடம் பெறுகிறது. மந்திரத்திற்குரிய தனிச்சிறப்பு அது.

மணி - மந்திரம் - மருந்து
மந்திரம் - தந்திரம் - யந்திரம்

வைத்தியம், வாதம், யோகம், ஞானம் ஆகிய துறைகளில் மணி மந்திரம் ஔடதம் சிறப்பாகப் பேசப்பெறுகிறது. மணி மந்திரம் மருந்து (ஔடதம்) என்பதற்கு இலக்கிய இலக்கணங்களில் ஒரு பொருள். மருத்துவத்தில் (வைத்தியத்தில்) வேறு பொருள். வாதத்தில் வேறுபொருள். இங்கு வாதம் என்றாலே ரசவாதம் தான். வேறு வாதங்களைக் குறிக்காது. யோக ஞானங்களில் வேறுபொருள். இவ்வாறு துறைதோறும் பொருள் வேறுபடும். பொதுப் பொருள். அவ்வத் துறைக்கே உரிய சிறப்புப் பொருள் எனப் பல பொருள்கள் உண்டு. வைத்தியத்திலும் வாதத்திலும் பரிபாஷைகள் மிகுதி.

நம்முடைய ஞானிகள் இறைவனை மணியாக, மந்திரமாக, மருந்தாகக் கண்டார்கள், பாடினார்கள். புள்ளுருக்குவேளூரில் இறைவன் வைத்தீஸ்வரன். கோயிலும் ஊரும் வைத்தீசுவரன் கோயில் என்றே பெயர் பெற்றன. திருவான்மியூரில் மருந்தீஸ்வரன். “மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி” என்னும் வைத்தீஸ்வரன் கோயில் தேவாரம் மிகவும் புகழ் பெற்றது.

”மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி’
‘மந்திரத்தான் தந்திரத்தான்’ -658
‘மருந்து மாவன மந்திர மாவன’ -2618
‘மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை’ -3063
‘மருந்தவை மந்திரம்’ -3783
‘மருந்தும் ஆகுவர்’ -5833
‘மந்திரமும் தந்திரமும் ஆனார் போலும்’ -6402

என்னும் தேவாரத் திருவாக்குகளைக் காண்க.

வள்ளலார் திருவருட்பாவில் ‘மணி மந்திரம் மருந்து’ என்ற ஆட்சிகளும் அனுபவங்களும் மிகப்பல. ‘மருந்தறியேன் மணி அறியேன் மந்திரம் ஒன்றறியேன்’ என்று வருந்திப் பாடிய வள்ளலாருக்கு, இறைவன் மருந்து இது, மணி இது, மந்திரம் இது, செய்வகை இது, துறை இது, வழி இது, என மணி மந்திரம் மருந்துகளையும், அவற்றின் செய்வகை, வழிதுறைகளையும் அறிவித்தருளினான். திருவருட்பா ஆறாந்திருமுறை அருட்பெருஞ்ஜோதி அகவலில், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை வள்ளலார், மணியே! மந்திரமே! மருந்தே! எனப் போற்றித்துதிக்கும் வரிகளும் வண்ணமும் பற்பல.

இனி, மந்திரம் - தந்திதம் - யந்திரம் - என்ற மும்மைக்கு வருவோம். மந்திரம், தந்திரம், யந்திரம் ஆகிய இம்மூன்றும் நிறைந்ததே திருமந்திரம். நூல் திருமந்திரம். அதன் பகுதி தந்திரங்கள். நாலாம் தந்திரத்தின் பெரும் பகுதி யந்திரங்களைப் பற்றியதே.

| | | | | |
|---|---|---|---|---|
| வேதம் | - | மந்திரம் | | |
| ஆகமம் | - | தந்திரம் | | |
| வேதம் | - | வேதாந்தம் | -பொது | |
| ஆகமம் | - | சித்தாந்தம் | -ஆகமாந்தம் | -சிறப்பு |

வேதாந்தம் என்ற சொல் பெருக வழங்குவது போன்று ஆகமாந்தம் என்ற சொல் பெரு வழக்கில் இல்லை. அரிதாகவே வழங்குகிறது. இவர் ஆகமாந்தத்தைக் தமிழ்செய்து விரித்துவிளக்க வந்துவராதலின் மந்திரம் தந்திரம் யந்திரம் ஆகிய மூன்றையும் முக்கியமாகக் கொண்டார்.

யந்திரம் என்பது சக்கரம். திருமந்திரத்தில் நாலாம் தந்திரத்தின் பெரும்பகுதி யந்திரங்கள், சக்கரங்கள்.

திருவம்பலச்சக்கரம்
திரிபுரைசக்கரம்
ஏரொளிக் சக்கரம்
வயிரவச் சக்கரம்
சாம்பவிமண்டலச் சக்கரம்
புவனாபதி சக்கரம்
நவாக்கரி சக்கரம்

எனப்பல சக்கரங்கள் கூறப்பெற்றுள்ளன. சைவ சித்தாந்த நூல்களில் வேறு எதுவும் சக்கரங்களைப் பற்றிக் கூறவில்லை.

மந்திரம் தந்திரம் யந்திரம் என்ற மும்மை வள்ளலாரையும் ஈர்த்திருக்கிறது. திருவருட்பாவில் ஓரிடத்தில் “மந்திர தந்திர யந்திர பாதா” என்று வள்ளலார் இறைவனைப் பாடுகிறார்.

தமிழிலுள்ள ஒரே மந்திர சாத்திரம் திருமந்திரம்.

**திருமந்திரத்திற்கு முன்னும் பின்னும் அதைப்**
**போன்ற ஒருநூல் தோன்றவில்லை.**
**திருமந்திரம் வேறு எதனோடும் ஒப்பிட இயலாத**
**ஒரு தனிவகை நூல்.**
**வேறு எதனாலும் அறியப் பெறாத செய்திகள்**
**திருமந்திரத்தில் உள.**
**தமிழ்த்தத்துவ உலகில் திருமந்திரம் முதல் நூல்.**
**முழுத் தமிழ் முதல் நூல்.**
**இதற்கு ஒப்பாக வேறு எதனையும் சொல்லு**
**வதற்கில்லை.**
**பின்வந்த சாத்திர நூல்களுக்கெல்லாம்**
**முன்னோடியானது இதுவே.**

## திருமந்திரம் கூறும் பொருள்கள்

திருமந்திரம் ஒரு தத்துவக் களஞ்சியம்; தத்துவச் சுரங்கம், தத்துவக்கடல். அதன் நீள அகல ஆழங்களைக் காண்பது அரிது. அரிய பெரியதத்துவ நுண்பொருள்கள், சித்தாந்த நுண்பொருள்கள் எவ்வளவோ அதிற் கொட்டிக் கிடக்கின்றன. அவரவர் ஆற்றலுக்கு ஏற்றாற் போல் வாரிக்கொள்ளலாம்.

திருமந்திரம் கூறும் பொருள்களை நாமாக இங்கெடுத்துக் கூறுவதை விடத் திருமந்திரத்தின் பொருளடக்கத்தை. அப்படியே எடுத்துக் கொடுத்துவிட்டால் அன்பர்கள் முழுமையாக அறிவதற்கு நன்கு ஏதுவாகும் என்பதால், திருமந்திரம் சமாஜப் பதிப்பில் (1933) உள்ள உள்ளுறை மூன்று பக்கங்களையும் அப்படியே கீழே எடுத்துக் காட்டுகிறோம்.

**உள்ளுறை**

| | | |
|---|---|---|
| விநாயகர் காப்பு | - | ஆகமச் சிறப்பு |
| பாயிரம் | - | குருபாரம் பரியம் |
| கடவுள் வாழ்த்து | - | திருமூலர் வரலாறு |
| வேதச் சிறப்பு | - | அவையடக்கம் |
| திருமந்திரத் தொகைச் சிறப்பு | - | கேள்வி கேட்டமைதல் |
| குருமட வரலாறு | - | கல்லாமை |
| திருமூர்த்திகளின் சேட்ட கனிட்ட முறைமை | - | நடுவுநிலைமை |
| | - | கள்ளுண்ணாமை |

<u>முதல் தந்திரம்</u>

உபதேசம்
யாக்கை நிலையாமை
செல்வம் நிலையாமை
இளமை நிலையாமை
உயிர் நிலையாமை
கொல்லாமை
புலால் மறுத்தல்
பிறன்மனை நயவாமை
மகளிர் இழிவு
நல்குரவு
அக்கினிகாரியம்
அந்தணரொழுக்கம்
இராசதோடம்
வானச்சிறப்பு
தானச்சிறப்பு
அறஞ்செய்வான் திறம்
அறஞ்செயான் திறம்
அன்புடைமை
அன்புசெய்வாரை அறிவான் சிவன்
கல்வி
அதோமுகதெரிசனம்
சிவநிந்தை
குருநிந்தை
மயேசுரநிந்தை
பொறையுடைமை
பெரியோரைத் துணைக்கோடல்

<u>இரண்டாம் தந்திரம்</u>

அகத்தியம்
பதிவலியில்
வீரட்டம் எட்டு
இலிங்க புராணம்
தக்கன்வேள்வி
பிரளயம்
சக்கரப்பேறு
எலும்பும் கபாலமும்
அடிமுடி தேடல்
சர்வசிருஷ்டி
திதி
சங்காரம்
திரோபவம்
அநுக்கிரகம்
கர்ப்பக்கிரியை
மூவகைச் சீவவர்க்கம்
பாத்திரம்
அபாத்திரம்
தீர்த்தம்
திருக்கோயிலிழிவு
பரியங்க யோகம்
அமுரிதாரணை
சந்திரயோகம்

## மூன்றாம் தந்திரம்

அட்டாங்க யோகம்
இயமம்
நியமம்
ஆதனம்
பிராணாயாமம்
பிரத்தியாகாரம்
தாரணை
தியானம்
சமாதி அட்டாங்க யோகப் பேறு
அட்டமாசித்தி
கலைநிலை
சரீரசித்தி உபாயம்
கால சக்கரம்
ஆயுள்பரிட்சை
வாரசரம்
வாரசூலம்
கேசரியோகம்

## நான்காம் தந்திரம்

அசபை
திருவம்பலச் சக்கரம்
அருச்சனை
நவகுண்டம்
சத்திபேதம் - திரிபுரைச் சக்கரம்
வயிரவி மந்திரம்
பூரண சத்தி
ஆதாரவாதேயம்
ஏரொளிச் சக்கரம்
வயிரவச் சக்கரம்
சாம்பவி மண்டலச் சக்கரம்
புவனாபதி சக்கரம்
நவாக்கரி சக்கரம்

## ஐந்தாம் தந்திரம்

சுத்த சைவம்
அசுத்த சைவம்
மார்க்க சைவம்
கடுஞ்சுத்த சைவம்
சரியை
கிரியை
யோகம
ஞானம்
சன்மார்க்கம்
சகமார்க்கம்
சற்புத்திர மார்க்கம்
தாச மார்க்கம்
சாலோகம்
சாமீபம்
சாரூபம்
சாயுச்சியம்
சத்திநி பாதம் - மந்தம்
மந்ததரம்
தீவிரம்

## ஆறாம் தந்திரம்

சிவகுரு தரிசனம்
திருவடிப்பேறு
ஞாதுருஞானஞேயம்
துறவு
தவம்
தவதூடணம்
அருளுடைமையின் ஞானம்வருதல்
அவவேடம்
தவவேடம்
திருநீறு
ஞானவேடம்
சிவவேடம்
அபக்குவன்
பக்குவன்

தீவிரதரம்
புறச்சமயதூஷணம்
நிராசாரம்
உட்சமயம்

**ஏழாம் தந்திரம்**

ஆறாதாரம்
அண்டலிங்கம்
பிண்டலிங்கம்
சதாசிவலிங்கம்
ஆத்துமலிங்கம்
ஞானலிங்கம்
சிவலிங்கம்
சம்பிரதாயம்
திருவருள் வைப்பு
அருளொளி
சிவபூசை
குருபூசை
மகேசுவரபூசை
அடியார்பெருமை
போசனவிதி
பிட்சாவிதி
முத்திரைபேதம்
பூரணக்குகை நெறிச்சமாதி
சமாதிக்கிரியை
விந்துற்பனம்
விந்துஜயம் - போகசரவோட்டம்
ஆதித்தநிலை - அண்டாதித்தன்
பிண்டாதித்தன்
மனவாதித்தன்
ஞானாதித்தன்
சிவாதித்தன்
பசுவிலக்கணம் - பிராணன்
புருடன்
சீவன்
பசு
போதன்
ஐந்திந்திரிய மடக்கு அருமை
ஐந்திந்திரிய அடக்கு முறைமை
அசற்குரு நெறி
சற்குருநெறி
கூடாவொழுக்கம்

**எட்டாம் தந்திரம்**

உடலிற் பஞ்சபேதம்
உடல்விடல்
அவத்தைபேதம்-
கீழாலவத்தை
மத்திய சாக்கிராவத்தை
அகத்துவாக்கள்
சுத்த நனவாதிபருவம்
கேவலசக லசுத்தம்
பராவத்தை
முக்குணநிர்க்குணம்
அண்டாதிபேதம்
பதினொராந் தானமும்
அவத்தையெனக்காணல்
கலவுசெலவு
நின்மலாவத்தை
அறிவுதயம்
ஆறந்தம்
பதிபசுபாசம்வேறின்மை
அடித்தலையறியும்
திறங்கூறல்
முக்குற்றம்
முப்பதம்
முப்பரம்
பரலட்சணம்
முத்துரியம்
மும்முத்தி
முச்சொரூபம்
முச்சூனிய தொந்தத்தசி
முப்பாழ்
காரியகாரணவுபாதி
உபசாந்தம்
புறங்கூறாமை
அஷ்டதளகமலமுக்குண
அவத்தை
நவாவத்தை நவாபிமானி
சுத்தாசுத்தம்

கேடுகண்டிரங்கல்
இதோபதேசம்
மோக்ஷநிந்தை
இலக்கணாத்திரயம்
தத்துவமசி வாக்கியம்
விசுவக்கிராசம்
வாய்மை
ஞானிசெயல்
அவாவறுத்தல்
பத்தியுடைமை
முத்தியுடைமை
சோதனை

<u>**ஒன்பதாம் தந்திரம்**</u>

குருமட தரிசனம்
ஞானகுரு தரிசனம்
பிரணவசமாதி
ஒளி
தூலபஞ்சாக்கரம்
சூக்குமபஞ்சாக்கரம்
அதிசூக்குமபஞ்சாக்கரம்
திருக்கூத்துத் தரிசனம்
ஆகாசப்பேறு
ஞானோதயம்
சத்தியஞானானந்தம்
சொரூப உதயம்
ஊழ்
சிவதரிசனம்
சிவசொரூப தரிசனம்
முத்திபேதம், கருமநிருவாணம்
சூனிய சம்பாஷணை
மோனசமாதி
வரையுரைமாட்சி
அணைந்தோர்தன்மை
தோத்திரம்
சர்வவியாபி
பிறநூல்களி திருமந்திரச்செய்யுள்கள்
அரும்பதஉரையகராதி
பாட்டு முதற் குறிப்பகராதி

# <u>திருமந்திரம் வள்ளலாரின் வழிகாட்டி நூல்</u>

## <u>வள்ளலார் கண்டபிரஸ்தானத்திரயம்</u>

வள்ளற்பெருமான் இளம்போதில் தமது ஞான வாழ்க்கைக்குத் துணையாக இரண்டு நல்ல அமைப்புகள் ஏற்படுத்திக் கொண்டார்.

1. வழிபடு கடவுள், குரு, நூல்
2. வழிகாட்டி நூல்கள்

வள்ளலாரின்-

வழிபடு கடவுள் - முருகன்
வழிபடு குரு - திருஞானசம்பந்தர்
வழிபடுநூல் - திருவாசகம்

வள்ளலார் கொண்ட வழிகாட்டி நூல்கள்

1. திருக்குறள்
2. திருமந்திரம்
3. திருவாசகம்

வழிபடுகடவுள், குரு, நூல் என்ற அமைப்பும் மூன்று. வழிகாட்டி நூல்களும் மூன்று.

இந்த மூன்று, அந்த மூன்று, ஆகிய இவ்விரு மூன்றும், மூன்றும் மூன்றும் ஆறும் வள்ளலாரை உருவாக்கின, ஆளாக்கின.

வேதாந்த உலகில் உபநிடதங்கள், பிரம்மசூத்திரம், பகவத்கீதை ஆகிய மூன்றும் 'பிரஸ்தானத்திரயம்" என வழங்கப்பெறும். பிரஸ்தானத்திரயம் என்றால் முக்கியமான மூன்று என்று பொருள். பிரஸ்தானம் - முக்கிய, திரயம் - மூன்று. வேதாந்த நூல்கள் மிகப்பல இருப்பினும் உபநிடதங்கள் பிரம்மசூத்திரம் பகவத்கீதை இம்மூன்றையுமே வேதாந்திகள் மிகவும் முக்கியமாகக் கொள்வர். ஆதலின் இவை பிரஸ்தானத்திரயம் என்ற வழக்கும் ஏற்பட்டது.

வள்ளலாரும் தமிழ் உலகில் சைவ உலகில் ஒரு பிரஸ்தானத்திரயத்தைக் கண்டார்.

வள்ளலார் கண்ட பிரஸ்தானத்திரயம் யாது?

1. திருக்குறள்

2. திருமந்திரம்

3. திருவாசகம்

தமிழ் நூற்பரப்பில் திருவுடைய நூல்கள் சில*. அவற்றுள் இம்மூன்றும் மிகச் சிறந்தவை.

* திருக்குறள், திருமந்திரம், திருவாசகம், திருக்கோவையார், திருவாய்மொழி, திருப்புகழ் முதலியன. பின்னாளில் திருஅருட்பாவும் சேர்ந்தது.

நீதி நூல்களுள், அறநூல்களுள், தலையானது திருக்குறள்.
சாத்திர நூல்களுள் தலையானது திருமந்திரம்
தோத்திர நூல்களுள் தலையானது திருவாசகம்.

தோத்திரத்துக்குத் திருவாசகம், சாத்திரத்துக்குத் திருமந்திரம் என்றொரு பழமொழியே ஏற்பட்டு விட்டது. இப்பழமொழியை வள்ளற்பெருமான் தம் உபதேசமொன்றிற் குறிப்பிடுகிறார். இன்று பழமொழியாக விளங்கும் இதனை உண்டாக்கியவர், முதன் முதலிற் கூறியவர் வள்ளற்பெருமானாகவே இருக்கலாம். வள்ளலாருக்குமுன் இப்பழமொழி வழக்கிலிருந்ததா? யாராவது குறிப்பிட்டிருக்கிறார்களா? ஏட்டில் வந்துள்ளதா? அச்சில் வந்துள்ளதா? என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

தமிழ் நூற்பரப்பை நன்குணர்ந்த வள்ளற்பெருமான்

**நீதிக்கு (அறத்துக்கு)த் திருக்குறள்**
**சாத்திரத்திக்குத் திருமந்திரம்**
**தோத்திரத்துக்குத் திருவாசகம்**

என்று முப்பெரு நூல்களை, முத் திருநூல்களைத் தேர்ந்து பிரதான நூல்களாக, பிரமாண நூல்களாக எடுத்தமைத்துக் கொண்டார்.

திருக்குறள், திருமந்திரம், திருவாசகம் - இம்மூன்றும் வள்ளலார் கண்ட தமிழ்ப் பிரஸ்தானத்திரயம், சைவப்பிரஸ்தானத்திரயம்.

**வள்ளலாரின் உபநிடதம் திருக்குறள்**
**வள்ளலாரின் பிரம்மசூத்திரம் திருமந்திரம்**
**வள்ளலாரின் பகவத்கீதை திருவாசகம்.**

எப்பேர்ப்பட்ட தேர்வு.

வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கத்திற்கு மூலமும் முதலும் கருவும் ஆன பொருள்கள் பல திருக்குறள், திருமந்திரம், திருவாசகம் ஆகிய மூன்றிலும் உண்டு. ஆதலின் இம்மூன்றையும் மூல நூல்களாக, கருவி நூல்களாக, பிரமாண நூல்களாக வழிகாட்டி நூல்களாக வள்ளலார் கொண்டார்.

வள்ளலாரையும் திருக்குறளையும் பற்றிய செய்திகளை "வள்ளுவரும் வள்ளலாரும்" என்ற நூலிற் கூறியுள்ளோம் (வாழையடி வாழை வரிசை-3). வள்ளலாரையும் திருவாசகத்தையும் பற்றிய செய்திகளை "மாணிக்கவாசகரும் வள்ளலாரும்" என்ற நூலிற் கூறியுள்ளோம் (வாழையடி வாழை வரிசை-8). வள்ளலாரையும் திருமந்திரத்தையும் பற்றிய செய்திகளை இந்நூலிற் காணலாம்.

## இறைவன் வள்ளலாருக்குத் திருமந்திரத் திருமுறையால் உணர்த்தியது

திருமந்திரத் திருமுறையால் மெய்ம்மொழிப் பொருள் ஒன்றை இறைவன் வள்ளற்பெருமானுக்கு உணர்த்தியருளினான் என்பது பெருமான் அருளிய திருவருட்பாப் பாடலொன்றால் தெரிகிறது.

**திருவளர்திருஅம் பலத்திலே அந்நாள்**
**செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்**
**உருவளர் திருமந்திரத்திரு முறையால்**
**உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும்**
**கருவளர் அடியேன் உளத்திலே நின்று**
**காட்டிய மெய்ம்மொழிப் பொருளும்**
**மருவிஎன் உளத்தே நம்பிநான் இருக்கும்**
**வண்ணமும் திருவுளம் அறியும்** -3527

இப்பாடல் திருவருட்பா ஆறாந் திருமுறையில் பதின்மூன்றாம் பதிகம் பிள்ளைப் பெருவிண்ணப்பத்தில் 118-ஆம் பாடலாகத் திகழ்வது. இதனுள் வள்ளற்பெருமான் மூன்று மெய்ம்மொழிப் பொருள்களைக் குறிப்பிட்டு, அவற்றைத் தாம் நம்பி இருப்பதாக இறைவனிடம் விண்ணப்பிக்கிறார். பாடலின் முதன்மூன்றடிகளில் அவை இடம்பெற்றுள்ளன. அம்மூன்று மெய்ம் மொழிப் பொருள்களாவன:-

1. **திருஅம்பலத்திலே அந்நாள் செப்பிய மெய்ம்மொழிப்பொருள்**
2. **திருமந்திரத் திருமுறையால் உணர்த்திய மெய்ம்மொழிப் பொருள்**
3. **தமது உளத்திலே நின்று காட்டிய மெய்ம்மொழிப் பொருள்**

திருஅம்பலத்திலே அந்நாள் செப்பிய மெய்ம்மொழிப்பொருள் சேக்கிழாருக்கு இறைவன் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுத்தது. திருமந்திரத் திருமுறையால் உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும், பெருமானுடைய உளத்திலே நின்று காட்டிய மெய்ம்மொழிப் பொருளும் இன்னதெனத் தெரியவில்லை.

இம்மூன்று மெய்ம்மொழிப் பொருள்களையும் விளக்கி "மெய்ம்மொழிப் பொருள்விளக்கம்" என்றொரு உரைநடை நூலை வள்ளற்பெருமான் எழுதத் தொடங்கினார். முதல் மெய்ம்மொழிப் பொருளின் விளக்கமாகிய "உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப்பொருள்விளக்கம்" மட்டும் எழுதி முடிக்கப்பெற்றுத் திருவருட்பா பதிப்புகளிற் சேர்ந்து, இன்று நமக்குக் கிடைக்கிறது. திருஅருட்பா உரைநடைப்பகுதி ஊரன்அடிகள் பதிப்பு 129-ஆம் பக்கம் முதல் 213-ஆம் பக்கம் முடிய இதனைக் காணலாம். மற்ற இரண்டு மெய்ம்மொழிப்பொருள் விளக்கங்களும் பெருமானால் எழுதப்பெறாமல் தவிந்துபோயின.

மூன்று மெய்ம்மொழிப் பொருள்களையும் கூறும் மேலெடுத்துக் காட்டிய திருவருட்பாப் பாடலில் "திருமந்திரத் திருமுறையால் உணர்த்திய மெய்ம்மொழிப்பொருளும்" என்பதில் "திருமுறையால்" என்று கூறாமல் திருமந்திரத்தால் என்று மட்டும் கூறியிருந்தால், இங்கு கூறப்பெற்றது பத்தாம் திருமுறையாகிய திருமந்திரமன்று, வேறு ஏதோ ஒரு மந்திரச்சொல் (மந்திரவாக்கியம்) என்று சாதிக்கக்கூடியவரும் இருப்பர். அதற்கெல்லாம் இடமின்றி பன்னிரு திருமுறைகளில் ஒன்றான, பத்தாம் திருமுறையான திருமந்திரமே என்று நன்கு தெளிவாக வெளிப்படையாகப் புலப்படும்படித் திருமந்திரத் திருமுறையால் என்று கூறியுள்ள பாங்கும் திறம், எண்ணி எண்ணி மகிழத்தக்கது.

திருமந்திரத் திருமுறையில் எவ்வளவோ அரும்பொருள் நுண்பொருள்கள் பெரும் பேரனுபவப் பொருள்கள் உள்ளன. அவற்றுள் ஏதோ ஒரு பெரும்பொருளை இறைவன் வள்ளலாருக்கு உணர்த்தியிருக்கிறான். அது இன்னதென அறிய வாய்ப்பில்லாது போனது நமது தவக்குறையே.

அதைப்போன்றே, மூன்றாவது மெய்ம்மொழிப் பொருளாகிய, பெருமானின் உளத்திலே நின்று உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளையும் இன்னதென அறிய வழியில்லை. இதுவும் நம் தவக்குறையே.

எனினும், திருமந்திரம் இறைவனால் வள்ளலாருக்கு உணர்த்தப்பெற்ற - உபதேசிக்கப் பெற்ற - நூல் என்பது உறுதி.

**<u>நமது வேதம் நான்கு</u>**

வள்ளலார் கொண்ட வழிகாட்டி நூல்களான, வள்ளலார் கண்ட தமிழ்ப் பிரஸ்தானத்திரயங்களான திருக்குறள், திருமந்திரம், திருவாசகம் ஆகிய மூன்றுடன் வள்ளலார் அருளிய திருவருட்பாவைச் சேர்க்க, இவை நான்கும் நமது நால் வேதங்களாம்.

**திருக்குறள் தமிழ் வேதம்**
**திருவாசகம் தமிழ் உபநிடதம்**
**திருமந்திரம் தமிழ் ஆகமம்**
**திருவருட்பா - இம்மூன்றும் சேர்ந்தது**

இந்நான்கையும் ஓதுவது வேத பாராயணம்.

இந்நான்கையும் கடைப்பிடிப்பது வேத வழி நிற்றல்.

நமது வழிபாட்டில் இந்நான்கும் இடம் பெறவேண்டும். நாள்தோறும் ஒவ்வொன்றிலும் நூறு பாடல்கள் ஓத வேண்டும். அல்லது ஒவ்வொரு அதிகாரம் பதிகம் ஓத வேண்டும். ஓதியவாறு ஒழுக முயலவேண்டும்.

## <u>வள்ளலார் உபதேசத்தில்</u>

## <u>திருமந்திரத்தைப் பற்றிக் கூறுவது</u>

## <u>“இந்த மார்க்கத்தின் உண்மை”</u>

சன்மார்க்கத்தின் உண்மை தெரியவேண்டுமானால் திருமந்திரத்தைக் கவனிக்கில் விளங்கும் என வள்ளற்பெருமான் உபதேசிக்கிறார்.

இந்த மார்க்க உண்மை தெரியவேண்டுமாகில் திருமந்திரத்தைக் கவனிக்கில் விளங்கும்.

சாத்திரங்களிற் சிறந்தது திருமூலர் திருமந்திரம். இஃது மொத்தம் எண்ணாயிரம்; * தோத்திரங்களிற் சிறந்தது திருவாசகம். இவற்றை ஊன்றிப் பார்க்கவும்.

{*திருமந்திரம் எண்ணாயிரம் என்ற கருத்து.

திருமூலர் அருளிய திருமந்திரம் (10ஆம் திருமுறை) 3000 மூவாயிரம் மந்திரங்களே (பாடல்களே). எண்ணாயிரம் அன்று. திருமூலர், திருவள்ளுவர், அகத்தியர் என்று பின்னாளில் பெயரிட்டுக் கொண்டோர் பலர். திருமூலர் பேரால் பின்னாளில் வைத்திய நூல்கள் வாதநூல்கள் சிலபல எழுந்தன. அவற்றையும் (திருமந்திரத்) திருமூலர் செய்ததாகவே கொள்ளுதல் அக்கால வழக்கு. அவற்றையும் சேர்த்தால் எண்ணாயிரம் ஆகும். அவ்வழக்குப் பற்றியே வள்ளற்பெருமானும் எண்ணாயிரம் என்றார். திருமந்திரம் மூவாயிரமே என்பது இந்நாளில் நன்கு தெளிவாகிவிட்டது. ஆதலின் பெருமான் எண்ணாயிரம் என்றது காலவழக்கை அனுசரித்துக் கூறியதாகக் கொள்க, உபசார வழக்காகக் கொள்க உண்மையாகக் கொள்ளற்க.}

என்பது வள்ளலார் உபதேசம். (திருஅருட்பா, உரைநடைப்பகுதி, ஊரன் அடிகள் பதிப்பு, பக்கம் 282, உபதேசக் குறிப்புகள்).

இவ்வுபதேசத்தில் இந்த மார்க்கம் என்பது வள்ளலாரின் சன்மார்க்கம். இந்த மார்க்கத்தின் (சன்மார்க்கத்தின்) உண்மையைத் தெரிந்து கொள்ளுவதற்குத் திருமந்திரத்தைக் கவனிக்க வேண்டும் என்று அன்பர்களுக்கு வள்ளலார் உபதேசிக்கிறார். திருமந்திரத்தை(யும் திருவாசகத்தையும்) ஊன்றிப் பார்க்கவேண்டும் என்கிறார்.

சன்மார்க்கத்திற்கு ஆதாரநூல், பிரமாணநூல் திருமந்திரம் என்பதை மிகத் தெளிவாக உரைத்திருக்கிறார்.

## வள்ளலாரின் திருமுகமொன்றில்

## திருமந்திர மேற்கோள்

வள்ளலார் தம் அன்பர்களுக்கு எழுதியருளிய திருமுகங்கள் (கடிதங்கள்) பல. அவற்றையெல்லாம் திருவருட்பா திருமுகப்பகுதி என ஆ.பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பித்துள்ளார். வள்ளலார் அருளிய உரைநடை அருளிச்செயல்கள் அனைத்தையும் திருஅருட்பா உரைநடைப்பகுதி என நாம் பதிப்பித்துள்ளோம். உரைநடைப்பகுதியில் திருமுகங்களும் சேர்ந்ததே. திருமுகங்கள் பெரும்பாலும் முழுமையாகக் கிடைத்துள்ளன. முழுமையான திருமுகங்கள் தவிர சில துண்டுக் குறிப்புகளாக, சிறு சிறு குறிப்புகளாகக் கிடைத்துள்ளன. அப்படிப்பட்ட துண்டுக் குறிப்புகளுள் ஒன்று திருமந்திரமாக உள்ளது.

**“செல்லும்போது செலுத்துவேன் சிந்தையை**
**வெல்லும்போது விடுவேன் வெகுளியை”**

என்பது ஒரு திருமுகக் குறிப்பு. இவ்விரண்டு வரிகளைத்தவிர இதைப்பற்றி வேறெதுவும் கிடைக்கவில்லை. சூத்திரம் போன்று அமைந்துள்ள இவ்விரு வரிகளும் திருமந்திரப் பாடல் தொடர்கள் என்பதை நாம்தான் நம் பதிப்பில் முதன்முதலில் வெளிப்படுத்தினோம். திருமந்திரப் பாடல்கள் இரண்டையும் அடிக்குறிப்பில் முழுமையாக எடுத்துக்காட்டினோம். திருஅருட்பா உரைநடைப் பகுதி ஊரன் அடிகள் பதிப்பு பக்கம் 418 காண்க.

திருமந்திரத்தில்

**செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை**
**வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை**
**இல்லை எனினும் பெரிதுளன் எம்மிறை**
**நல்ல வரனெறி நாடுமி னீரே** -2103

**வெல்லும் அளவில் விடுமின் வெகுளியை**
**செல்லும் அளவுஞ் செலுத்துமின் சிந்தையை**
**அல்லும் பகலும் அருளுடன் தூங்கினாற்**
**கல்லும் பிளந்து கடுவெளி யாமே** -2303

என வரும் இரு மந்திரங்களின் தொடர்களையே, கருத்துகளையே, வள்ளற்பெருமான் தம் திருமுகத்தில் மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

திருமுகக் குறிப்பின் முதல் வரியாகிய “செல்லும்போது செலுத்துவேன் சிந்தையை” என்பது இரண்டு மந்திரங்களிலும் (2103,2303) இரண்டாவது வரியாகிய “வெல்லும்போது விடுவேன் வெகுளியை” என்பது இரண்டாவது மந்திரத்திலும் (2303) வருகிறது.

இவ்விரண்டு மந்திரங்களில் முதலாவது (2103) திருமந்திரம் ஏழாந்தந்திரத்தில் இதோபதேசம் என்னும் அதிகாரத்திலும், இரண்டாவது எட்டாந்தந்திரம் கலவுசெலவு என்னும் அதிகாரத்திலும் இடம்பெற்றுள்ளன. இதோபதேசம் என்பதன் பொருள் வெளிப்படை கலவுசெலவு என்பதன் பொருள் அறிவதற்குச் சற்று கடினமானது. கலவு - கலந்திருத்தல் செலவு - பிரிந்திருத்தல். கலவு செலவு அவத்தைகளோடு கலந்திருப்பதும் பிரிந்திருப்பதும்.

இனி, இவ்விரு திருமந்திரங்களின் பொருளைக் காண்போம்.

செல்லும் அளவும் - செல்லுகின்ற(அதிகபட்ச) அளவுக்கு

செலுத்துமின் சிந்தையை - சிந்தையை (இறைவனிடம்)

செலுத்துங்கள்

| | | |
|---|---|---|
| வல்லபரிசால் | - | முடிந்த வரையில் முடிந்தவகையில் |
| உரைமின்கள் வாய்மையை | - | உண்மையை உரையுங்கள்(கடவுள்) உண்மையை உரையுங்கள்) |
| இல்லை எனினும் | - | இல்லை என்று பலர் சொன்னாலும் |
| பெரிதுளன் எம்இறை | - | எமது இறைவன் நிச்சயமாக இருக்கிறான் |
| நல்ல அரன்நெறி | - | அவ்வரனின் (சிவபெருமானின்) நல்ல நெறியை |
| நாடுமின் நீரே | - | நீங்கள் நாடுங்கள் |

'கடவுள் இல்லை' என்ற போலிவாதம் இம்மந்திரத்தில் கண்டிக்கப்படுகிறாது. கடவுள் உண்மை வலியுறுத்தப்பெறுகிறது. கடவுட் சிந்தனையை அது செல்லக்கூடிய அதிக அளவுக்குச் செலுத்தாது அறிவுறுத்தப்பெறுகிறது.

செல்லுமளவும் செலுத்துமின் சிந்தையே என்னும் இம்மந்திரத்திற்கு அடுத்த மந்திரம் தான் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற புகழ்பெற்ற (2104). இவையெல்லாம் திருமூலரின் இதோபதேசங்கள். இவ்விதோபதேச்சங்களைப் பின்பற்றும் வள்ளலார் அதை அப்படியே தம் திருமுகத்தில் அன்பர்க்கு உபதேசமாக எடுத்துரைக்கிறார்.

இனி இரண்டாவது கலவுசெலவு மந்திரம். கலவு செலவு என்னும் அதிகாரம் இரண்டே மந்திரங்களை உடையது. அவ்விரண்டில் இது இரண்டாவது மந்திரம்.

| | | |
|---|---|---|
| வல்லும் அளவில் | - | வெல்லக்கூடிய அளவுக்கு |
| விடுமின் வெகுளியை | - | கோபத்தை விட்டுவிடுங்கள் |
| செல்லும் அளவில் | - | செல்லக்கூடிய அளவுக்கு |
| செலுத்துமின் சிந்தையை | - | சிந்தையைச் செலுத்துங்கள் |
| அல்லும் பகலும் | - | இரவும் பகலும் |
| அருளுடன் தூங்கினால் | - | வெகுளியை நீத்து, சிந்தையைச் |

சிவத்தின்பால் செலுத்தி,
அவருடன் கலந்திருந்தால்

| | | |
|---|---|---|
| கல்லும் பிளந்து | - | அகங்காரமாகிய கல் பிளந்து |
| கடுவெளி ஆமே | - | பரவெளியாக ஆகும். |

## திருமந்திரத்தில் சன்மார்க்க உண்மைகள்

## ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற முதல் முழக்கம் திருமூலரால் செய்யப்பெற்றது.

**ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புகுங்கதி இல்லைநும் சித்தத்து**
**நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே -2104**

என்பது திருமூலர் திருமந்திரம்.

திருமூலருக்கு ஐந்நூறு ஆண்டுகள் முற்பட்டவர் திருவள்ளுவர். திருவள்ளுவருக்கு முற்பட்டது சங்ககாலம். கடைச்சங்கத்திற்கு முற்பட்ட இடைச்சங்க காலத்து நூல் தொல்காப்பியம். தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் சாதியைப்பற்றிய செய்திகள் தெளிவாகவும் வலிவாகவும் காணப்படுகின்றன. 2000 ஆண்டுகளுக்கு முன்பு சங்க காலத்திலேயே, அதற்கு முந்திய தொல்காப்பிய காலத்திலேயே தமிழகத்தில் சாதி இருந்திருக்கிறது.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நான்கு சாதிகளைப் பற்றிய செய்திகள் தொல்காப்பியத்தில் உள்ளன. "வேற்றுமை தெரிந்த நறற்பால் உள்ளும்" என்பது சங்க இலக்கியமாகிய புறநானூற்றத் தொடர் (183). நான்கு சாதிகளுக்குள்ளும் ஏற்றத்தாழ்வு இருந்திருக்கிறது. நாலாம் சாதியில் உட்பிரிவுகள் மிகப்பல இருந்திருக்கின்றன.

**மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்**
**கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே**

என்பது தொல்காப்பியம் பொருளதிகாரம் கற்பியல் மூன்றாம் சூத்திரம். இதில் மேலோர் மூவர் என்றது அந்தணர் அரசர் வணிகர் ஆகிய மேல்மூன்று சாதியாரை. கிழோர் என்றது நான்காவதாகிய வேளாளரை.

**வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண்படுமே** -183

என்னும் புறநானூற்றில் "நற்பால்" என்பது நான்கு சாதி. "கீழ்ப்பால்". "மேற்பால்" என்பது கீழ்ச்சாதி, மேற்சாதி. சாதி வேற்றுமை இச்செய்யுள்களில் தெளிவாகத் தெரிகின்றன. "வேற்றுமை தெரிந்த" என்று "வேற்றுமை" என்ற சொல்லே ஆளப்பட்டுள்ளது. "மேலோர்", "கீழோர்", "மேல்", "கீழ்" என்ற சொற்களும் ஆளப்பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களில் இதுபோன்ற செய்திகள் குறிப்புகள் இன்னும் பற்பல உண்டு.

கடைச்சங்க காலத்திற்குச் சிறிது பின் வந்த திருவள்ளுவர் இச்சாதி வேறுபாட்டை மறுக்கிறார். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று ஒருமைப்பாடு பேசுகிறார்.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்** -971

என்பது திருக்குறள். இதிலும் வேற்றுமை என்ற சொல் வருகிறது. இங்கு சொல்லப்பெறும் வேற்றுமை செய் தொழில் வேற்றுமை; பிறந்த பிறப்பால் வேற்றுமையன்று. "பிறப்பு ஒக்கும்" என்று பிறப்பால் ஒற்றுமை பேசும் திருவள்ளுவர் "சிறப்பு ஒவ்வா" செய் தொழில் வேற்றுமையால் என்று தொழில் வேற்றுமையைக் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியர் காலத்துச் சாதி வேற்றுமை, சங்க காலத்துச் சாதி வேற்றுமை, திருவள்ளுவர் காலத்துச் சாதி வேற்றுமை திருமூலர் காலத்திலும் இருந்திருக்கிறது. இன்று மட்டும் இல்லையா? குறைவா? இப்படிப்பட்ட காலத்தில்தான் திருமூலர் தோன்றியிருக்கிறார். தோன்றி "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று ஒரு அடி அடிக்கிறார், ஒரு போடு போடுகிறார். ஒரேயடியாக அடிக்கிறார், ஒரே போடாகப் போடுகிறார். இங்கு அடி என்று நாம் கூறு அடிக்கும் அடி என்றும், செய்யுள் அடி(வரி) என்றும் இருபொருளுக்கும் பொருந்தும்.

அன்று திருமூலர் அடித்த அடி திருமந்திரப் பாடலின் முதலடி பின்னாளில் இன்று ஒரு பழமொழியாகவே பொன்மொழியாகவே சமுதாயத்தில் வழங்கத் தொடங்கிவிட்டது. கற்றாரிடையே மட்டுமின்றிக் கல்லாதாரிடையில் இப்பொன்மொழி பரவலாகப் பெருகி வழங்குவதை இன்னும் காண்கிறோமே! திருமூலரின் இவ்வடி கல்வியாற் பரவியதைவிடக் கேள்வியால்தான் மிகுதியாகப் பரவிற்று.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற திருமூலரின் முதன்முழக்கம் திருமந்திர நூலுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தது. அறிஞர் அண்ணா திராவிட இயக்கத் தலைவர் சி.என்.அண்ணாதுரை - இதனை எடுத்து மேடை தோறும் முழங்கத் தொடங்கினார். கடைசி மூச்சுவரை முழங்கினார். கல்விச்செல்வம் பெறாதோரும் இக்கேள்விச் செல்வத்தால் அண்ணாவின் இம்முழக்கத்தால் இதனை அறியலாயினர்.

இந்த ஒருவரி தான் எல்லோருக்கும் தெரியும். இதற்கு அடுத்த இரண்டாவது அடி என்ன? மூன்றாவது அடி என்ன? இது எத்தனை வரிப்பாட்டு. இது எத்தனையாவது வரி. இதன் இதர வரிகள் என்ன என்பது படித்தவர்களியேகூடப் பலருக்குத் தெரியாது. திருமந்திரம் படித்தவர்களுக்கு மட்டுமே தெரியும்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் இதனை யார் சொன்னார்? சொன்னது யார்? என்று இன்று இளைஞர் ஒருவரைக் கேட்டால் அவர் என்ன சொல்லுவார்? பெரும்பாலோர் 100க்குத் 99 பேர் என்ன சொல்லுவார்கள்! “அண்ணா சொன்னார்” “அண்ணாவின் பொன்மொழி” என்றுதானே சொல்வார்கள். திருமூலர் பாடப்புத்தகம் எழுதினார். அண்ணா குறிப்பேடு வெளியிட்டார். டெக்ஸ்ட்புக் எழுதியவரைப் பலருக்குத் தெரியாது? நோட்ஸ் போட்டவரை எல்லாருக்கும் தெரியும். திருமூலர் டெக்ஸ்ட்புக் எழுதினார். அண்ணா நோட்ஸ் போட்டார். டெக்ஸ்ட்புக்கை யார் படிக்கிறார்கள்? எல்லாருமே நோட்ஸைத்தானே படிக்கிறார்கள்? பெரும்பாலும் நோட்ஸை வைத்துக் கொண்டுதானே ஆசிரியர்களும் பாடஞ்சொல்லுகிறார்கள். அந்தக் கதி இதற்கும் வந்துவிட்டது! நல்லதுதானே!

திருமூலரின் இப்பொன் மொழிக்குப் பொருள் காண்பதிலும் ஓர் இடர்ப்பாடு ஏற்பட்டு விட்டது.

ஒன்றே குலம் - சாதி ஒன்றே ஒருவனே தேவன் - கடவுள் ஒருவரே என்று பொருள் செய்வோர் உண்டு. ஒன்றே குலம் - சாதி ஒன்றே, அது சிவசாதி ஒருவனே தேவன் - கடவுள் ஒருவனே, அவன் சிவன் என்று பொருள் செய்வோரும் உண்டு. கழகப்புலவர் இராமநாதபிள்ளையும் அருணை வடிவேல் முதலியாரும் இப்படித்தான் பொருள் எழுதுகிறார்கள். ஜி.வரதராஜன் உரை, கழகப்புலவர் ப.இராமநாதபிள்ளை உரை, அருணை வடிவேல் முதலியார் உரை ஆகிய மூவர் உரையையும் இங்கெடுத்துக் காட்டுவோம்.

ஒன்றே குலமும் - குலமும் ஒன்றே. ஒருவனே தேவனும் - தெய்வமும் ஒன்றுதான்.

குலம் - இனம். சாதியால் சமயத்தால் பிணக்கின்றி நோக்குவார்க்கு மனித இனம் ஒன்று தானே! திருவள்ளுவரும் “பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்” என்று தானே கூறினார்! தேவன் - இறைவன். இனம் ஒன்றான போது இறையும் ஒன்று தான்.

-ஜி. வரதராஜன் உரை.

பண்டு தென்னாட்டில் வழிபடும் முழுமுதற் கடவுள் வழிக் குலம் ஏற்பட்டது. முன்னாளில் எல்லாரும் செந்தமிழ் நாட்டில் சிவனை வழிபட்டனர் - தொழுதனர். அதனால் 'சைவர்' என்னும் ஒரு குலமே திகழ்ந்திருந்தது. தொழில் பற்றிய குலம் பலவிருந்தாலும் வழிபாட்டுக் குலம் ஒன்றாக இருந்தமையால் பிணக்கின்றி அனைவரும் இணக்கமாக வாழ்ந்தனர். அதனால் "ஒன்றே குலமும்" என்னும் இம்மறை மொழி எழுவதாயிற்று. அதுபோல் சிவபெருமானே செந்தமிழ் முழுவதற் தெய்வமாகக் கொண்டு வணங்கினர். அதனால் "ஒருவனே தேவனும்" என்னும் இம்மறைமொழியும் எழுவதாயிற்று.

-ப.இராமநாதபிள்ளை உரை.

உலகத்தார் பல சாதிகளைக் கூறுவராயினும் உண்மையில் உள்ளது ஒரு சாதியே. அது சிவசாதி. உலகத்தார் பல கடவுள்களைக் கூறிக் கொண்டாடு வராயினும் உண்மையில் உள்ள கடவுள் ஒருவனே, அவன் சிவன்.

- அருணை வடிவேல் முதலியார்.

வரதராச பிள்ளை உரை பொதுவான உரை. இராமநாதபிள்ளை உரையும் அருணையார் உரையும் சமயச்சார்பான, சைவச்சார்பான (சைவ பரமான) உரைகள். இவ்விருவரும் நல்ல சைவர்கள். இவர்களைப் போன்றோர் இப்படித்தான் பொருள் கொள்வார்கள். திருமந்திரம் சைவ நூல்தான், திருமூலர் சைவர் தான். இவற்றில் ஐயத்திற்கிடமில்லை. சைவ நூல்தான் என்றாலும் திருமந்திரம் ஏனைய பல சைவ நூல்கள் போன்றதன்று. இது சிறிது மாறுபட்டது. இதில் சைவத்தோடு சமரசமும் மிகுதியாக உண்டு. சமயச் சார்பற்ற பொதுவான பல செய்திகளும் இதில் உண்டு. அப்படிப்பட்ட பொது வான விடயங்களுக் கெல்லாம் பொதுவாக. பொதுப்படையாக, பொருள் கூறாமல், சமயச் சார்பாகப் பொருள் கூறுதல் பொருத்தமன்று; சற்று வலிந்து பொருள் காண்பதே ஆகும். இப்படியெல்லாம் கூறினால் நூலில் ஆங்காங்கு கிடைக்கும் ஓரளவு. சிறிது, பொதுமைக்கும் இடமில்லாமற் போய்விடும்.

ஒன்றே குலம் - ஒரே சாதி
ஒருவனே - ஒரே கடவுள்

இது பொதுவான உரை.

ஒன்றே குலம் - சாதி ஒன்றே, அது சிவ சாதி
ஒருவனே தேவன் - கடவுள் ஒருவனே, அவன் சிவன்

இது சமயச்சார்பான (சைவச்சார்பான) உரை.

பண்டு தென்னாட்டில் வழிபடும் முழுமுதற் கடவுள் வழிக்குலம் ஏற்பட்டது. அது சைவர் குலம் என்கிறார் இராமநாதபிள்ளை. சிவன், என்று உண்டோ அன்றே விஷ்ணு இல்லையா? பிரமன் இல்லையா? சிவனே மும்மூர்த்தியாய் விளங்குகிறான் என்கிறோமே? கடவுள் வழியே குலம் ஏற்பட்டது என்று சொல்வது அவ்வளவு நன்றாக இருக்கிறதா. சிவபெருமான் வழிச்சைவர் குலம் என்பது போன்று, விஷ்ணு வழி

வைணவர் குலம், இப்படியே இன்னும் சில பல குலங்கள் ஏற்படக் கூடாதா? சற்று முற்காலத்தில் வேண்டுமானால் இதையெல்லாம் (இப்படி யெல்லாம்) சொல்லிக் கொண்டிருக்கலாம். இக்காலத்தில் எடுபடாது. உண்மையும் அன்று.

**ஒரே சாதி, அது சிவ சாதி**
` **ஒரே கடவுள், அவன் சிவன்**

என்று கூறினால், ஒரே சாதி அது வைணவ சாதி, ஒரே கடவுள் அவர் விஷ்ணு என்று வைணவர் ஏன் கூறலாகாது? சிவ மதம் உண்டு. சிவ சாதி என்றொரு சாதி உண்டா? இருப்பதாக வைத்துக் கொண்டாலும் அது வேண்டாமே.

திருமூலர் சிவபக்தர் தான். "சிவனோ டொக்கும் தெய்வம் தேடினும் இல்லை" (5), "அவனை ஒழிய அமரரும் இல்லை" (6) என்றெல்லாம் பாடியவர் தான். ஆனால் அவரே "ஆதிப்பிரானும் அணிமணி வண்ணனும்..................அலர்மிசை யானும்.......................ஒன்றெனார் பேதித்துலகம் பிணங்கு கின்றார்களே" என்று பாடவில்லையா?

திருமூலர் சைவ சித்தாந்தி தான். ஆனால், வேதாந்த சித்தாந்த சமரசம் பேசுகிறவரில்லையா? சித்தாந்தியோடு சித்தரும் அல்லவா! ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற திருமந்திரப் பாடலில் இம்முதலடி ஒன்றே எல்லார்க்கும் எளிதில் விளங்குவது, பொதுப் பொருள் பேசுவது ஏனைய மூன்று அடிகளும் மிகப்பெரிய தத்துவப் பொருலை, ஆன்மிக உண்மைகளைக் கூறுவன.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்பதற்குப் பின் வருமாறு பொருள் காண்பது பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறோம்.

| | |
|---|---|
| ஒன்றே குலம் | - ஒரே குலம், அது மனித குலம் (மக்கட் குலம்) |
| ஒருவனே தேவனும் | - ஒரே கடவுள். |

ஒரே குலம் அது மனித குலம் என்பதைவிட ஒரே குலம் அது உயிர்க் குலம் என்று கூறுவது இன்னும் பொருத்தமானது, மிகவும் பொருத்தமானது.

| | | |
|---|---|---|
| ஒரே குலம் | - | அது மனித குலம் |
| ஒரே குலம் | - | அது உயிர்க்குலம் |
| ஒரே கடவுள் | - | ஒருருவம் ஒரு நாமம் இல்லாத பரம்பொருள் |

ஒரே குலம் மனித குலம் என்பது மனிதநேய சிந்தனை
ஒரே குலம் உயிர்க்குலம் என்பது ஆன்மநேய சிந்தனை.

இது மனிதநேய காலம். இக்காலத்தில் உலக மக்கள் அனைவரையும் ஒரே குலமாகக் கொள்ள வேண்டும். மக்களை மக்கள் நேசிப்பது மனிதநேயம். எல்லா உயிர்களையும் அனைத்துயிர்களையும் நேசிப்பது ஆன்மநேயம். ஓரறிவுயிர்களாகிய தாவரங்கள் உட்பட எறும்பு ஈ முதலிய சிற்றுயிர்கள் உடபட எல்லா உயிர்களையும் ஒன்றாக, சமமாகக் கருதுவது உயிர்நேயம். இதைத்தான் ஆன்மநேயம் ஆன்மநேய ஒருமைப்பாடு, ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை என்றெல்லாம் வள்ளலார் இன்றைக்கு நூற்று நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே முழங்கினார்.

எல்லா உயிர்களையும் தம் உயிரைப்போல் காணவேண்டும் என்று முழங்கினார் வள்ளலார். எல்லா உயிர்களையும் தம் உயிர்போல் எண்ணி ஒழுகுவோரின் உளத்திலேதான் கடவுள் இருக்கிறார் என்று வள்ளலார் முழங்கினார்.

**எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்**
**தம்உயிர்போல் எண்ணி உள்ளே**
**ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்**
**யாவர்அவர் உளந்தான் சுத்த**
**சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்**
**இடம்எனநான் தெரிந்தேன் அந்த**
**வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்**
**சிந்தைமிக விழைந்த தாலோ.** -5297

உயிர்களெல்லாம் இறைவன் திருநடனம் புரியும் சபை என்கிறார். "உயிரெலாம் ஒரு நீ திருநடம் புரியும் ஒரு திருப்பொது என அறிந்தேன்" என்பது வள்ளலாரின் திருவருட்பா வரி (5426).

உயிர்க்களுக்குள்ளே நான் இருக்கிறேன், எனக்குள்ளே உயிர்கள் இருக்கின்றன. இதை உணர்ந்து உயிர் நலம்பரவுக என்று இறைவனே வள்ளலாருக்குச் சொன்னாராம்.

**"உயிருள் யாம் எம்முள்உயிர் இவைஉணர்ந்தே**
**உயிர் நலம் பரவுக"**

என்பது இறைவன் வள்ளலாருக்குச் சொன்னது (அருட்பெருஞ்ஜோதி அகவல் 4615-973; 74).

**உயிர்நலம் பரவுதல் வள்ளலார் கொள்கை.**
**உயிர்களிலே கடவுளைக் கண்டவர் வள்ளலார்.**
**உயிர்களிலே கடவுளைக் கட்ட வந்தவர் வள்ளலார்.**
**ஒன்றே குலம் - அது உயிர்க்குலம் என்பது வள்ளலார் கருத்து.**

சாதி சமயங்களைக் கண்டித்து வள்ளலார் பாடிய பாடல்கள் மிகப்பல. அவற்றையெல்லாம் இங்கு சிந்தனைக்குக் கொண்டு வருவது பொருந்தும். விரிவஞ்சி எடுத்துக்காட்டவில்லை *.

* புரட்சித்துறவி வள்ளலார் - மனிதநேயமும் ஆன்மநேயமும் - சாதியும் மதமும் என்ற நூல்களிற்காண்க. இந்நூலின் இப்பகுதிக்குத் தொடர்பான பலவற்றை அம்மூன்று நூல்களிலும் காணலாம். }

வள்ளலாரின் கடவுட் கொள்கை கடவுள் ஒருவரே அவரை ஒளி (ஜோதி) வடிவில் உண்மை அன்பால் வழிபட வேண்டும் பலதெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு கூடாது சிறுதெய்வங்களின் பேரால் உயிர்ப்பலி கூடாது முதலியவாம்.

**தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்**
**சேர்கதி பலபல செப்புகின்றாரும்**
**பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்**
**பொய்ச்சம யாதியை மெச்சுகின்றாரும்**
**மெய்வந்த திருவருள் விளக்கம்ஒன்றில்லார்**
**மேல்விளை வறிகிலர் வீண்கழிக் கின்றார்**
**எய்வந்த துன்பொழித் தவர்க்கறி வருள்வீர்**
**எனைப்பள்ளி யெழுப்பிமெய் இன்பந்தந் தீரே.** 4176

**உருவ ராகியும் அருவின ராகியும்**
**உருஅரு வினராயும்**
**ஒருவ ரேஉளார் கடவுள் கண்டறிமினோ**
**உலகுளீர் உணர்வின்றி**
**இருவ ராம்என்றும் மூவரே யாம்என்றும்**
**இயலும்ஐ வர்கள்என்றும்**
**எருவ ராய்உரைத் துழல்வதென் உடற்குயிர்**
**இரண்டுமுன் றெனலாமே** -5384

**எய்வகைசார் மதங்களிலே பொய்வகைச்சாத் திரங்கள்**
**எடுத்துரைத்தே எமதுதெய்வம் எமதுதெய்வம் என்று**
**கைவகையே கதறுகின்றீர் தெய்வம்ஒன்றென் றறியீர்**
**கரிபிடித்துக் கலகமிட்ட பெரியரினும் பெரியீர்**
**ஐவகைய பூதவுடம் பழிந்திடில்என் புரிவீர்**
**அழியுடம்பை அழியாமை ஆக்கும்வகை அறியீர்**
**உய்வகைஎன் தனித்தந்தை வருகின்ற தருணம்**
**உற்றதிவண் உற்றிடுவீர் பெற்றிடுவீர் உவப்பே** -5570

என்ற திருவருட்பாப் பாடல்கள் வள்ளலாரின் கடவுட் கொள்கைகளைக் காட்டும். இவை போன்று இன்னும் பல பாடல்கள் திருவருட்பாவில் உண்டு.

கடவுள் ஒருவரே, மனித குலம் மட்டுமின்றி உயிர்குலம் அனைத்தும் ஒன்றே என்ற வள்ளலாரின் கொள்கைக்குத் திருமூலரின் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்பது மூலமாகத் திகழ்கிறதன்றோ!.

## அன்பே சிவம்

அன்பே சிவம் என்கிறார் திருமூலர்.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே -270**

என்பது திருமூலரின் திருமந்திரம். ஒன்றே குலமும் ஒன்றே தேவனும் என்ற பாடலைப் போன்றே அன்பும் சிவமும் என்ற இப்பாடலும் ஒரு முத்திரைப் பாடல். ஒன்றே குலமும் பாடலில் அம்முதலடிக்கு மட்டுமே பொருள் தெளிவு. அன்பும் சிவமும் என்ற இப்பாடலில் நான்கு அடிகளுக்குமே பொருள் தெளிவு. இப்பாடலுக்குச் சொல்லுக்குச் சொல் வரிக்கு வரி பொருள் விரிக்கத் தேவையில்லை. சில பாடல்களுக்கு அவற்றின் மூலத்தை விடத் தெளிவாக, எளிதாக, உரை கூற முடியாது. தமிழின் அருமை அப்படி. அப்படிப்பட்ட பாடல்களுள் இது ஒன்று.

இப்பாடலில் பயின்ற சொற்களே திரும்பத் திரும்ப ஒரு வகை இன்னோசையோடு பயின்று செவிக்கும் சிந்தைக்கும் இனிமை பயக்கின்றன. அன்பும் சிவமும் இப்பாடலடிகலின் முதற்சீர்கள் என்றால், அறிவிலார், அறிகிலார், அறிந்தபின் என்பவை ஈற்றுச்சீர்கள். அன்பு சிவமாவது அன்பு சிவமாவது ஆரும் அறிந்தபின் என்று மடக்கி வருகிறது. சொல் நயம், பொருள் நயம், ஓசை நயம் முதலிய பல நயங்களும் இப்பாடலில் இனிது திகழ்வதைக் காண்கிறோம். பாடலில் கருத்து அன்பே சிவம் என்பது.

அன்பே சிவம், அன்பே சிவம், அன்பே சிவம் - சொல்லச் சொல்ல வாய் மணக்கிறது. எண்ண எண்ணச் சிந்தை மணக்கிறது. வள்ளலார் இதனை அடியொற்றி அப்படியே பாடுகிறார்.

**அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே**
**அன்பெனும் குடில்புகும் அரசே**
**அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே**
**அன்பெனும் கரத்தமர் அமுதே**
**அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே**
**அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே**
**அன்பெனும் அணுவுள் ளமைந்தபேர் ஒளியே**
**அன்புரு வாம்பர சிவமே - 3269**

**“அன்பே சிவம்” என்றார் திருமூலர்.**

“ அன்புருவாம் பரசிவமே” என்கிறார் வள்ளலார். அன்பே சிவம் என்பது தான் சைவம். உண்மைச் சைவம். அசல் சைவம். அதுதான் சன்மார்க்கமும்.

திருமந்திரத்தில் முதல் தந்திரத்தில் “அன்புடைமை” என்றே ஒரு அதிகாரம். அதற்கு அடுத்த அதிகாரம் “அன்பு செய்வாரை அறிவன் சிவன்” என்பது இரண்டு அதிகாரத்திலுமே பத்துப் பத்து மந்திரங்கள். அன்புடைமை அதிகாரத்தில் முதல் மந்திரம் அன்பும் சிவமும் என்பது.

திருமந்திரப் பாடலின் நான்கு அடிகளிலும் அடிக்கு அடி அன்பும் சிவமும் வருவது போன்று வள்ளலாரின் “அன்பெனும்பிடிக்குள்” பாடலிலும் அடிதோறும் அன்பு வருகிறது. நான்கு அடியிலும் அடிக்கு இருமுறை, நான்கு அடிகளை எட்டு வரிகளாக எழுதும்போது அச்சிடும்போது வரிக்கு வரி ஒரு முறையாக எட்டு முறை அன்பு வருகிறது.

இன்னொரு பாடலிலும் “அன்பென்பதே சிவம்” என்று வள்ளலார் கூறுகிறார். தமது வழிபடு குருவாகிய திருஞானசம்பந்தர் தமக்கு அறிவித்ததாகப் பாடுகிறார். வள்ளற் பெருமான் காலத்தில் திருவோத்தூரில் சிவஞான தேசிகன் என்றொரு ஞானி இருந்தார். அவருக்கும் வள்ளற் பெருமானுக்கும் பழக்கமுண்டு. அவரைத் திருஞான சம்பந்தராகவே உருவகித்து வள்ளலார் சில தோத்திரப் பாக்களைப் பாடியுள்ளார். அவற்றில் ஒன்றில் தான்

**“அன்பென்பதே சிவம் உணர்ந்திடுக எனஎனக்கு**
**அறிவித்த சுத்த அறிவே”**

என்று வள்ளற்பெருமான் பாடுகிறார் (திருஅருட்பா 2501)

அன்பே சிவம் - திருமூலர்

அன்பென்பதே சிவம்

அன்புருவாம் பரசிவம் - வள்ளலார்.

கருத்தொற்றுமை எப்படிப் போகிறது என்பதைப் பாருங்கள். நாமும் அன்பு மயமாய் வாழ்ந்தால் சிவமயமாகலாம். அன்புருவாய் வாழ்ந்தால் சிவமாகலாம்.

## <u>ஆறு அந்தங்கள்</u>

தத்துவ உலகில் ஆறு வகையான முடிவுகளைப் பெரியோர்கள் கண்டனர். அவை ஆறந்தம் எனப்படும். வடமொழியில் ஷடாந்தம். ஷட் - ஆறு. அந்தம் - முடிபு.

ஆறந்தங்களாவன 1. கலாந்தம் 2. நாதாந்தம் 3. யோகாந்தம் 4. போதாந்தம் 5. வேதாந்தம் 6. சித்தாந்தம்.

இவ் ஆறு அந்தங்களையும் கூறும் திருமந்திரச் செய்யுள்:

**வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்**
**நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்**
**ஓதத் தகுமெட் டியோகாந்த அந்தமும்**
**ஆதிக்க லாந்தமும் ஆறந்த மாமே -2370**

என்பது. இதற்கு அடுத்த மந்திரம் ஞானம்பெற விரும்புவோர் ஆறந்தங்களையும் தெளிவாக அறியவேண்டிய இன்றியமையாமையைக் கூறுகிறது.

**அந்தமோ ராறும் அறிவார் அதிசுத்தர்**
**அந்தமோ ராறும் அறிவார் அமலத்தர்**
**அந்தமோ ராறும் அறியார் அவர்தமக்**
**கந்தமோ டாதி அறியவொண் ணாதே -2371**

அந்தங்கள் ஓர் ஆறையும் அறிபவர் அதிசுத்தர்; அமலத்தர் (மலமற்றவர்). அந்தம் ஓர் ஆறையும் அறியாதவர்கள் அந்தத்தையும் ஆதியையும் (முதலையும் முடிவையும்) அறியமாட்டார்கள்.

திருமூலர் திருமந்திரத்தில் எட்டாந் தந்திரத்தில் ஆறந்தம் என்றே ஓர் அதிகாரம் உள்ளது. அதில் முப்பத்தைந்து மந்திரங்கள் உள்ளன. அவற்றுள் முதல் இரண்டு மந்திரங்களே மேலே எடுத்துக் காட்டியவை. முதல் மந்திரம் ஆறந்தங்களின் பெயர்களைத் தொகுத்துக்கூறுகிறது. ஆறு அந்தங்களைத் தனித்தனியே கூறும் பாடல்களும் உள்ளன. விரிவஞ்சி, ஈண்டு எடுத்துக்காட்ட இயலவில்லை.

ஆறு அந்தங்களையும் முதன் முதலிற்கூறும் தமிழ்நூல் திருமூலரின் திருமந்திரந்தான். ஆறு அந்தங்கள், நான்கு பாதங்கள், நான்கு மார்க்கங்கள், நான்கு வகை முத்திகள். அட்டாங்கயோகம், அட்டமாசித்தி என இவ்வாறு பல்வேறு தத்துவப்பொருள்களை வகுத்தும் தொகுத்தும் தமிழில் முதன்முதலிற் கூறுபவர் திருமூலர்தான். இதில் அவர் வல்லாதிவல்லவர். ஏறத்தாழ அவருக்கு எழுநூறு எண்ணூறு ஆண்டுகளுக்குப்பின் எழுந்த விரிவான சித்தாந்த சாத்திர நூல்களுக்கு முன்னோடியாகவும் ஆதாரமாகவும் அமைந்த நூல் திருமூலர் திருமந்திரமே.

வள்ளலார் தமது திருவருட்பாவில் பல இடங்களில் ஆறு அந்தங்களையும் அழகாகக் கூறுகிறார். கூறுவதோடு மட்டுமின்றி ஆறந்த அனுபவங்களையும் முழுமையாகப் பெற்றவர் வள்ளலார்.

நாதாந்த போதாந்த யோகாந்த வேதாந்த
நண்ணூறு கலாந்தம்உடனே
நவில்கின்ற சித்தாந்தம் என்னும் ஆறந்தத்தின்
ஞானமெய்க் கொடிநாட்டியே
மூதாண்ட கோடிக ளொடுஞ்சரா சரம்எலாம்
முன்னிப் படைத்தல்முதலாம்
முத்தொழிலும் இருதொழிலும் முன்னின்றியற்றிஐம்
மூர்த்திகளும் ஏவல்கேட்ப
வாதாந்தம் உற்றபல சத்திக ளொடுஞ்சத்தர்
வாய்ந்துபணி செய்யஇன்ப
மாராச்சி யத்திலே திருஅருட் செங்கோல்
வளத்தொடு செலுத்தும்அரசே
சூதாண்ட நெஞ்சினில் தோயாத நேயமே
துரியநடு நின்றசிவமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராஜபதியே -3667

இது திருவருட்பா ஆறாந்திருமுறையில் நடராஜபதி மாலைப் பாடல் ஆறாந்திருமுறை அருட்பெருஞ்ஜோதி அகவலிலும் ஆறந்தங்களைக் கூறும் பன்னிரண்டு அடிகள் உண்டு.

தூய கலாந்தச் சுகந்தரு வெளிஎனும்
ஆயசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி
ஞானயோ காந்த நடத்திரு வெளிஎனும்
ஆனியில் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
விமலபோதாந்தமா மெய்ப்பொருள் வெளிஎனும்
அமலசிற் சபையில் அருட்பெருஞ்ஜோதி
பெரிய நாதாநப் பெருநிலை வெளிஎனும்
அரியசிற் றம்பலத் தருட்பெருஞ் ஜோதி
சுத்தவே தாந்தத் துரியமேல் வெளிஎனும்
அத்தகு சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
சுத்தசித் தாந்தச் சுகப்பெரு வெளிஎனும்
அத்தனிச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி 4615(33-44)

திருவருட்பாப் பாடல்களிலன்றி, வள்ளற்பெருமானது உபதேசங்களிலும் உரைநடை நூல்களிலும்கூட ஆறந்தம் பற்றிய செய்திகள் கூறப்பெறுகின்றன.

ஷடாந்த சமரச சுத்த சிவ சன்மார்க்கம் என்பதில் ஷடாந்தம் என்பது யாது? வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ஆக ஆறு.

-பெருமானின் உபதேசக் குறிப்பு

இம் மெய்ம்மொழிப்பொருள் விளக்கத்தினெல்லை யெங்ஙனமெனின்:

யோகாந்த கலாந்த நாதாந்த போதாந்த வேதாந்த சித்தாந்த மென்னுஞ் சடாந்தானுபவ சாத்தியர்களு மவற்றை விரும்பி யவ்வழிக்கணின்ற சாதகர்களுக்கு மந்தரானுபவ திட்டாந்தமாக உபாசிக்க விளங்குகின்ற சிதம்பர ரகசியத்தைக் குறிக்கும் சிற்சபைக் கண்ணே, சேக்கிழாரென்னுந் தெய்வப்புலவர் பொருட் டிறைவர் பரமாகாய வாக்கான் மொழியப்பட்டுச் சமர சாநுபவ சாட்சாத்காரமாய் ஆறந்தத்தினு நடிக்கின்ற சிதம்பர நடனத் திருவருட் பதத்தை வாச்சிய லஷியமாகக் கொள்ளப்பட்டதாதலின். சடாந்த சமரச லக்ஷியப் பொருளெல்லையையுடையதென்க.

-உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம்

திருமூலர் திருமந்திரம் முதலாக வள்ளலார் திருவருட்பா வரை ஆறந்தங்கள் கூறப்பட்டாலும், ஆறு அந்தங்களும் இப்போது நாட்டில் வழக்கிலில்லை. அனுபவத்திலில்லை.

வேதாந்தம் சித்தாந்தம் என்ற இரண்டு அந்தங்களே பலரும் அறிய வியாபகமாக விளக்கமாக விளங்குகின்றன. ஏனைய நான்கு அந்தங்களும் வியாபகமாக இல்லை.

வேதாந்தத்துக்கு நூல்கள் உள்ளன; மடங்கள் உள்ளன; குருமார்கள் உள்ளனர். சித்தாந்தத்துக்கு நூல்கள் உள்ளன; மடங்கள் உள்ளன; குருமார்கள் உள்ளனர். மற்ற நான்கு அந்தங்களுக்கும் நூல்கள், மடங்கள், குருமார்களைக் காணோமே? அவற்றுக்கு என்ன ஆயிற்று? நான்கு அந்தங்களும் என்ன ஆயின? எளிதில் விடை கிடப்பதற்கில்லை!

இதற்கும் வள்ளலார் தான் விடையளிக்கிறார், விளக்கமளிக்கிறார். வள்ளலாருக்குமுன் இவ்விளக்கத்தை வேறெங்கும் காண்கிறோம்.

திருமூலர்தான் முதன்முதலில் வேதாந்த சித்தாந்த சமரசம் பேசினார். பின்னே தாயுமானவரும் வேதாந்த சித்தாந்த சமரசம் பேசினார். இவ்விருவரையும் அடியொற்றிய வள்ளலார் ஷடாந்த சமரம் (ஆறந்த சமரசம்) பேசுகிறார். தாம் கண்ட சன்மார்க்கத்துக்கு ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம் என்று பெயரிடுகிறார். ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம் இன்னதென்று நீண்ட உபதேசம் ஒன்றையும் செய்கிறார். அவ்வுபதேசத்தில் தான் வேதாந்த சித்தாந்தந்தவிர ஏனைய நான்கந்தங்களும் என்னவாயின என்பதைக் குறிப்பிடுகிறார். உபதேசத்தின் அப்பகுதி வருமாறு.

ஷடாந்த சமரச சுத்த சிவ சன்மார்க்கம் என்பதில் ஷடாந்தம் என்பது யாது? வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ஆக ஆறு. மேற்படி அந்தங்களின் அநுபவம், காலம் இடம் முதலிய வேறுபாடுகளால் ஏறிக்குறையும். ஆதலால் ஷடாந்தமும் வியாபகமில்லாமல் வேதாந்த சித்தாந்தத்தில் நான்காந்தமும் வியாப்பியமா யிருக்கின்றன. மேற்படி அந்தம் நான்கின் ஐக்கிய விபரம்: வேதாந்தத்தில் போதாந்த யோகாந்தமும் சித்தாந்தத்தில் நாதாந்த கலாந்தமும்

அடங்கியிருக்கின்றன. இந்த ஐக்கியம் பற்றி வேதாந்த சித்தாந்தமே இப்போது அனுபவத்தில் சுத்த வேதாந்த சுத்த சித்தாந்தமாய் வழங்குகின்றன.

-இராமலிங்க அடிகள் வரலாறு பக்கம் 257
திருஅருட்பா உரைநடைப்பகுதி பக்கம்298

அந்தங்களின் ஐக்கியம் பற்றி வள்ளற்பெருமான் கூறும் இவ்விளக்கம் யாமறிந்தவரை வேறு யாராலும் எந்நூலிலும் கூறப்பெறவில்லை.

**கலாந்தமும் நாதாந்தமும் சித்தாந்தத்தில்**
**அடங்கிவிட்டன.**
**யோகாந்தமும் போதாந்தமும் வேதாந்தத்தில்**
**அடங்கிவிட்டன.**

இவ்வாறு நான்கு அந்தங்களும் வேதாந்த சித்தாந்தத்தில் வியாப்பியமாகிவிட்டன. (வியாப்பியம் - கலந்து உள்ளாக விளங்குதல்). இவ்வாறு நான்கு அந்தங்களையும் வியாப்பியமாக்கிக் கொண்டு வேதாந்தமும் சித்தாந்தமும் வியாபகமாக உள்ளன. (வியாபகம் - வெளிப்படையாக விளங்குதல்).

## வள்ளலார் ஆறந்த அனுபவங்களையும் பெற்றவர்

ஷடாந்த சமரசம் பேசும் வள்ளற்பெருமான் ஷடாந்தானுபவ சித்திகளையும் பெற்றவர்.

“ஆறந்த நிலைகளின் அனுபவ நிறைவே” (3190) என்று இறைவனைத் துதிக்கும் வள்ளலார், “நாதாந்தத் திருவீதி நடந்து கடப்பேனோ” என்றும் “நாதாந்தத் திருவீதி நடப்பாயோ தோழி” என்றும் ஏக்கமுறும் வள்ளலார் பின்னாளில் ஆறந்த அனுபவங்களையும் முற்றாகப் பெற்று ஆறந்த வீதிகளிலும் ஆடல் செய்பவரானார். திருஅருட்பா ஆறாம் திருமுறை எண்பத்தைந்தாம் பதிகம் சிவானந்தத் தழுந்தல் பத்துப் பாடல்களும் பாடல்தோறும்.

**நாதாந்த நாட்டுக்கோர் நாயகன் ஆகி**
**.....................................................................**
**ஆரண வீதியில் ஆடச் செய்தீரே**
**அருட்பெருஞ்ஜோதி என் ஆண்டவர் நீரே 1-4645**
**போதாந்த நாட்டைப் புரக்கமேல் ஏற்றி**
**......................................................................**
**ஆகம வீதியில் ஆடச் செய்தீரே**
**அருட்பெருஞ்ஜோதி என் ஆண்டவர் நீரே 2-4646**
**சுத்த வேதாந்த வீதியில் ஆடச்செய்தீரே**
**அருட்பெருஞ்ஜோதி என் ஆண்டவர் நீரே3-4647**
**சுத்த சித்தாந்த.........வீதியில் ஆடச்செய்தீரே**
**அருட்பெருஞ்ஜோதி என் ஆண்டவர் நீரே4-4678**

**சுத்த நாதாந்த...........வீதியில் ஆடச் செய்தீரே**
**அருட்பெருஞ்ஜோதி என் ஆண்டவர் நீரே5-4679**
**சுத்த போதாந்த........வீதியில் ஆடச் செய்தீரே**
**அருட்பெருஞ்ஜோதி என் ஆண்டவர் நீரே6-4680**
**யோகாந்த.........வீதியில் ஆடச் செய்தீரே**
**அருட்பெருஞ்ஜோதி என் ஆண்டவர் நீரே7-4651**
**கலாந்த..........வீதியில் ஆடச் செய்தீரே**
**அருட்பெருஞ்ஜோதி என் ஆண்டவர் நீரே8-4652**
**அருளான வீதியில் ஆடச் செய்தீரே**
**அருட்பெருஞ்ஜோதி என் ஆண்டவர் நீரே9-4653**
**அருட்சோதி வீதியில் ஆடச்செய்தீரே**
**அருட்பெருஞ்ஜோதி என் ஆண்டவர் நீரே10-4654**

என்று கூறுவது; அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வள்ளலாருக்கு ஆறந்த வீதிகளிலும் ஆடல்செய்யும் பெரும்பேற்றை - அனுபவநிலையை - அருளினார் என்பதற்கு அகச் சான்றாகும்.

| | | |
|---|---|---|
| **ஆரண வீதி** | - | **வேத வீதி** |
| **ஆகம வீதி** | - | **ஆகம வீதி** |
| **வேதாந்த வீதி** | | |
| **சித்தாந்த வீதி** | | |
| **நாதாந்த வீதி** | - | **ஆறந்த வீதிகள்** |
| **போதாந்த வீதி** | | |
| **யோகாந்த வீதி** | | |
| **கலாந்த வீதி** | | |
| **அருளான வீதி** | - | **அருள் வீதி** |
| **அருட்சோதி வீதி** | - | **அருட்சோதி வீதி** |

என்று வேத ஆகம வீதிகளை முன்னும், ஆறந்த வீதிகளை இடையிலும், அருள் அருட்சோதி வீதிகளைப் பின் இறுதியிலும் வைத்துக் கூறியிருப்பது அழகியதாகும்.

வேத ஆகம அனுபவங்கள், ஆறந்த அனுபவங்கள், அருள் அருட்ஜோதி அனுபவங்கள் என்பது அனுபவப்படிமுறையும் (வரிசையும்) ஆகும்.

## நான்கு மார்க்கங்கள்

தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்ற நான்கு மார்க்கங்களைச் சைவம் கூறுகிறது. இநான்கு மார்க்கங்களே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று நான்கு பாதங்களாகவும் (சாதனங்களாகவும்) கூறப்

பெறுகின்றன. இந்நான்காலும் அடையப்பெறும் முத்திகள் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் எனக் கூறப்பெறுகின்றன.

நான்கு மார்க்கங்கள், நான்கு சாதனங்கள், நான்கு முத்திகள் ஆகியவற்றைக் கூறும் முதல் தமிழ் நூல் திருமூலர் திருமந்திரமே. திருமந்திரத்தில் இப்பன்னிரண்டும் பன்னிரண்டு அதிகாரத்தில் அழகாகப் கூறப்பெறுகின்றன.

எளியனல் தீப மிடல்மலர் கொய்தல்
அளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி
தனிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே

-திருமந்திரம் 1502

பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை
நேசித்திட் டன்னமும் நீசுத்தி செய்தன்மற்
றாசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே

-திருமந்திரம் 1496

ஆதார சோதனை யானாடி சுத்திகள்
மேதாதி யீரெண் கலாந்தத்து விண்ணொளி
போதா லயத்துப் புலன்கர ணம்புந்தி
சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே

-திருமந்திரம் 1492

தானவ னாகித் தானைந்தா மலஞ்செற்று
மோனம தாமொழிப் பான்முத்த ராவது
மீனமில் ஞானானு பூதியில் இன்பமுந்
தானவ னாயுற லானசன் மார்க்கமே

-திருமந்திரம் 1481

சன்மார்க்க சாதனந் தான்ஞான ஞேயமாம்
பின்மார்க்க சாதனம் பேதையர்க் காய்நிற்கும்
துன்மார்க்கம் விட்ட துரியத் துரிசற்றார்
சன்மார்க்கந் தானவ னாகுஞ்சன் மார்க்கமே

-திருமந்திரம் 1483

என வரும் நான்கு திருமந்திரங்களும் நான்கு மார்க்கங்களைக் கூறுபவை.

திருமந்திரத்துக்குப் பின்பு இவற்றை அழகாக வகுத்தும் தொகுத்தும் கூறும் சிவஞானசித்தியார்.

| சாதன் 4 | மார்க்கம் 4 | முத்தி 4 |
|---|---|---|
| சரியை | தாசமார்க்கம் | சாலோகம் |
| கிரியை | சற்புத்திரமார்க்கம் | சாமீபம் |
| யோகம் | சகமார்க்கம் | சாரூபம் |
| ஞானம் | சன்மார்க்கம் | சாயுச்சியம் |

சரியை முதலான சாதனம் நான்கில் ஒவ்வொன்றிலும் நான்கு பிரிவுகள் உண்டு. அவையாவன.

| | |
|---|---|
| சரியை | சரியையிற் சரியை<br>சரியையிற் கிரியை<br>சரியையிற் யோகம்<br>சரியையில் ஞானம் |
| கிரியை | கிரியையிற் சரியை<br>கிரியையிற் கிரியை<br>கிரியையில் யோகம் (கிரியா யோகம்)<br>கிரியையில் ஞானம் |
| ஞானம் | ஞானத்திற் சரியை (ஞான சரியை)<br>ஞானத்திற் கிரியை (ஞானக் கிரியை)<br>ஞானத்தில் யோகம் (ஞான யோகம்)<br>ஞானத்தில் ஞானம் |

தாசமார்க்கம் - தொண்டு நெறி

சற்புத்திரமார்க்கம் - மகன்மை நெறி

சகமார்க்கம் - தோழமை நெறி

சன்மார்க்கம் - காதல் நெறி, குருசீட நெறி

| | |
|---|---|
| **தாசமார்க்கத்தில்** | **இறைவனுக்கும் அடியாருக்கும் உள்ள உறவு ஆண்டான் அடிமை உறவு. (தாசன் - அடிமை - தொண்டு).** |
| **சற்புத்திரமார்க்கத்தில்** | **அப்பன் மகன் உறவு (மகன்மை உறவு)** |
| **சகமார்க்கத்தில்** | **ஒத்த இருநண்பர்கள் (நட்பு உறவு)** |
| **சன்மார்க்கத்தில்** | **நாயகன் நாயகி (தலைவன், தலைவி உறவு) - குரு சீடன் உறவு.** |

சைவ சமய குரவர் நால்வரும் நான்கு மார்க்கங்களை விளக்க வந்தவர்கள்.

| | |
|---|---|
| தாசமார்க்கத்தை விளக்க வந்தவர் | அப்பர் (திருநாவுக்கரசர்) |
| சற்புத்திரமார்க்கத்தை விளக்கவந்தவர் | சம்பந்தர் |
| சகமார்க்கத்தை விளக்க வந்தவர் | சுந்தரர் |
| சன்மார்க்கத்தை விளக்க வந்தவர் | மாணிக்கவாசகர். |

மாணிக்கவாசகர் விளக்கிய சைவ சன்மார்க்கத்தைச் சமரச சுத்த சன்மார்க்கமாக விளக்க வந்தவர் நால்வருக்குப்பின் ஐந்தாமவராக வந்த வள்ளலார்.

சைவம் கூறும் சன்மார்க்கத்தையே சமரச சுத்த சன்மார்க்கமாக விரித்து விளக்க வந்தவர் வள்ளலார். தாம் கண்ட மார்க்கத்திற்குச் "சமரச சுத்த சன்மார்க்கம்" என்றும், அதன் சங்கத்திற்குச் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்றும் வள்ளலார் பெயரிட்டார். சங்கம் தொடங்கப்பெற்ற காலத்தில் அதற்கிடப்பெற்ற பெயர் "சமரச வேத சன்மார்க்க சங்கம்" என்பதே. சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்பது பின்னர் மாற்றி இடப்பெற்ற பெயர். சமரச வேத சன்மார்க்க சங்கம் என்பதற்குப் பொருள் விளக்கம் செய்யும் வள்ளற்பெருமான்.

சமரச வேத சன்மார்க்க சங்கம் என்பதற்குப் பொருள்: எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவுநூல் முடிவான நான்காவது மார்க்கத்தை அனுஷ்டிக்கின்ற கூட்டமென்று கொள்க. மேற்படி மார்க்கம் நான்காவன: தாசமார்க்கம் சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என நான்கு.

-திருஅருட்பா உரைநடைப்பகுதி பக்கம் 298

எனக் கூறுகிறார். எனவே வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கத்திற்கு அடிப்படை சைவம் கூறும் நான்காவது மார்க்கமாகிய சன்மார்க்கமே என்பது தெளிவு.

வள்ளலார் ஆறு அந்தங்களின் அனுபவ நிலையைப் பெற்றது போன்றே நான்கு மார்க்கங்களின் அனுபவங்களையும் பெற்றவர்.

**சரியைநிலை நான்கும்ஒரு கிரியைநிலை நான்கும்**
**தனியோக நிலைநான்கும் தனித்தனிகண் டறிந்தேன்**
**உரியசிவ ஞானநிலை நான்கும்அருள் ஒளியால்**
**ஒன்றொன்றா அறிந்தேன்மேல் உண்மைநிலை பெற்றேன்**
**அரியசிவ சித்தாந்த வேதாந்த முதலாம்**
**ஆறந்த நிலைஅறிந்தேன் அப்பால்நின் றோங்கும்**
**பெரியசிவ அனுபவத்தால் சமரசசன் மார்க்கம்**
**பெற்றேன்இங் கிறவாமை உற்றேன்காண் தோழி -5806**

**அடியன் ஆக்கிப் பிள்ளை ஆக்கி நேயன் ஆக்கி யே**
**அடிகள் ஆக்கிக் கொண்டாய் என்னை அவலம் நீக்கி யே**

**-5035**

**அன்றேஎன்னை அடியன் ஆக்கி ஆண்ட சோதியே**
**அதன்பின் பிள்ளை ஆக்கி அருள்இங் களித்த சோதி யே**
**நன்றே மீட்டும் நேயன் ஆக்கி நயந்த சோதி யே**
**நானும் நீயும் ஒன்றென்றுரைத்து நல்கு சோதி யே -5059**

என்ற அருட்பாக்களால் வள்ளற்பெருமான் நான்கு மார்க்க அனுபவங்களையும் முற்றாகப் பெற்றமை பெறப்படும்.

**அடியன், பிள்ளை நேயன் - தாச சற்புத்திர சகமார்க்கம்**

**அடிகள், நானும் நீயும் ஒன்று - சன்மார்க்கம்**

இதுகாறும் கண்டவற்றால் வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கத்திற்கு அடிப்படையானவை திருமந்திரத்தில் உள என்பது விளங்கும்.

## அகநோக்கு - தத்துவப்பார்வை

எதையும் அகக்கண் கொண்டு பார்க்க வேண்டும் என்கிறார் திருமூலர்.

**முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்**

**அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்**
**மகட்குத் தாய் தன் மணாளனோ டாடிய**
**சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமா றெங்கனே -2944**

என்பது திருமூலர் திருமந்திரம். முகக்கண் கொண்டு காண்போரை மூடர் என்கிறார். அகக்கண் கொண்டு காண்பதை ஆனந்தம் என்கிறார். தாய் ஒருத்தி தன் கணவனோடுகூடி அடைந்த இன்பத்தை மகளுக்குச் சொல்லலாகுமோ? என்று கேட்கிறார். அகஇன்பம் அவரவர் அனுபவத்து அறியவேண்டியது.

கோயிலும் தெய்வமும் நமக்கு உள்ளேதான் இருக்கின்றன. அவற்றை வெளியே தேடுவதை விட உள்ளே தேடி (நாடி)க் காண்பதே அறிவுடைமை.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்(பு) ஆலயம்**
**வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலன் ஐந்தும் காளாமணி விளக்கே -1823**

என்பது திருமூலர் திருமந்திரம்

**உள்ளத்(து) ஒருவனை உள்ளூறு சோதியை**
**உள்ளம்விட்(டு) ஓரடி நீங்கா ஒருவனை**
**உள்ளமும் தானும் உடனே இருக்கினும்**
**உள்ளம் அவனைஉரு அறியாதே -431**

**உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்**
**மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெடப்**
**பள்ளமும் மேடும் பரந்து திரிவரே**
**கள்ள மனமுடைக் கல்வி இலோரே -509**

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்கிறார் திருமூலர். காயமே கோயிலாக என்கிறார் திருநாவுக்கரசர்.

**காயமே கோயில் ஆகக் கடிமனம் அடிமைஆக**
**வாய்மையே தூய்மை ஆக மனமணி இலிங்கம்ஆக**
**நேயமே நெய்யும் பாலநிறைய நீர் அமைய ஆட்டிப்**
**பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே**

என்பது திருநாவுக்கரசர் தேவாரம். இத்தேவாரம் அகப்பூசையைக் சொல்லுகிறது. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்ற திருமந்திரத்திற்கு காயமே கோயிலாக என்னும் இத்தேவாரம் மிகவும் பொருத்தமான எடுத்துக்காட்டாகும்.

உள்ளத்தின் உள்ளேயே எல்லா தீர்த்தங்களும் உள்ளன; அவற்றில் மெள்ளக் குடைந்து ஆடாமல் கல்வி இல்லாத கள்ளமன முடையவர்கள் பள்ளமும் மேடும் பரந்து திரிகிறார்கள் என்று சாடுகிறார் திருமூலர்.

வள்ளலாரும் அகநோக்கை, அகக்கண் கொண்டு காண்பதை, அகப்பூசையை வற்புறுத்துகிறார். புருவமத்தியே சிற்றம்பலம், ஞானசபை என்பது வள்ளலார் கருத்து. அகத்தே காணவேண்டிய ஒளி அனுபவத்தையே புறத்தே ஞானசபை ஜோதி தரிசனமாகக் காட்டியிருக்கிறார் வள்ளலார்.

**“திருந்தும்என் உள்ளத்திருக்கோயில் ஞான**
**சித்திபுரம் எனச் சத்தியம் கண்டேன்”** -3796

**“சத்திய ஞானசபை என்னுள் கண்டனன்**
**சன்மார்க்க சித்தியை நான் பெற்றுக் கொண்டனன்”**
-4909

என்பன வள்ளலார் திருவாக்குகள்; திருவருட்பா.

எதையும் எல்லாவற்றையும் அகநோக்கில் தத்துவநோக்கில் காண்பது வள்ளலாருக்கு வழக்கம். திருஅருட்பாப் பாடல்கள் பலவும் உபதேசங்களும் இதனைத் தெளிவாகக் காட்டும்.

திருமூலரும் வள்ளலாரும் அகநோக்கை, தத்துவப்பார்வையை வற்புறுத்தியவர்கள்.

## தன்னை அறிதல்

பதியை (கடவுளை) அறியவேண்டும்.
பசுவை (ஆன்மாவை; தன்னை) அறியவேண்டும்.
பாசத்தை(தளையை;கட்டை; ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களை) அறியவேண்டும்
அறிந்த பாசத்தை நீத்து பசு பதியாக ஆகவேண்டும்.

தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம் என்றொரு பழமொழியே ஏற்பட்டுவிட்டது திருமூலரிலிருந்து எழுந்த பழமொழிதான் இது. தன்னை அறிதல் முதற்படி. தலைவனை அறிதல் அடுத்த படி.

**தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்ச்சிக்கத் தான்இருந்தானே** - 2355

**என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்**
**என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்**
**என்னை அறிந்திட்டிருத்தலும் கைவிடா(து)**
**என்னை இட்டென்னை உசாவுகின்றானே -2366**

என்பதும் திருமந்திரம்.

**தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்**
**முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்**
**பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள்**
**சென்னியில் வைத்த சிவன் அருளாலே -2641**

என்பதும் திருமந்திரம். இத்திருமந்திரங்களுக்கெல்லாம் உரை கூற வேண்டியதில்லை. உரை வேண்டாது தானே விளங்கும் எளிமையும் அருமையும் நிறைந்தவை இப்பாடல்கள்.

தன்னைத்தான் யாரென்று, இன்னாரென்று, முதலில் அறியவேண்டும். நம்மை நாம் யாரென்று அறியவேண்டும். நான் யார்? என்றே ஒரு நூல் செய்தார் ரமணர். தன்னை அறிவதே அறிவு. பின்னை அறிவெல்லாம் பேயறிவு என்கிறார் திருமூலர்.

**முன்னை அறிவினிற் செய்த முதுதவம்**
**பின்னை அறிவினைப் பெற்றால் அறியலாம்**
**தன்னை அறிவது அறிவாம் அஃதன்றிப்**
**பின்னை அறிவது பேயறி வாகுமே -2318**

தன்னை அறிவது எப்படி? நாம் யார்? உடம்பா? கருவிகரணங்களா? உயிரா? முதலில் அறிய வேண்டியது நாம் இந்த உடம்பல்ல என்பது.

**“தன்னை அறியாது உடலை முன் தானென்றான்” (2264)**
**“உன்னை அறியாது உடலை முன் நானென்றாய்”(2279)**

என்பன திருமந்திர வரிகள்.

உடல் நாமன்று, கை கால்கள் முகம் கண் காது முதலிய உறுப்புகளும் நாமன்று மனம் முதலிய உள்ளுறுப்புகளும் (கரணங்களும்) நாமன்று. நாம் என்பது உயிர்; ஆன்மா. ஆன்மாவை (உயிரை) அறிந்தால் உயிர்க்குயிரான இறைவனை அறியலாம். தன்னை அறிதலாவது, தான் ஆன்மா என்று அறிதல். தன் ஆன்மதரத்தை அறிதல். தன் ஆன்மாவின் உண்மை நிலையை அறிதல்.

உங்களை நீங்கள் அறிவீர்களா? உங்களை உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டால், என்னை எனக்குத் தெரியாது! என்னை நான் அறியேன்! என்று எத்தனை பேர் கூறுவார்கள். என்னை எனக்குத் தெரியாதா? தன்னைத்தான் அறியாத மாந்தர்

தரணியில் ஒருவர் உண்டோ? என்னை அசடனாக எண்ணியோ கேட்டீர்? என்றுதானே கூறுவார்கள். இப்படித்தான் சொன்னான் அந்தக் காலத்து சீடன் ஒருவன். அவனுக்குக் குரு உபதேசிக்கிறார்.

கைவல்லிய நவநீதம் என்றொரு அருமையான வேதாந்தத் தமிழ் நூல். தாண்டவராய சுவாமிகள் செய்தது. அதில் குருசீட உரையாடகாலத் தன்னையறிதலைக் கூறும் செய்யுள்கள் இனிமையானவை; எளிதில் பொருள் விளங்குபவை.

<u>குரு உபதேசிக்கிறார்:</u>

**தன்னையும் தனகா தாரத் தலைவனை யும்கண்டானேல்**
**பின்னை அத் தலைவன்தானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன**
**உன்னைநீ அறிந்தாய் ஆகில் உனக்கொரு கேடும் இல்லை**
**என்னைநீ கேட்கை யாலே ஈதுப தேசித் தேனே -13**

**சீடன் கேட்கிறான்:**

**என்னைத்தான் சடனா உள்ளத் தெண்ணியோ சொன்னீர்ஐயா**
**தன்னைத்தான் அறியா மாந்தர் தரணியில் ஒருவர் உண்டோ**
**பின்னைத்தான் அவர்கள் எல்லாம் பிறந்திறந் துழலு வான்ஏன்**
**நின்னைத்தான் நம்பி னேற்குநிண்ணயம் அருளு வீரே. -14**

**குருமீண்டும் அருளுகிறார்:**

**இன்னது தேகம் தேகி இவன்என உணர்வான் யாவன்**
**அன்னவன் தன்னைத் தான்என் றறிந்தவர் ஆகும் என்றார்**
**சொன்னபின் தேகி யார் இத் தூலாம்அல் லாமல் என்றான்**
**பின்னது கேட்ட ஐயர் பீழையும் நகையும் கொண்டார் -15**

தேகம் இன்னது தேகி இவன் என உணர்பவன் தன்னைத்தான் அறிந்தவர் என்பது தாண்டவராயர் உபதேசம். தேகம் வேறு தேகி வேறு; உடம்பு வேறு, உடம்பை உடையவன் வேறு என்று அறிய வேண்டும். என் உடம்பு என்பதனாலேயே உடம்பு வேறு, உடம்பை உடைய நாம் வேறு என்பது பெறப்படுகிற தன்றோ. என்கை, என்கால், என்கண் என்று கூறுவதால் உடம்பு நாமன்று என்றறியலாம். நம்மை நாம் அறியவொட்டாது நம் கருவி கரணங்கள் நம்மை மறைத்துக் கொண்டுள்ளன. இந்த மறைப்பை நீக்கிக் கண்டால் நம்மை நாம் ஆன்மா என்று அறியலாம். திருமூலர் இதனை ஓர் அருமையான பாடலால் உதாரணத்தால் கூறுகிறார்.

**பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்**
**பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்**
**தன்னை மறைத்தது தன் கர ணங்களாம்**

**தன்னின்மறைந்தது தன் கரணங்களே -2289**

**அணி - ஆபரணம் ; நகை**
**பூடணம் - பூஷணம்.**

பொன் நகை ஒன்றை நகை என்ற எண்ணத்தோடு பார்க்கும் போது பொன் என்பது தோன்றாது. பொன் என்ற எண்ணத்தோடு பார்க்கும் போது நகை என்ற எண்ணம் தோன்றாது. பொன் நகையை ஒரு பெண் காண்பதிலும் பொற்செல்வன் ஒருவர் காண்பதிலும் இவ்வேறுபாடுண்டு. தங்க நகையைத் தட்டார் (பொற்கொல்லர்) பார்க்கும் போது முதலில் அதன் மாற்று (கோட்) எடை முதலியனவே அவர் கண்களுக்குப் படுகின்றன. அழகு முதலியவை அப்புறம் தான். அதே தங்க நகையைப் பெண்ணொருத்தி பார்க்கும் போது அவளுக்கு நகையே முதலில் தெரிகிறது. தங்கத்தின் தரமெல்லாம் அப்புறந்தான்.

இதைப்போல் ஆன்மா தன் கருவி கரணங்களே என்று எண்ணினால் ஆன்ம தரிசனம் இல்லை. ஆன்மா வேறு தேகம் வேறு என்று நோக்கும் போது கருவி கரணங்கள் மறையும். தேகமே தான் என்ற எண்ணத்தோடு பார்த்தால் நமக்கு ஆன்மா தெரிவதில்லை. கருவி கரணங்கள் ஆன்மாவை மறைக்கின்றன. கருவி கரணங்கள் நாமல்ல, நாம் அவற்றின் வேறாகிய ஆன்மா என்ற எண்ணத்தோடு பார்க்கும் போது ஆன்மா தெரிகிறது. கருவி கரணங்கள் மறைந்து விடுகின்றன. “தன்னை அறியாது உடலை முன் தானென்றான்” என்ற திருமந்திரமும் இதைத்தான் கூறுகிறது.

**மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்தின் மறைந்தது மாமத யானை**
**பரத்தை மறைத்தது பார்முதற் பூதமே**
**பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே -2290**

என்றொரு மந்திரம் உண்டு. பொன்னை மறைத்தது என்னும் மந்திரத்திற்கு அடுத்த மந்திரம் இது. இது பரதரிசனத்தை உணர்த்துகிறது. தன்னை யறிதலைப் பற்றிய மந்திரங்கள் ஆன்ம தரிசனத்தை உணர்த்துகின்றன.

திருமூலர், தாண்டவராயர் ஆகியோரின் அருமையான வாக்குகளை உட்கொண்டு வள்ளலார் தன்னை அறிந்தின்பமுற என்ற ஒரு சிறு தொடரால் தன்னை அறிவதைக் கூறுகிறார்.

**தன்னை அறிந் தின்பமுற வெண்ணிலாவே - ஒரு**
**தந்திரநீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே**

என்பது வள்ளலார் திருவருட்பா.

## <u>புலனடக்கம் - இந்திரிய ஒழுக்கம்</u>

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே

-திருமந்திரம் 2883.

பார்ப்பான் என்பது இங்கு பிராமணனைக் குறிப்பதன்று; ஆன்மாவைக் குறிக்கும்.

| | | |
|---|---|---|
| பார்ப்பான் அகத்திலே- | | ஆன்மா குடியிருக்கிற வீடாகிய நம் உடம்பிலே . |
| பாற்பசு ஐந்துண்டு | - | இந்திரியங்கள் ஐந்து உள்ளன. கண் காது நாக்கு மூக்கு மெய் ஆகிய ஐம்பொறிகளும் இங்கு பாற்பசுக்களாக உருவகிக்கப்பட்டுள்ளன. |
| மேய்ப்பாரும் இன்றி | - | மேய்ப்பார் இல்லாமல் |
| வெறித்துத் திரிகின்றன | - | அதன் அதன் போக்கிலே வெறி கொண்டு திரிகின்றன. |
| மேய்ப்பாரும் உண்டாய் | - | மேய்ப்பவர் இருந்து |
| வெறியும் அடங்கினால் | - | அடக்கி ஆளப்பட்டால் |
| பார்ப்பான் பசு ஐந்தும் | - | பஞ்சேந்திரியங்களும்(ஐம்பொறிகளும்) |
| பாலாய்ச் சொரியும் | - | இன்பப் பாலைச் சொரியும். ஆனந்தத்தைத் தரும். |

வெறித்துத் திரியும் ஐம்புலன்களை அடக்கி ஆளும் மேய்ப்பாளராக இருக்க வேண்டியது மனம். பொறி புலன்கள் புறக்கருவி. மனம் அகக்கருவி. அகக்கருவியாகிய மனம், புறக்கருவிகளாகிய பொறிபுலன்களை அடக்கி ஆள வேண்டும்.

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு -27

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணேஉள. -1101

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார் -6**

என்ற குறட்பாக்கள் இங்கே எண்ணத்தக்கன. புலனடக்கத்தை வள்ளலார் இந்திரிய ஒழுக்கம் என்று கூறுகிறார்.

சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம் என்று நான்கு ஒழுக்கங்களை வள்ளலார் உபதேசிக்கிறார்.

1. **இந்திரிய ஒழுக்கம் - இந்திரியங்களாகிய பொறி புலன்களை ஒழுங்குபடுத்துதல், அடக்கி ஆளுதல்.**

2. **கரண ஒழுக்கம் - அந்தக்கரணங்களாகிய (உட்கருவிகளாகிய) மனம் முதலியவற்றை ஒழுங்குபடுத்துதல் அடக்கி ஆளுதல்.**

3. **ஜீவ ஒழுக்கம் - மக்கள் அனைவரையும் தன்னைப் போல் பாவித்து ஒழுகுதல் - மனித நேயம்.**

4. **ஆன்ம ஒழுக்கம் - எல்லா உயிர்களையும் தன்னைப் போல் பாவித்து ஒழுகுதல். அனைத்துயிர் நேயம். ஆன்ம நேயம்.**

எல்லாவற்றிற்கும் இந்திரிய ஒழுக்கமே முதற்படி. வள்ளலார் கூறும் இந்திரிய ஒழுக்கத்தின் உண்மை திருமூலரின் திருமந்திரத்தில் பார்ப்பான் அகத்திலே என்ற பாடலில் விளங்கக் காண்கிறோம்.

பசுக்களை மேய்க்கும் ஆயனாகிய மூலன் உடம்பின் இருந்த திருமூலர் பஞ்சேந்திரியப் பசுக்களை மேய்த்துப் பேரின்பப் பால்கறக்கும் உபாயத்தைச் சொல்லுகிறார். கண்ணன் மாடு மேய்த்தான் என்பது இயேசு ஆடு மேய்த்தார் என்பதும் இந்த மேய்ப்பே. இயேசுநாதருக்கு நல்ல மேய்ப்பர் (குட் ஷெப்பர்டு Good Sheepherd), என்றொரு பெயர் கூறுவர். கண்ணபிரானும் நல்ல மேய்ப்பரே. ஆனாயநாயனாரும் நல்ல மேய்ப்பரே. முன்னைய மூலனும் பின்னைய திருமூலரும் நல்ல மேய்ப்பர்களே. ஆனால் இவர்களெல்லாம் ஆடு மேய்ப்பவரன்று; மாடு (பசு) மேய்ப்பவராவர். ஷெப்பர்டு அல்லர். கௌஹெர்டு Cowherd ஆவர். ஆன்மாக்களுக்குப் பசு என்பது சாத்திரப்பெயர். ஆடு மாடுகளை மேய்ப்பது எளிது. மக்கட் பசுக்களை, ஆன்மப்பசுக்களை, அவர்களது இந்திரியங்களை, பொறிபுலன்களை, மனத்தை மேய்ப்பது அவ்வளவு எளிதன்று.

மக்கள் ஆடு மாடுகளாக இருக்கும் வரை பெரியோர்கள் நல்ல மேய்ப்பர்களாக இருந்து மேய்க்கத்தானே வேண்டும். மேலை நாட்டு மக்கள் ஆடு (அதிலும் குறும்பாடு) போன்றவர்கள். கீழைத் தேயத்து மக்கள் மாடு அதிலும் பசுமாடு போன்றவர்கள். அதனால் தான் இயேசு அங்கு தோன்றினார். கண்ணனும் ஆனாயரும் திருமூலரும் இங்கே தோன்றினார்.

## உடம்பின் அருமை

காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா என்பன போன்றவை யெல்லாம் உடம்பின் நிலையாமையை (யாக்கை நிலையாமையை)க் கூறவந்த பொது உண்மைகள்; சிறப்பு உண்மையும் முடிந்த முடிவான பேருண்மையும் ஆகமாட்டா.

சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத வேண்டும் என்பது பழமொழி. அது போல உடம்பை வைத்துத்தான் நாம் முத்தி சித்திகளைப் பெறவேண்டும் என்பதே முடிவான பேருண்மை.

இவ்வுண்மையை வள்ளலாரும் திருமூலரும் அழுத்தமாகவும் அழகாகவும் கூறியுள்ளனர்.

இந்த உடம்பை அலக்ஷியம் பண்ணாமல் பொன்னைப் போல் பார்க்கவேண்டும்.
-உரைநடைப்பகுதி உபதேசக்குறிப்புகள் பக்கம் 297

முத்தியடைவதற்கு இம்மானிட தேகமே தக்கதாயும் வேறு தேகத்தா லதை யடைவது அரிதாயும் இருப்பதாதலால் எவ்விதத் தாலாயினும் தேகம் நீடித்திருக்கும் படி பாதுகாத்தல் வேண்டும். -பக்கம் 320

என்பன வள்ளற்பெருமானின் உபதேசம்.

**உடம்பார் அழியில் உயிராய் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே** -724

**உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று**
**உடம்பினை யான்இருந் தோம்புகின் றேனே** -725

என்பன திருமூலர் திருமந்திரம்.

உடம்பையும் உயிரையும் “உடம்பார்” “உயிரார்” என்று ஆர் விகுதி கொடுத்து அழகாகக் கூறுகிறார் திருமூலர். திருமூலரின் இந்த ஆட்சி திரு.வி.க.வை மிகவும் கவர்கிறது. கள்ளையும் காப்பியையும் சொல்லப் புகுந்த திரு.வி.க. “கள்ளார் அண்ணனார் காப்பியார் தம்பியார்” என்கிறார். திருமூலர் வாக்கின் தாக்கமல்லவா திரு.வி.க. வின் இக்கூற்று.

உடம்பு அழிந்தால் உயிரும் அழியும். உடம்பார் அழியில் உயிரார் அழிவர். திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார். இதைத்தான் வள்ளலார் முத்தியடைவதற்கு இம்மானிட தேகமே தக்கதாயும் வேறு தேகத்தால் அதை அடைவது அரிதாயும் இருப்பதாதலால் எவ்விதத்தாலாயினும் தேகம் நீடிக்கும்படிப் பாதுகாத்தல் வேண்டும் என்று கூறினார்.

“உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே” என்கிறார் உடம்பை வளர்த்தால் உயிரை வளர்க்கலாம். உடம்பை வளர்த்தால் என்பது இப்போது சாதாரணமாக எப்பொருளில் வழங்குகிறது. வீணில் உண்டு கொழுத்துத்திரிதல் என்ற பொருளிலல்லவா வழங்குகிறது. “உடம்பார் அழியில்” “உடம்பினை முன்னம்” என்ற இவ்விரு பாடல்களும் திருமந்திரத்தில் காய சித்தி உபாயம் என்ற அதிகாரத்தின் முதல் இரண்டு பாடல்கள் (மந்திரங்கள்).

உடம்பினை இழுக்கு என்று முன்னம் எண்ணி இருந்தாராம். பின்னே உடம்பினுக்குள்ளே உறுபொருளைக் கண்டாராம், உடம்பினுக்குள்ளே உத்தமன் கோயில் கொண்டான் என்று உடம்பினைத் தான் இருந்து ஓம்புகின்றாராம். எவ்வளவு அழகாகச் சொல்லுகிறார் திருமூலர்.

உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்பதையே வள்ளலார் மனிததேகத்தில் கடவுள் காரியப்படுவது என்று உபதேசிக்கிறார். உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்னும் திருமந்திரத்தையும் (1823) இங்கே எண்ணிப் பார்க்கவேண்டும்.

உடம்பின் அருமையைப் போன்றே உடம்பை வளர்க்கும் உபாயங்களையும் அதன்மூலம் உயிரை வளர்க்கும் உபாயங்களையும் வள்ளலார் திருஅருட்பாவிலும் உபதேசங்களிலும் கூறுகிறார்.

## புருவ மத்திய அனுபவம்

புருவமத்தியே சிற்றம்பலம். புருவமத்தியே ஞானசபை. இங்கேதான் நாம் இறைவனைக் காணவேண்டும் என்பது வள்ளற்பெருமானது அனுபவம்; உபதேசம்.

இந்தத் தேகத்தில் புருவமத்தியில் நமது ஆன்ம அறிவென்கின்ற கர்ப்பூரத்தில் கடவுள் அருளென்கின்ற தீபம் விளங்குவதாகப் பாவித்துப் பார்த்து, அதில் பழகிப்

பழகிக் கடவுளிடத்தே உண்மையாகிய அன்பையும் ஜீவர்களிடத்தே உண்மையான காருணியத்தையும் இடைவிடாமல் வைத்து ஓங்காரபஞ்சாக்ஷர ஞாபகஞ் செய்தல் வேண்டும். அவசியம்.

-உபதேசம் நித்தியகருமவிதி திருஅருட்பா,
உரைநடைப்பகுதி பக்கம் 244

எக்காலத்தும் புருவமத்தியின் கண்ணே நம்முடைய கரணத்தைச் செலுத்த வேண்டும்.

-உபதேசக் குறிப்புகள் திருஅருட்பா,
உபதேசப்பகுதி பக்கம் 249

ஆன்மாவுக்குச் சகல விளக்கமாகிய சாக்கிரஸ்தானம் லலாடம். ஆதலால் விசேடம் சிறந்தது லலடாத்தில் மூக்கு நுனியாகிய புருவமத்தி.

-உபதேசக் குறிப்புகள் திருஅருட்பா உரைநடைப்பகுதி
பக்கம் 268

என்பன வள்ளற்பெருமானது உபதேசங்களில் புருவமத்தியைப் பற்றிக்கூறும் இடங்கள் சிலவாம்.

**தனித்தபர நாதமுடித் தலத்தின்மிசைத் தலத்தே**
**தலைவரெலாம் வணங்கநின்ற தலைவன் நடராசன்**
**இனித்த சுகம் அறிந்துகொளா இளம்பருவந்தனிலே**
**என் புருவநடு இருந்தான் -3026**

**நாடு நடு நாட்டத்தில் உற்ற அனுபவ ஞானம்**
**நான் இளங் காலை அடைய**
**நல்கிய பெருங்கருணை அப்பனே -3678**

**கண்களிக்கப் புகை சிறிதும் காட்டாதே புருவக்**
**கலை நடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே - 4108**

**கையறவி லாதநடுக் கண் புருவப் பூட்டு**
**கண்டு களி கொண்டு திறந்துண்டு நடு நாட்டு**
**ஐயர் மிக உய்யும்வகை அப்பர் விளை யாட்டு**
**ஆடுவதென் றேமறைகள் பாடுவது பாட்டு -5258**

என்பன வள்ளற்பெருமானது புருவமத்திய அனுபவத்தைக் கூறும் திருஅருட்பாப் பாடல்களாம்.

புருவமத்திக்கு வள்ளற்பெருமான் விந்துஸ்தானம், அறிவிடம், லலாடம், முச்சுடரிடம், முச்சந்திமூலம், முப்பாழ், மகாமேரு, பாலம், கபாடஸ்தானம், சபாத்துவாரம். புருவமத்திய மூலம், நெற்றிக்கண், சிற்சபை எனப்பல பெயர்களை உபதேசங்களிற் குறிப்பிடுகிறார்.

புருவமத்திய சிற்றம்பலம் என்று வள்ளலார் கூறுவதற்கு ஆதாரமாக.

**நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி**
**உற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்**
**பற்றுக்குப் பற்றாப் பரம னிருந்திடஞ்**
**சிற்றம் பல மென்று சேர்ந்து கோண்டேனே-2770**

என்னும் திருமந்திரம் அமைந்துள்ளது.

**"கண்ணாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துள்**
**பண்ணாக்கி நின்ற பழம் பொருள் ஒன்றுண்(டு)" -599**

**"நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்" -604**

**"உச்சிக்குக் கீழது உண்ணாக்கு மேலது" -1780**

என்னும் திருமந்திரப் பகுதிகளும் புருவமத்தியைப் பற்றியனவாம்.

## இதயத்திலும் சிரத்திலும் கண்ணிலும் புருவமத்தியிலும்

## இறைவன் பாதம் பதித்தல்

தீட்சைகள் பலவகை. அவை எல்லாவற்றிலும் திருவடிதீட்சை சிறந்தது. திருவடி தீக்கையிலும் பலவகை உண்டு. தூலத் திருவடியைச் சூட்டுதல், சூக்குமத் திருவடியைப் பதித்தல், சிரத்திற் சூட்டுதல், இதயத்திற் பதித்தல், புருவமத்தியிற் பதித்தல், கண்களிற் பதித்தல் எனப் பலவகை.

வள்ளற்பெருமான் இறைவனிடம் நயன, வாசக, பரிச, அத்தமத்தகசையோக தீக்கைகளையும் திருவடி தீக்கையையும் பெற்றார். திருவடி தீக்கையிலும் தூலம் சூக்குமம் ஆகிய இரண்டையுமே பெற்றார். இப்பெரும் பேரனுபவங்க ளெல்லாம் திருவருட்பாவிற் பலவிடயங்களில் ஆங்காங்கே குறிப்பிடப் பெறுகின்றன.

அருட்பெருஞ்ஜோதி அகவலில் ஓரிடம்:

**" உளத்தினும் கண்ணினும் உயிரினும் எனது**
**குளத்தினும் நிரம்பிய குருசிவ பதியே" -4615(1037-38)**

என இரண்டு அடிகள். சிவபதியாகிய இறைவன் (அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்) குருவாகி வந்து வள்ளற்பெருமானது உள்ளத்திலும், உயிரிலும் கண்களிலும், புருவமத்தியிலும் நிரம்பியதாக இவ்விரண்டு அடிகளில் வள்ளற்பெருமான் கூறுகின்றார். குளம் - நெற்றி - புருவமத்தி.

இவ்வகை அனுபவங்களுக்கு, அனுக்கிரகங்களுக்கு ஆதாரம் போன்றதொரு மந்திரம் திருமந்திரத்தில் உள்ளது.

**இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்**
**பதிவித்த பாதப் பராபரன் நந்தி**
**கதிவைத்த வானும் மெய்காட் டியவானும்**
**விதிவைத்த வானும் விளம்பவொண் ணாதே -1596**

என்பது திருமந்திரம். இத்திருமந்திரமும் மேற்காட்டிய திருஅருட்பா வரிகளும் ஒத்த அனுபவங்களைக் கூறுகின்றனவன்றோ? இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும் பதிவித்த பாதப்பராபரன் நந்தி என்கிறார் திருமூலர். நாட்டம் - கண்.

உள்ளம், உயிர், கண், புருவமத்தி - இந்நான்கிடத்தும் திருவருள் நிரம்பியதை வள்ளலார் கூற இதயம் கண் சிரம் ஆகிய மூன்றிடத்தும் இறைவன் பாதம் பதித்ததைத் திருமூலர் கூறுகிறார். உள்ளம் உயிர் சிரம் புருவமத்தி ஆகிய இடங்களில் திருவருள் பதிதல் நிரம்புதல் பல நூல்களிற் காணக்கிடப்பது. கண்களில் பதிதல் நிரம்புதல் அரிய வழக்கு. வள்ளலாரின் இச்சன்மார்க்க அனுபவத்தின் உண்மை திருமந்திரத்தால் உறுதிப்படுதலைக் காண்கிறோம்.

## ஒருபண்டமாற்று - ஒருபரிவர்த்தனை அடியாரும் ஆண்டவனும்

## உடல் பொருள் ஆவிகளை மாற்றிக்கொள்ளல்

என் உடல் பொருள் ஆவியை நீ எடுத்துக் கொண்டு உன் உடல் பொருள் ஆவியை எனக்களிப்பாய் என வள்ளற்பெருமான் இறைவனை வேண்டுகின்றார்.

**படமுடியா தினித்துயரம் படமுடியாதரசே**
**பட்டதெல்லாம் போதும்இந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்**
**உடல்உயிராதியஎல்லாம்நீ எடுத்துக் கொண்டுன்**
**உடல்உயிராதிய எல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்**
**வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாய்என் கண்ணுள்**
**மணியேஎன் குருமணியே மாணிக்க மணியே**
**நடனசிகா மணியேஎன் நவமணியே ஞான**

நன்மணியே பொன்மணியே நடராஜ மணியே -3802

அளிப்பாய் என வேண்டிப் பாடும் பாடல் இது. இது போன்றே அளித்துவிட்டான் என்று வியந்து பாடும் பாடல்களும் பல உள்ளன.

"என்உயிரும் என்உடலும் என்பொருளும் யானே
இசைந்துகொடுத் திடவாங்கி இட்டதன்பின் மகிழ்ந்தே
தன்உயிரும் தன்உடலும் தன்பொருளும் எனக்கே
தந்துகலந்(து) எனைப்புணர்ந்த தனித்தபெருஞ் சுடரே"

-4149

"என்னையும் என்பொருளையும் என்ஆவியையும்
தான்கொண்டிங் கென்பால் அன்பால்
தன்னையும்தன் பொருளையும்தன் ஆவியையும்
களித்தளித்த தலைவன் தன்னை" -4672

"என்உடலும் என்பொருளும் என்உயிரும் தான்கொண்டான்
தன்உடலும் தன்பொருளும் தன்உயிரும் - என்னிடத்தே
தந்தான்..............." -5522

"தந்தேகம் எனக்களித்தார் தம்அருளும் பொருளும்
தம்மையும்இங் கெனக்களித்தார்..................
என்தேகம் அதிற்புகுந்தார்என்உளத்தே இருந்தார்
என்உயிரில் கலந்தநடத் திறையவர்..........." -5704

இப்படிப்பட்ட பாடல்கள் திருவருட்பாவில் இன்னும் பற்பல உண்டு. இறைவனும் வள்ளலாரும் தம் உடல் பொருள் ஆவிகளை மாற்றிக் கொண்ட அனுபவத்தை இப்பாடல்கள் கூறுகின்றன.

மாணிக்கவாசகரும் திருவாசகத்தில் இப்படி ஓர் அனுபவத்தைக் கூறுகிறார்.

தந்ததுஉன் தன்னைக் கொண்டதுஎன் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்?
அந்தம்ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீபெற்றது ஒன்று என்பால்?

சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந் துறைஉறை சிவனே
எந்தையே ஈசா உடல்இடம் கொண்டாய்
யான்இதற்கு இலன்ஓர் கைம்மாறே

**-திருவாசகம் 395**

**அன்றே என்தன் ஆவியும்**
**உடலும் உடைமை எல்லாமும்**
**குன்றே அனையாய் என்னை ஆட்**
**கொண்ட போதே கொண்டிலையோ?**
**இன்றோர் இடையூறு எனக் குண்டோ?**
**எண்தோள் முக்கண் எம்மானே**
**நன்றே செய்வாய் பிழை செய்வாய்**
**நானோ இதற்கு நாயகமே -திருவாசகம் 500**

மாணிக்கவாசகரும் இறைவனும் உடல் பொருள் ஆவிகளை மாற்றிக் கொண்ட அனுபவத்தை இத் திருவாசகப் பாடல்கள் இரண்டும் கூறுகின்றன.

மேலே எடுத்துக் காட்டிய திருவருட்பாப் பாக்களோடும். திருவாசகப் பாடல் இரண்டோடும் சேர்த்து ஒப்பிட்டுக் காண வேண்டிய பாக்கள் திருமந்திரத்தில் இரண்டு உள்ளன.

**உடல்பொருள் ஆவி உதகத்தால் கொண்டு**
**படர்வினை பற்றறப் பார்த்துக்கை வைத்து**
**நொடியின் அடிவைத்து நுண்ணுணர் வாக்கிக்**
**கடியப் பிறப்பறக் காட்டினன் நந்தியே -1778**

**பெட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை**
**ஒட்டடித் துள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின்**
**தட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும்**
**வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே -1781**

| | |
|---|---|
| உடல் பொருள் ஆவி | - என் உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றையும் |
| உதகத்தால் கொண்டு | - உதகம் - நீர் நீர் வார்த்துக் கொடுக்கப் பெற்று(தாரை வார்த்துக் கொடுக்கப்பெற்று) |
| படர்வினை பற்றற | - படந்துள்ளவினைப்பற்று அற |
| பார்த்து | - திருக்கண்ணால் நோக்கி திரு நோக்கஞ் செய்து நயனதீட்சை |

| | |
|---|---|
| | செய்து சட்சுதீட்சை செய்து |
| கைவைத்து | - தலை மீது கைவைத்து பரிசதீட்சை செய்து அத்தமத்தக சையோக தீட்சை செய்து. அத்தம்(உறஸ்தம்) கை. மஸ்தகம் - தலை. குரு தன் கையைச் சீடன் தலைமீது வைத்துச் செய்யும் அத்த மத்தக சையோக தீட்சை செய்து |
| நொடியின் அடிவைத்து | - உடனே நொடிப் பொழுதில் என் முடிமேல் தன் திருவடியை வைத்துத் திருவடிதீட்சை செய்து |
| நுண்ணுணர்வாக்கி | - என் உணர்வை நுண்ணுணர்வாக ஆக்கி |
| கடியப் பிறப்பற | - என் பிறப்பைக் கடிந்து அது அறுவதற்கு |
| காட்டினன் நந்தியே | - நந்தி காட்டினான் |

உதகத்தால் கொடுத்தல் தாரை வார்த்துக் கொடுத்தல் தாரைவார்த்துக் கொடுத்து விட்டால் பின்னுரிமை இல்லை. “உடல் பொருள் ஆவியும் உனக்கே பின் கடன் இன்றிக் கொடுத்தனன்” (3742) என வள்ளற்பெருமானும் திருவருட்பாப் பாடலொன்றிற் கூறுகிறார்.

“எனது தேக சுதந்தரத்தையும் யோக சுதந்தரத்தையும் ஜீவ சுதந்தரத்தையும் தேவரீர் திருவருட்கே சர்வ சுதந்தரமாகக் கொடுத்துவிட்டேன்.............இனி இத்தேக கத்தினிடத்தும் ஜீவ னிடத்தும் யோகப் பொருள்களினிடத்தும் தேவரீர் திருவருள் சாட்சியாக எனக்கு எவ்விதத்தும் யாதோர் சுதந்தரமும் தோற்றமாட்டாது. தேவரீர் திருவருட் சுதந்தரத்தை என்னிடத்தே வைத்தருளி மரணம் பிணி மூப்பு பயம் துன்பம் முதலிய அவத்தைக ளெல்லாவற்றையும் தவிர்த்து இத்தேகத்தையே நித்திய தேகமாக்கி எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வில் என்னை வாழ்வித்தல் வேண்டும்”

-சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்

என்று உரைநடை விண்ணப்பத்திலும் வேண்டுகிறார்.

இனி, திருமந்திரத்தில் மேலெடுத்துக் காட்டிய இரண்டாவது பாடலுக்கு வருவோம்.

**பெட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை**
**யொட்டடித் துள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின்**
**தட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும்**
**வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே** -1781

பெட்டடித்து எங்கும் பிதற்றித் திரிவேனை -

பெட்டு - பொய்

பெட்டடித்து - பொய்கூறி

பொய்கூறி எங்கும் பிதற்றித் திரியும் என்னை

யொட்டடித்து உள்அமர் மாசு எலாம் வாங்கிப் பின் -

ஒட்டு - தூசு

ஒட்டடித்து - தூசு தட்டி, தூசு போக்கி, (ஒட்டடை அடித்து)

உள்ளமர் - உள்ளே இருக்கும்

மாசு - அழுக்கு

மாசெலாம் வாங்கி - அழுக்கையெல்லாம் நீக்கி

மாசெலாம் வாங்கிப் பின் - அழுக்கையெல்லாம் நீக்கிய பின்பு

தட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும் -

தட்டு - தராசுத்தட்டு, துலைத்தட்டு

ஒக்க - இரண்டு தட்டுகளும் ஒத்திருக்க, சமநிலையில் நிற்க மாறினன் - மாற்றினன்.

என்னையும் தன்னையும் - என்னையும் தன்னையும் ஒருவருக் கொருவர் மாற்றினான். என்னைத் தானாக மாற்றினான். தன்னை நானாக மாற்றினான். நான் அவனாக,

அவன் நானாக மாற்றினான் நான் ஆனேன். அவன் நான் ஆனேன்.

வட்டமதுஒத்தது -

வட்டம் - வாசி, நாணய மாற்றுதலின் கழிவு, கழிவுப் பணம், கமிஷன் (commission)

ஒத்தது - ஒத்துப் போயிற்று.

வாணிபம் வாய்த்ததே - நன்றாக வாணிபம் (பண்டமாற்று வாணிபம்) ஆயிற்று நன்றாக பிசினஸ் (Business) ஆயிற்று.

ஒரு தட்டில் திருமூலர்
மற்றொரு தட்டில் சிவபெருமான்
தட்டுகள் இரண்டும் ஒத்துநின்றன.
(தட்டொக்கமாறினன்)

ஒருதட்டில் மாணிக்கவாசகர்
மற்றொரு தட்டில் சிவபெருமான்
தட்டுகள் இரண்டும் ஒத்துநின்றன
(தட்டொக்க மாறினன்)

ஒரு தட்டில் வள்ளலார்
மற்றொரு தட்டில் அருட்பெருஞ்ஜோதி
ஆண்டவர்
தட்டுகள் இரண்டும் ஒத்துநின்றன
(தட்டொக்க மாறினன்)

பண்டமாற்றிலும் பரிவர்த்தனையிலும் மதிப்பு ஒத்த பொருள்களைத்தான் மாற்றிக் கொள்ள இயலும்.

வில்லங்கம் உள்ள ஒரு சொத்தையும் வில்லங்கம் இல்லாத ஒரு சொத்தையும் பரிவர்த்தனை செய்து கொள்ள இயலாது.

நமக்கு எத்தனையோ வில்லங்கங்கள். இறைவனுக்கு ஒரு வில்லங்கமும் இல்லை. நாமும் இறைவனும் உடல்பொருள் ஆவிகளை மாற்றிக்கொள்ளுதல் எப்படி?

ஆணவம், கன்மம், மாயை முதலிய வில்லங்கங்களை, நரை, திரை, மூப்பு பிணி சாக்காடு போன்ற வில்லங்கங்களை நிவர்த்தி செய்து கொண்டு சர்வவில்லங்க

சுத்தியாக இருந்தால், வில்லங்கமற்ற இறைவனும் நாமும் உடல் பொருள் ஆவிகளைப் பண்டமாற்று, பரிவர்த்தனை செய்து கொள்ளலாம்.

இப்பரிவர்த்தனையில் "யார்கொலோ சதுரர்"? யார் சாமர்த்திய சாலி? என்று வியந்து வினவினார் மாணிக்கவாசகர். "வட்டமது ஒத்தது, வாணிபம் வாய்த்தது" என்று வியந்து ஓதினார் திருமூலர்.

அடியவரும் ஆண்டவனும் உடல் பொருள் ஆவிகளை மாற்றிக் கொள்வதைப் பசு கரணங்கள் சிவகரணங்களாதல், பசுகரணம் சிவகரணமாகிய அனுபூதி என்று சைவ சித்தாந்தம் கூறும். சைவ சித்தாந்தம் அரிதிற்கூறும் அதனைத் தெளிவாக எளிதிற்கூறுகிறார் வள்ளலார்.

வள்ளலாருக்கு முன் இதனைத் தாயுமானவர் கூறினார். அவருக்கு முன் மாணிக்கவாசகர் கூறினார். அவருக்கு முன் இதனை முதன் முதலிற் கூறியவர் திருமூலர்.

## பொன்னுடம்பு

சுத்ததேகம், பிரணவ தேகம், ஞானதேகம் என மூவகைத் தேக சித்திகளை வள்ளலார் கூறுகிறார்.

| | |
|---|---|
| சுத்ததேகம் | - ஒளி உடம்பு -பொன்னுடம்பு |
| பிரணவதேகம் | - ஒலி உடம்பு |
| ஞானதேகம் | - அருளுடம்பு |

**"முத்திறல் வடிவமும் முன்னியாங் கெய்துறும்**
**அத்திறல் எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி"** -4615 (237-38)

**"அழியா வடிவம் அவை மூன்றும் பெற்றேன்"** -5513

**"சுத்த வடிவும் சுகவடிவாம் ஓங்கார**
**நித்த வடிவும் நிறைந்தோங்கு - சித்தெனும் ஓர்**
**ஞான வடிவும் இங்கே நான் பெற்றேன்.........."** -5513

**"பொன் வடிவும் மந்திரமாம் வடிவும் வான் வடிவும்**
**கொடுத்தெனக்கு மணிமுடியும் சூட்டி"** -4150

**"திரைந்து நெகிழ்ந்த தோலுடம்பும்**
**செழும்பொன் உடம்பாய்த் திகழ்ந்தேனே"** -5482

**“பொன்வடிவம் தாங்கினேன் சத்தியமாத்தான்” -4832**

**“ஊன உடம்பே ஒளி உடம்பாய் ஓங்கிநிற்க” -4823**

**“சாகாமல் ஓங்கும் ஒளி வடிவம் பெற்றேன்” -4745**

என்பன சுத்த பிரணவ ஞான தேக சித்திகளைப் பெற்றதைக் கூறும் திருஅருட்பாப் பாடல்கள்.

உடம்பைப் பொன்னாக்கும் கலையைத் திருமந்திரப் பாடலொன்றும் அழகாக அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறது.

**எளிய வாதுசெய் வர்எங்கள் ஈசனை**
**ஒளியை உள்ளி உருகு மனத்தராய்த்**
**தெளிய ஓதிச் சிவாய நமவென்னும்**
**குளிகை யிட்டுப் பொன்னாக்குவன் கூட்டையே -2709**

என்பது ஒன்பதாம் தந்திரம் சூக்குமு பஞ்சாக்கரம் என்னும் அதிகாரத்தின் முதல் மந்திரம்.

“சிவாயநம என்னும் குளிகையை இட்டுப் பொன்னாக்குவன் இக்கூட்டையே” என்கிறார் திருமூலர். கூடு - உடம்பு.

சிவாய நம என்னும் குளிகையை இட்டுச் செம்பைப் பொன்னாக்கலாம். சிவாயநம எனச் செம்பு பொன்னாயிடும் என்பது திருமந்திரம் (903).

செம்பு பொன்னாதல் தாதுவாதம் - வகரவித்தை (வகரம் - தங்கம்)

உடம்பு பொன்னாதல் தேகவாதம் - தகரவித்தை (தகரம் - உடம்பு)

வகரவித்தை, தகரவித்தைகளை வள்ளலாரும் உபதேசங்களிற் குறிப்பிடுகிறார். வகரவித்தை ஏமசித்தி, தகரவித்தை தேகசித்தி. தேகசித்தியைப் பெறுவதற்காகவே, தேகத்தைப் பொன்னாக்குவதற்காகவே சித்தர்கள் செம்பைப் பொன்னாக்கிப் பரீட்சிப்பார்.

## மரணமிலாப் பெருவாழ்வு

வள்ளலார் என்றாலே ஜீவகாருண்யமும் மரணமிலாப் பெருவாழ்வும் தான் முன்னிற்கும்.

சன்மார்க்கத்தின் முடிவு சாகாதிருத்தலே சாகாதவனே சன்மார்க்கி என்கிறார் வள்ளலார் - உபதேசம்.

என்மார்க்கம் இறவாத சன்மார்க்கம் - 4960

என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் -5601

இவை போன்ற வரிகள் திருவருட்பாவில் நூற்றுக்கணக்கில் உண்டு.

வள்ளலாருக்கு மரணமில்லை அவரது பூத உடல் பிணமாக விழவில்லை. மண்ணில் சமாதி வைக்கப்படவில்லை. நெருப்பில் எரிக்கப்படவில்லை. உடம்போடே சித்திபெற்றவர் வள்ளலார்.

மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற வள்ளலார் உலக மக்கள் அனைவரையும் "மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்" என அறைகூவி அழைக்கிறார். (5576)

திருவருட்பாவில் ஆறாந்திருமுறையில் தொட்ட இடமெல்லாம் மரணமிலாப் பெருவாழ்வு தட்டுப்படும்.

திருமூலர் திருமந்திரத்திலும் மரணமிலாப் பெருவாழ்வைக் கூறுமிடங்கள் பல உண்டு.

**"கூற்றன் வருங்கால் குதிக்கலாம் ஆமே"** -172
**"கூற்றை உதைக்கும் குறியது வாமே"** -571
**"தேகத்துக் கென்றும் சிதைவில்லை யாமே"** -581
**"காலன் வார்த்தை கனாவிலும் இல்லையே"** -622
**"ஊன்றி இருக்க உடம் பழியாதே"** -728
**"இறக்கவும் வேண்டாம் இருக்கலு மாமே"** -801
**"சாவதும் இல்லை சதகோடி யூனே"** -803
**"சாதலும் வேண்டாம் சமாதி கைகூடினால்"** -1633

என்பன சிலவாகும்.

சன்மார்க்கத்தின் முடிவாகிய மரணமிலாப் பெருவாழ்வின் உண்மை திருமந்திரத்தில் ஆணித்தரமாக விளங்குகிறது.

**<u>கர்ப்பூரதேகசித்தி</u>**

இறைவன் திருமேனி கர்ப்பூரமணம் கமழ்வது என்கிறார் வள்ளலார்.

“கற்பூர வாசம் வீசும் பொற்பாம் திருமுகத்தே” -2979

“கண்களிக்கப் புகைசிறிதும் காட்டாதே புருவக்
கலைநடுவே விளங்குகின்ற கற்பூரவிளக்கே” -4108

“கற்பூர ஜோதி மருந்து - பசுங்
கணவர் மணம் அதுவென்றேன்...........” -4220

“கற்பூரம் மணக்கின்ற தென்னுடம்பு முழுதும்
கணவர்திரு மேனியிலே கலந்தமணம் அதுதான்” -5723

கட்டை போன்ற உடம்பு, பஞ்சு போன்ற உடம்பு. கற்பூரம் போன்ற உடம்பு என உடம்பில் மூன்று வகை பக்குவ நிலைகள் உண்டு. சாதாரண மனிதர்களின் உடம்பு கட்டை போன்றது. யோகிகளின் உடம்பு பஞ்சு போன்றது. ஞானிகளின் உடம்பு கர்ப்பூர பக்குவம் வாய்ந்தது.

மரக்கட்டையில் தீமூட்டினால் மரக்கட்டை எரிந்து கரிக்கட்டை எஞ்சும். எரிக்கப்பட்ட கட்டையின் அளவுக்கு அதன் கரிக்கட்டை (கரிக்கட்டிகள், கரித்துண்டுகள்) எஞ்சுகிறது. பருமன் குறையும். எடை குறையும். இதுபோல மரக்கட்டை போன்ற உடம்புகள் பிணமாகிவுழும். மண்ணுக்கோ நெருப்புக்கோ இரையாகும். சாதாரண மக்கள் இப்படிக் கட்டையை விட்டுவிடுவர்.

பஞ்சில் தீமுட்டினால் பஞ்சு வெந்து சாம்பலாகும். சிறிது கரிச்சாம்பலே எஞ்சும். மரக்கட்டையின் கரிபோல அதிகமாக இராது. பருமனும் எடையும் மிகக் குறையும். பஞ்சு போன்ற இரண்டாவது வகை உடம்புகளும் இங்கே விழுவனவே. ஆயினும் தம்தேகம் இன்ன காலத்தில் இன்ன இடத்தில் விழும் என்று அறிந்திருக்கக்கூடும். தாம் விரும்பிய காலத்தில் விரும்பிய இடத்தில் தேகத்தை விடவும் கூடும். யோகிகளின் தேகங்கள் இப்படிப்பட்டவை.

கற்பூரத்தில் தீமுட்டினால் எதுவும் எஞ்சாது. எஞ்சுவது ஒன்றுமில்லை. கர்ப்பூரத்திற்குத் தீ மூட்டவேண்டும் என்பதுகூட இல்லை. காற்றுப்பட வைத்தாலே கரைந்து போகும். இதுபோற் கர்ப்பூர பக்குவம் வாய்ந்த உடம்புகள் கரைந்து போகும். பிணமாக விழுந்து மண்ணுக்கோ நெருப்புக்கோ இரயாகா. இதனைத் திருமூலர்

**அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்
எழுகின்ற தீயில் கர்ப்பூரத்தை ஒக்கப்
பொழிகின்ற இவ்வுடல் போம்அப் பரத்தே** -2587

என்கிறார். தாயுமானவரும்

**சித்த நிருவிகற்பம் சேர்ந்தார் உடல் தீபம்**
**வைத்த கர்ப்பூரம் போல் வயங்கும் பராபரமே -245**

என்கிறார். திருமூலர் முன்மொழிவதைத் தாயுமானவர் வழிமொழிவது போன்று இல்லையா!

வள்ளலார் கற்பூர தேக சித்தி பெற்றவர். இக்கற்பூர தேகசித்தியின் உண்மைக்கு ஆதாரமாகத் திகழ்வது மேற்காட்டிய திருமந்திரம்.

## அகவை பன்னிரண்டும்

## எழுபத்திரண்டும் (வயது 12-72)

வள்ளற்பெருமான் ஒளி (ஜோதி) வழிபாட்டிற்காக வடலூரில் சத்தியஞானசபையைக் கட்டினார். அதன் வழிபாட்டிற்காக வகுத்த விதியில் ஞானசபைக்குள் பணிசெய்யப் புகுவோர் பன்னிரண்டு 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களாகவாவது எழுபத்திரண்டு (72) வயதிற்கு மேற்பட்ட பெரியவர்களாகவாவது இருக்க வேண்டும் என்று வயதுத்தகுதி விதித்தார். மற்றும் சில ஒழுக்கத் தகுதிகளையும் விதித்தார்.

12-72 என்று வயது வரம்பு விதிக்கக் காரணம் என்னவென்று எமது இளமையில் பல காலம் ஆராய்ந்தோம். நீண்ட ஆய்வுக்குப்பின் இறுதியில் ஒரு திருமந்திரம் பாடலால் 12-72 என்பதன் விளக்கம் கிடைத்தது. அவ்வருமைத் திருமந்திரம் இதுதான்:

**முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்**
**இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்**
**பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினில்**
**கெட்ட தெழுபதிற் கேடறி யீரே. -திருமந்திரம் 163**

(முட்டை - உடம்பு - முந்நூறு நாள் - பத்துமாதம். பார்மணம் - உலக வாசனை)

முட்டை பிறந்தது - பத்துமாதத்தில் உயிரோடு கூடிய உடம்பு பிறந்தது.

| | | |
|---|---|---|
| இட்டதுதான் இலை ஏதேனும் | - | முட்டைகளைப் பறவைகள் இடுவது போன்று இவ்வுடம்பாகிய முட்டையை எதுவும் (யாரும்) இடவில்லை. |
| ஏழைகள் | - | அறிவால் ஏழைகளே. |
| பட்டது பார்மணம் பன்னிரண்டாண்டினில் | - | பன்னிரண்டாம் ஆண்டில் பார்மணம் - உலக வாசனை பட்டது - தொடங்கிற்று. |
| கெட்டது எழுபதில் | - | எழுபதாம் ஆண்டில் நீங்கிற்று. |

ன்உலக வாசனை 12- இல் பட்டது. 70-இல் கெட்டது. பன்னிரண்டாம் வயதில் தொடங்கிற்று எழுபதாம் வயதில் நீங்கிற்று.

பன்னிரண்டு ஆண்டிற்கு உட்பட்டவர்கள் உலக வாசனையை அறியாதவர்கள். எழுபது (எழுபத்திரண்டு) ஆண்டிற்கு மேற்பட்டவர்கள் உலக வாசனைக்குரிய பருவத்தைக் கடந்தவர்கள். உலக வாசனை (காம இச்சை)க்குரிய பருவம் வராதவர்களோ அல்லது அப்பருவத்தைக் கடந்தவர்களோதான் ஞானசபைப் பணிக்கு உட்புகுதல் வேண்டும் என்பது வள்ளற்பெருமான் கருத்து எனத் தெளிவாயிற்று.

உலக வாசனை கெடும்பருவம் எழுபது என்று திருமூலர் கூற, வள்ளலார் எழுபத்திரண்டு என்று சொல்வதேன் என்பதையும் சிந்திக்கவேண்டும். வள்ளலார் எதையும் நுட்பதிட்பமாகக் கூறுபவர். முட்டை பிறந்தது முந்நூறு நாளினில் (10 மாதத்தில்) என்று திருமூலர் ஒரு கர்ப்ப காலத்தைக் குறிக்கிறார். ஆனால் வள்ளற்பெருமான் தம் கர்ப்பவாச காலத்தைக் கூறும் முறை மிகவும் வியப்புக்குரியது.

எக்காலமாகிய இயற்கை இன்பக் கடவுளே! தந்தை என்பவனது சுக்கிலப்பையின்கண் யான் வந்தமைந்த கணப்பொது தொடங்கி, தாய் என்பாளது சோனிதப் பையின்கண் சென்றடைந்த கணப்போதிற்கு முன் கணப்பொது வரையுமாக என்னால் ஒருவாறு அளவிடப்பட்ட ஒருகோடி ஒன்பது லக்ஷத்து அறுபதினாயிரம் கணப்பொது பரியந்தம்......................தாய் என்பவளது சோனிதப் பையின்கண் யான் வந்தமைந்த கணப்பொது தொடங்கி இவ்வுலகில் தோன்றிய கணப்போதிற்கு முன்கணப்போது வரையுமாக என்னால் ஒருவாறு அளவிடப்பட்ட ஆறுகோடி நாற்பத்தெட்டு லக்ஷங் கணப்பொது பரியந்தம்............. என்று தம் கர்ப்ப வாசகாலத்தைக் குறிப்பிடுகிறார்.

தந்தையின் கருவில் தான் இருந்த இரண்டு மாதத்தை 1,09,60,000 (ஒரு கோடி ஒன்பது லட்டத்து அறுபதாயிரம்) கணப்போது என்றும் தாயின் கர்ப்பத்தில் தான் இருந்த பத்து மாதத்தை 6,48,00,000 (ஆறு கோடி நாற்பத்தெட்டு லட்சம்)

கணப்போது என்றும் வள்ளற்பெருமான் நுட்பமாக (மிகத் துல்லியமாக)க் கணக்கிட்டுரைப்பது மிகவும் அருமைப்பாடுடையதாகும்.

இவ்வாறு நுட்பதிட்பமாக எதனையும் கணக்கிடும் வள்ளற்பெருமான் திருமூலர் எழுபது எனக் கூறியதை, எழுபத்திரண்டு எனக் கணக்கிடுகிறார் என்று கொள்ளலாம். எழுபத்திரண்டு, பன்னிரண்டின் மடங்காக (6X12=72) இருப்பதைக் காணலாம். மக்கட்கு வயது 100 என்பது பொது. 120 என்று ஒரு (சிறப்புக்) கணக்கும் உண்டு. 120-இல் பாதி 60 அரை ஆயுள் 5X12=60 மணிவிழாக் காலம். 6X12=72 உலக வாசனை நீங்கும் காலம். 10X12=120 முழுமை நிறை ஆயுள். இப்படியும் கருதலாம்.

70- இல் உலக வாசனை கெடுகிறது என்ற பொதுவான கொள்கையின் அடிப்படையில்தான் 70- ஆம் ஆண்டு நிறைவைப் பீமரத சாந்தி எனக் கொண்டாடுகின்றனர் போலும். 70 - ஆம் பீமரத சாந்தி என்ற வைதிக மரபைப் பலரும் அறிவர். 70- இல் உலக வாசனை நீங்குகிறது என்ற தத்துவ உண்மையை எத்தனை பேர் அறிவர்? வள்ளற்பெருமான் அதனையும் நுட்பமாகக் கணக்கிட்டு 72 என்று கொண்டு 12 வயதுக்குள் 72 வயதுக்குமேல் என்ற வரம்பை ஞானசபைப் பணிக்கு விதித்திருக்கிறார்.

வள்ளற்பெருமான் கூறும் இத்தத்துவ உண்மை திருமந்திரத்தால் விளங்குகிறதன்றோ?!.

**<u>அன்னாதானம் - மாகேசுவரபூசை</u>**

வள்ளலார் என்றாலே முதலில் நினைவு கொள்வது அன்னதானம், சைவ உணவு.

அன்னதானத்தைப் பற்றி அழகாகப் பாடுகிறார் திருமூலர்.

**<u>ஆர்க்கும் இடுமின்</u>**

**ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின்**
**பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்**
**வேட்கை உடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே** -250

திருமந்திரத்தில் முதல் தந்திரத்தில் தானச்சிறப்பு என்ற அதிகாரத்தில் இவ்வொரு மந்திரமே உள்ளது. ஒரு பாடல் ஒரு அதிகாரமாக அமைந்துள்ளது.

ஆர்க்கும் இடுமின் - யாருக்கும் கொடுங்கள் எல்லாருக்கும் கொடுங்கள்

| | | |
|---|---|---|
| அவர் இவர் என்னன்மின் | - | தெரிந்தவர் தெரியாதவர் பழகியவர் பழகாதவர் வேண்டியவர் வேண்டாதவர் இன்ன சாதியர் இன்ன மதத்தார் என்று பாராதீர்கள். |
| பார்த்திருந்து உண்மின் | - | யாராவது வரமாட்டார்களா என்று எதிர்பார்த்திருந்து அவர்களோடிருந்து உண்ணுங்கள் அவர்களுக்கு அளித்து உண்ணுாங்கள். |
| பழம்பொருள் | - | உண்டு எஞ்சிய |
| போற்றன்மின் | - | பொருள்களைப் பழஞ்சோறு பழங்கறி, அடித்த வேளைக்கு ஆகும் என்று தமக்கெனப் போற்றிச் சேமிக்காதீர்கள். |
| வேட்கை உடையீர் | - | ஆசை உடையவர்களாய் |
| விரைந்து ஒல்லை உண்ணன்மின் | - | அவசர அவசரமாக உண்ணாதீர்கள். (அவசர அவசரமாக அள்ளி அடைத்துக் கொள்ளாதீர்கள். நிதானமாக உண்ணுங்கள்.) |
| காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே | - | காக்கை கரைந்து இனத்தைச் சேர்த்துக்கொண்டு உண்ணுகிறது என்பதை அறியுங்கள். |

**காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**
**அன்னநீ ரார்க்கே உள** -திருக்குறள் 527

என்கிறார் திருவள்ளுவர். காக்கைகள் இரை கண்டபோது கரவாது (மறையாது) கரைந்து (இனத்தை அழைத்து) இனத்தோடு சேர்ந்து உண்ணும். ஆக்கமும் அப்படிப் பட்டவர்களுக்கே உண்டு என்கிறார் வள்ளுவர்.

“காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்” என்று சிவபோகவெள்ளத்தைப் புசிப்பதற்குச் செகத்தாரைச் சேர அழைக்கிறார் தாயுமானவர்.

காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே என்கிறார் திருமூலர். இங்குக்காலம் என்பதில் ஒரு நுட்பச் செய்தி அடங்கியுள்ளது.

காக்கை கரைந்துண்ணும் காலமும் உண்டு. கரையாது (கரந்து) தானே தனித்துண்ணும் காலமும் உண்டு.

உண்பதற்குமுன் காக்கைக்குச் சோறு வைப்பது பழைமையான வழக்கம். வீட்டுக்கூரையின் மீதோ பந்தரின் மீதோ முற்றத்திலோ காக்கைக்குச் சோறு வைப்பர். சோறெடுக்க வருகின்ற காகங்கள் 'கா' 'கா' என்று கரைந்து மற்ற காகங்களையும் அழைத்து இனத்தோடு கூட்டமாக உண்ணும். இது காகம் கரைந்துண்ணுங் காலம்.

ஒரு வீட்டு வாயிலில் சிறு குழந்தை ஒன்று கையில் வடையை வைத்துக்கொண்டு தின்னத் தொடங்குகிறது. அது தின்னத் தொடங்குமுன் எங்கிருந்தோ சரேலென ஒரே பாய்ச்சலாய் அம்புபோல் பறந்து வந்த காகம் குழந்தையின் கையிலிருந்து வடையை வெடுக்கென்று பிடுங்கிச் சென்றுவிட்டது. வடையை அலகால் பற்றிக்கொண்டு மரக்கிளையில் அமர்ந்த காகம் இப்போது கரையாது, இனத்தை அழைக்காது. தானே தனியாக வடையைத் தின்று தீர்த்துவிடும். ஏன் கரையவில்லை. இது திருட்டுவடை. அதனால் இனத்தை அழைக்காமல் திருட்டுத் தனமாகத் தானே தின்று தீர்த்துவிடுகிறது. இது காக்கை கரையாமல் உண்ணும் காலம்.

வீட்டுக் கூரையில் குடும்பத்தார் இட்ட சோறு (காக்கைப் பலி) உரிய இரை, அதனால் பகிரங்கமாக இனத்தை அழைத்து கரவாமல் கரைந்து உண்ணுகிறது.

உரிய சொத்து - பலரோடும் கூடி உண்பது.
திருட்டுச் சொத்து - தானே தனித்து உண்பது.

"காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே" என்பதில் இப்படி ஒரு கருத்தும் தொனிக்கிறது.

<u>யாவர்க்கும் ஆம்</u>

**யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை**
**யாவர்க்க மாம்பசு வுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரைதானே** -திருமந்திரம் 252

இறைவனுக்கு ஒரு பச்சிலையை கிள்ளிப் போட்டால் அதன் பலன் யாவருக்கும் ஆகும். பசுவுக்கு ஒருவாய் உணவு கொடுத்தால் அதன் புண்ணியம் யாவர்க்கும் ஆகும். நாம் உண்ணும் போது பிறருக்கு ஒருகைப்பிடி வழங்கினால் அப்புண்ணியம் யாவருக்கும் ஆகும். பிறருக்கு ஒரு இன்னுரை உரைத்தால் அது யாவருக்கும் ஆகும்.

நாள்தோறும் அல்லது வேளைதோறும் சமைக்க உலைவைக்கும் போது ஒரு பிடி அரிசி எடுத்து வைத்திருந்து அதனைச் சேர்த்து அன்னதானத்திற்கு வழங்கும் பிடி அரிசித்திட்டம் 'யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒருகைப்பிடி" என்னும் திருமூலர் திருவாக்கில் அடங்கியிருக்கிறது.

உண்ணும்போது ஒரு பிடி சோறு. உலையேற்றும்போது ஒருபிடி அரிசி யாவர்க்கும் ஆகும்.

<u>படமாடுங்கோயிலும் நடமாடுங்கோயிலும்</u>

**படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்**
**படமாடக் கோயில் பகவற்க தாமே -திருமந்திரம் 1857**

“படமாடக் கோயில்”, ‘நடமாடக் கோயில்’ என்பதற்குப் ‘படமாடுங் கோயில்’ நடமாடுங் கோயில்’ என்ற பாட பேதங்கள் திருப்பனந்தாள் பதிப்பில் அடிக்குறிப்பாகக் காட்டப்பெற்றுள்ளன. ‘படமாட’ ‘நடமாட’ என்பதிலும் ‘படமாடும்’ நடமாடும்’ என்பதே எளிதில் விளங்கக் கூடியதாக உள்ளது.

படமாடக் கோயில் (படமாடுங்கோயில்) - சித்திரப்படம். திரைச்சீலையில் எழுதப்பெற்ற சித்திரப்படம் ஆடும் கோயில். இறைவன் எழுந்தருளியுள்ள கற்கோயில்.

நடமாடக் கோயில் (நடமாடுங்கோயில்) - அங்கும் இங்கும் நடந்து திரியும் (நடமாடும்) மானிடக் கோயில். உயிர்க்கோயில்.

அடியார்களைத்தான் நடமாடக் கோயில் நடமாடுங்கோயில் என்று குறிப்பிடுகிறார். கல்வியறிவிற் சிறந்த அறிஞர்களை நடமாடும் பல்கலைக்கழகம் என்று இன்று சொல்லுகிறோமன்றோ? அப்படித்தான் அன்பறி வொழுக்கங்களிற் சிறந்த அடியார்களை நடமாடுங்கோயில் என்கிறார் திருமூலர்.

| | | |
|---|---|---|
| படமாடுங்கோயில் | - | படமாடுங்கோயிலில் உள்ள |
| பகவற்கு | - | இறைவனுக்கு |
| ஒன்றுஈயில் | - | ஒன்றைக்கொடுத்தால் |
| நடமாடுங்கோயில் | - | நடமாடுங்கோயிலாகிய |
| நம்பர்க்கு | - | அடியார்களுக்கு |
| அங்குஆகா | - | அதுஆகாது |
| நடமாடும் கோயில் | - | நடமாடுங்கோயிலாகிய |
| நம்பர்க்கு | - | அடியார்களுக்கு |

| | | |
|---|---|---|
| ஒன்றூஈயில் | - | ஒன்றைக்கொடுத்தால் |
| படமாடும் கோயில் | - | கற்கோயிலில் உள்ள |
| பகவர்க்கு | - | இறைவனுக்கு |
| அது ஆமே | - | அது ஆகும். |

ஆண்டவனுக்குக் கொடுத்தது அடியார்களுக்கு ஆகாது; போய்ச் சேராது. ஆனால் அடியார்களுக்குக் கொடுத்ததோ ஆண்டவனுக்குக் கொடுத்ததாகும்; போய்ச் சேரும்.

ஆண்டவனுக்குச் செய்த நிவேதனம் ஆண்டவனுக்கேதான்; ஆண்டவனுக்கு மட்டுமேதான். ஆனால் அவன் அடியார்களுக்குச் செய்த நிவேதனம், அடியார்களுக்கு மட்டுமன்று, அடியார்கள்மூலமாக ஆண்டவனுக்கும் ஆகும், சென்று சேரும்.

ஆண்டவனுக்குச் செய்தது அடியார்களுக்குச் செய்ததாகாது. அடியார்களுக்குச் செய்தது ஆண்டவனுக்குச் செய்ததாகும். இக்கால மொழியில் சொல்வதானால் மக்களுக்குச் செய்தது மகேசனுக்குச் செய்ததாகும். 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என மகேசன் ஒருவன் இருப்பதையே நம்பாத, ஒப்புக் கொள்ளாத நாத்திகர்களும் வாய்ப்பறை ஆர்க்கிறார்களல்லவா?

கடவுளை ஈஸ்வரன் என்று வழங்கும் சைவம் அவன் அடியார்களை மாகேஸ்வரர் (மகா ஈஸ்வரர்) என்று வழங்குகிறது. ஆண்டவனுக்கு மகா அடைமொழி கொடுக்கப்படவில்லை. அவன் வெறும் ஈஸ்வரன். ஆனால் அவன் அடியார்களே மகாஈஸ்வரர்கள். மகா என்ற அடைமொழியைப் பெறுகிறார்கள். அவர்களுக்கு அன்னமிடுவது மாகேஸ்வரபூஜை என்று சொல்லப்பெறுகிறது.

ஏழைகளுக்கு அன்னமளிப்பது அன்னதானம் சாதாரணமாக, பொதுவாக, பலருக்கும் இடுவது அன்னம்பாலிப்பு அடியார்களுக்கும் துறவிகளுக்கும் அன்னம்படைப்பு மாகேஸ்வரபூஜை.

அன்னதானம், அன்னம்பாலிப்பு, மாகேஸ்வரபூஜை என்ற பெயர்களை இவ்வாறு விளங்கிக் கொள்ள வேண்டும். திருமூலர் திருமந்திரத்தில் சிவபூஜை, குருபூஜை, மாகேஸ்வரபூஜை என்று மூன்று பூஜைகளை மூன்று அதிகாரத்திற் கூறுகிறார்.

இவற்றிற்குநேர் மாறான, சிவநிந்தை, குருநிந்தை, மாகேஸ்வர நிந்தை ஆகிய மூன்று நிந்தை மூன்று அதிகாரங்களிற் கூறுகிறார். நித்தைகளைத் தவிர்க்க வேண்டும். பூசனைகளைச் செய்ய வேண்டும்.

மாகேஸ்வரபூஜை அதிகாரத்தில் இன்னும் சில மந்திரங்களில் மாகேஸ்வரபூசையின் சிறப்பை நுட்பதிட்பமாக வலியுறுத்திக் கூறுகிறார்.

**தண்டறு சிந்தை தபோதனர் தாமகிழ்ந்(து)**
**உண்டது மூன்று புவனமும் உண்டது**
**கொண்டது மூன்று புவனமும் கொண்டது என்(று)**
**எண்டிசைநந்தி எடுத்துரைத் தானே.** -1858

| | | |
|---|---|---|
| தண்டறு சிந்தை | - | அடியார்கள் |
| தாபோதனர் | | |
| தாம் மகிழ்ந்து உண்டது | - | அடியார்கள் மகிழ்ந்து உண்டது. |
| மூன்று புவனமும் | - | மூன்று உலகங்களும் |
| உண்டது | - | உண்டதுபோல |
| கொண்டது | - | அடியார்கள் ஏற்றுக்கொண்டது |
| மூன்று புவனமும் | - | மூன்று உலகங்களும் |
| கொண்டது | | கொண்டது போல |
| என்று எண்திசை | - | என்று எட்டுத்திசைக்கும் |
| நந்தி எடுத்துரைத்தானே | - | நாயகனாகிய நந்தி எடுத்துக் கூறினார், உபதேசித்தார். |

**அடியார்கள் உண்டது மூன்று உலகமும் உண்டது!**
**அடியார்கள் கொண்டது மூன்று உலகமும் கொண்டது!**
**உண்டது கொண்டது என இரண்டைக் கூறுகிறார்**
**உண்டது உணவு என்பதில் ஐயத்திற்கு இடமில்லை**
**கொண்டது யாது? உடை என உய்த்துணர்க**
**அடியார்களுக்கு உணவளிப்பதோடு உடையும் அளிக்கவேண்டும்.**

இன்றும் மாகேஸ்வர பூஜை. குருபூஜைகளில் அடியார்களுக்கு உணவு உடை ஆகிய இரண்டும் அளிக்கப்பெற்று வருவதைக் காணலாம்.

அடியார்களுக்கு அளித்தது மூவுலகுக்கும் அளித்தது என்று கூறிய திருமூலர் அடுத்த மந்திரத்தில், மும்மூர்த்திகளுக்கும் அளித்தது. மூவேழு தலைமுறை முன்னோர்க்கும் அளித்தது என்கிறார்.

**மாத்திர ஒன்றினில் மன்னி அமர்ந்துறை**
**ஆத்தனுக் கீந்த அரும்பொரு ளானது**
**மூர்த்திகள் மூவர்க்கும் மூவேழ் குரவர்க்கும்**
**தீர்த்தம தாம்அது தேர்ந்து கொளீரே** -1859

என்கிறார்.

ஆயுரம் அக்கிரகாரங்கள் அமைத்து அந்தணர்களுக்கு அவற்றைத் தானமாகக் கொடுத்தாலும், ஆயிரம் கோயில்கள் கட்டிக் கும்பாபிடேகம் செய்து முடித்தாலும், ஞானி ஒருவருக்குப் பகல் ஒருவேளை உணவு படைக்கும் பலத்திற்கு அவை நிகராகாது என்கிறார். நிகராகாது என்று சொன்னதோடு நிற்கவில்லை. 'நிகரிலை என்பது நிச்சயந்தானே' என்று நிச்சயப்படுத்திக் கூறுகிறார்.

**அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயில்என்**
**சிகரம் ஆயிரம் செய்து முடிக்கில்என்**
**பகரு ஞானி பகலூண் பலத்திற்கு**
**நிகரிலை என்பது நிச்சயந் தானே** -1860

அகரம் - அக்கிரகாரம். சிகரம் - கோயில். அக்கிரகாரம் அமைத்துக் கொடுத்தாலும் கோயில் கட்டிக் கும்பாபிடேகம் செய்வதும் (அக்கிரகாரப் பிரதிட்டை, ஆலயம் பிரதிட்டை) பெரும் புண்ணியங்கள் என்பர். ஆயிரம் அக்கிரகாரங்கள் கட்டிய புண்ணியமும் ஆயிரம் கோயில்கள் கட்டிய புண்ணியமும் ஒரு ஞானிக்கு ஒரு வேளை உணவு படைக்கும் புண்ணியத்திற்கு நிகராகாது என்கிறார் திருமூலர். 'பகலூண் பலத்திற்கு' என்றதில் பலம் - புண்ணிய பலம். புண்ணியத்தைப் பலம் என்கிறார். பகலூண் (பகலுணவு) என்று பகலை ஏன் சொன்னாரென்றால் ஞானிகள் பகல் ஒரு வேளையே உண்பர். இரவில் உண்ணார். இரவுணாக் கொள்ளார். பகல் ஒரு வேளையுணவும் உச்சிப் போதிலேயே கொள்வர். "உச்சியம் போதாக பிச்சை பிடித்துண்டு" என்று திருமூலரே சொல்கிறார். (1885) போசனவிதி என்னும் அதிகாரத்து மந்திரத்தில்.

இதுவரை கூறியவை அனைத்திற்கும் சிகரமாக ஒன்றைக் கூறுகிறார். வேதப்பிராமணர் ஒரு கோடி பேருக்கு உணவளிப்பதைவிட, திருநீறு அணிந்த சிவனடியார் ஒருவருக்கு ஒரு பிடி உணவிட நினைப்பது பெரிய புண்ணியம் என்கிறார். உணவிடுவது என்று சொல்லவில்லை உணவிட நினைப்பது என்று சொல்லுகிறார்.

**ஆறிடும் வேள்வி அருமறை நூலவர்**
**கூறிடும் அந்தணர் கோடிபேர் உண்பதில்**
**நீறிடும் தொண்டர் நினைவிற் பயனிலை**
**பேறெனில் ஓர்பிடி பேறது வாகுமே** -1861

‘அந்தணர் கோடிபேர் உண்பதில் நீறிடும் தொண்டர் நினைவின் பயனிலை’ என்பதை மீண்டும் மீண்டும் கருதுக! அந்தணர் கோடி பேரை உண்பிப்பது நீறிடும் தொண்டர் ஒருவரை உண்பிப்பதற்குச் சமமாகாது.

‘ஆறிடும் வேள்வி அருமறை நூலவர் கூறிடும் அந்தணர்’ என்றது வேதப் பிராமணரை ‘நீறிடும் தொண்டர்’ என்றது சிவனடியாரை, இச்சிவனடியார் பிராமணரல்லாதார், எச்சாதியாராகவுமிருக்கலாம் என்பது கருத்து. அந்தணர்க்கு அன்னதானம் செய்வதே புண்ணியம் என்றிருந்தது அந்தக்காலம். அக்காலத்தில் திருமூலர் இதனைப் பாடுகிறார். பிராமண போஜனத்திற் கென்றே அன்னசாத்திரங்கள் கட்டப்பெற்றன. அக்காலத்தில் அதனை மறுத்து, அடியார்களுள் ஜாதி வித்தியாசம் பாராதே! அன்னதானத்தில் ஜாதி வித்தியாசம் பாராதே என்கிறார் திருமூலர். “ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்” (250) என்றதும் இதுதான்.

## படமாடுங்கோயில் நடமாடுங்கோயில் பணிகளில் வள்ளலார்

படமாடுங்கோயில் நடமாடுங்கோயில் ஆகிய இரண்டிற்குமே வள்ளலார் பணி செய்திருக்கிறார்.

| | | |
|---|---|---|
| நடமாடுங்கோயில் | - | சத்திய தருமச்சாலை |
| நம்பர் பணி | - | அனைவர்க்கும் அன்னமளிப்பது |
| படமாடுங்கோயில் பகவர் பணி | - | சத்தியஞானசபை - ஜோதி வழிபாடு, ஜோதி தரிசனம் |

நடமாடுங்கோயில் நம்பர் பணியைத்தான் முதலில் தொடங்கினார். பின்னர்தான் படமாடுங்கோயில் பகவர் பணியைச் செய்தார்.

படமாடுங்கோயில் பகவரை நடமாடுங்கோயில் நம்பர்களில் காணவேண்டும் என்பது வள்ளலார் கருத்து.

நடமாடுங்கோயில் நம்பர் சிவனடியார்கள் என்பது பழம்பொருள், சிறப்புப்பொருள். மக்கள் எல்லாரும், எல்லா உயிர்களும் என்பது வள்ளலார் கருத்திற்கியைந்த புதுப்பொருள், பொதுப்பொருள்.

## புலால் மறுத்தல்

திருவள்ளுவர், திருக்குறளில் புலால் மறுத்தல் என்றொரு அதிகாரத்தைச் செய்திருப்பதைப் போன்றே திருமூலரும் தமது திருமந்திரத்தில் புலால் மறுத்தல் என்று

ஒரு அதிகாரத்தைச் செய்திருக்கிறார். இரண்டே இரண்டு மந்திரங்கள்தான் என்றாலும் அழுத்தந்திருத்தமாக அமைந்துள்ளன. புலால் மறுத்தல் என்பதே தலைப்பாக அமைந்துள்ளது.

திருக்குறளுக்கும் திருமந்திரத்திற்கும் ஒற்றுமைகள் பல உள்ளன. குறட் கருத்துகள், குறட்டொடர்கள் பல திருமந்திரத்திற் காணப்பெறுகின்றன. திருமூலர் திருக்குறனை நன்கு அறிந்திருக்கிறார். நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். தம் கருத்துக்கள் சில பலவற்றிற்குத் திருக்குறளை அரணாகக் கொண்டிருக்கிறார்.

**பொல்லாப் புலாலை நுகரும் புலையரை**
**எல்லாருங் காண இயமன்தன் தூதுவர்**
**செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்**
**மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே. -திருமந்திரம் 199**

புலாலைப் பொல்லாதது என்கிறார். பொல்லாப் புலால் என்கிறார். புலாலை நுகர்பவர்களைப் புலையர் என்கிறார். புலாலை நுகரும் புலையர்களை எமதூதர்கள் எல்லாருங்காண, செல்லாகப் பற்றிக்கொண்டு போவார்களாம். எரிநரகத்தில் மல்லாக்கத் தள்ளி மீளமுடியாமல் மறித்துவைப்பார்களாம். புலால் உண்போர் நரகத்திற்குப் போவார்கள். அவர்களை எமதூதர்கள் எல்லாருங்காணப் பற்றிக் கொண்டு போவார்கள். இறப்பு பலவகை. அவற்றுள் பரிதாபமான ஒருவகை எல்லாருங் காண இறப்பது. பலர் காண இறப்பது. எல்லாருங்காண இறப்பது. பலர் காண இறப்பது எல்லாருக்கும் நேர்வதில்லை. சிலருக்கு நேர்கிறது. சாலை விபத்தில் இறப்பு நேர்கிறது. பலரும் (எல்லாரும்) பரிதாபமாகக் காண்கிறார்கள். நல்ல சாவு அன்று புண்ணியச்சாவு அன்று. இப்படிப்பட்ட பரிதாப மரணங்கள் புலாலுண்போர்க்கு நேரலாம். புலாலுண்ணும் எல்லாருக்குமே நேரும் என்பதில்லை. புலாலுண்ணுங் கொடியர் எல்லாரும் கண்டு பரிதாபப்பட இறப்பர் என்பது கருத்தாகக் கொள்க. எல்லாருங் காண என்பதற்கு இப்படியும் ஒரு பொருள் சிந்திக்கலாம். இனி, அடுத்த மந்திரம்.

**கொலையே களவுகள் காமக் பொய்கூறல்**
**மலைவான பாதகமாம் அவைநீக்கித்**
**தலையாம் சிவனடி சார்ந் தின்பம் சார்ந்தோர்க்கு**
**இலையாம், இவை ஞானானந்தத்து இருத்தலே. -200**

கொலை, களவு, கள், காமம், பொய் ஆகிய பஞ்சமாபாதகங்கள் கூடாது என்று கண்டிப்பது இம்மந்திரம். கொலையைச் சார்ந்தது புலை. கொலை புலை என்று ஒன்றாகக் கூறுவது பெருவழக்கு. பஞ்சமாபாதங்கள் ஐந்தில் கொலை புலை இரண்டும் உயிரோடு சம்பந்தப்பட்டவை. உயிரை எடுப்பவை. உயிரைக் கொடுப்பவை. நம்மால் உயிரைக் கொடுக்க முடியாது. கெடுக்காமலாவது எடுக்காமலாவது இருக்கலாமன்றோ!

## சமாதி வற்புறுத்தல்

இறந்தவர்களைப் புதைக்கவேண்டும், எரிக்கக் கூடாது என்பது வள்ளற்பெருமானின் கண்டிப்பான கட்டளை. இதனைத் திருவருட்பாவில் சமாதி வற்புறுத்தல் என்ற தலைப்பிற் காணலாம். உபதேசங்களிலும் திருமுகங்களிலும் காணலாம். புலால் மறுத்தல், சமாதி வற்புறுத்தல் ஆகிய இரண்டிலும் வள்ளலார் மிகவும் கண்டிப்பாக இருக்கிறார். சமாதானத்திற்கு இடமே வைக்கவில்லை. கண்டிப்பு என்றால் கண்டிப்புத்தான். பிணத்தை எரிப்பது கொலை என்கிறார். அந்த அளவுக்கு எரித்தலைக் கண்டிக்கிறார். சன்மார்க்க உலகில் சுடுகாட்டுக்கு இடமில்லை இடுகாட்டுக்கு மட்டுமே இடமுண்டு.

திருமூலரும் தம் திருமந்திரத்தில் “சமாதிக் கிரியை” என்றொரு அதிகாரமே பாடியுள்ளார். பதின்மூன்று மந்திரங்கள். ஞானிகள் இறந்தால் அவர்களது உடலை எரிக்கக்கூடாது, சமாதி செய்யவேண்டும் என்று சில பாடல்கள். வற்புறுத்துகின்றன. எப்படிச் சமாதி வைக்கவேண்டும் என்று சமாதிக் கிரியையைச் சில பாடல்கள் விவரிக்கின்றன.

வள்ளலாரது சமாதி வற்புறுத்தலுக்கும் திருமூலரின் சமாதிக் கிரியைக்கும் ஒரே ஒரு வேறுபாடு. ஆயினும் முக்கிய வேறுபாடு. இறந்த எல்லாரையுமே புதைக்கவேண்டும் எரிக்கக்கூடாது என்கிறார் வள்ளலார். இறந்த ஞானியர்களை (துறவிகளை)ப் புதைக்கவேண்டும் எரிக்கக்கூடாது என்கிறார் திருமூலர். இறந்தாரைப்பற்றி, பொது மக்களைப்பற்றிச் சொல்லவில்லை.

**அந்தமில் ஞானிதன் ஆகம்தீயினில்**
**வெந்திடில் நாடெலாம் வெம்பும் தீயினில்**
**நொந்தது நாய்நரி நுகரின் நுண்செரு**
**வந்துநாய் நரிக்குண வாக்கும் வையகமே** -1910

ஞானியின் உடல் தீயில் வெந்தா, நாடே தீயில் வெம்பும்; வெந்துபோகும். நாய் நரி உண்டால் போர் வந்து நாடு (நாட்டுமக்கள்) நாய்நரிக்கு உணவாவர்.

**எண்ணிலா ஞானி உடல் எரிதாவிடில்**
**அண்ணல்தம் கோயில் அழல்இட்ட தாங்கெக்கும்**
**மண்ணில் மழைவிழா வையகம் பஞ்சமாம்**
**எண்ணரு மன்னர் இழப்பர் அரசே** -1911

ஞானியின் உடல் எரிக்கப்படுவது கோயில் எரிக்கப்படுவதை ஒக்கும். பூமியில் மழை விழாது. உலகில் பஞ்சம் உண்டாகும். மன்னர்கள் அரசை இழப்பர்.

**புண்ணிய மாம்அவர் தம்மைப் புதைப்பது**
**நண்ணி அனல் கோக்கில் நாட்டில் அழிவாகும்**
**மண்ணில் அழியில் அலங்கார பங்கமாம்**
**மண்ணுல கெல்லாம் மயங்கும் அனல் மண்டியே** -1912

அவர்களைப் புதைப்பது புண்ணியம் எரித்தால் நாட்டில் அழிவு ஏற்படும். சரியாகச் சமாதி செய்யாமல் மண்ணில் அழியவிட்டால் நாட்டில் பொலிவு குன்றும். மண்ணுலகெல்லாம் அனல் மண்டி மயங்கும்.

ஞானியின் உடம்பை எரித்தால் அது கோயிலை எரிப்பதுபோல என்கிறார் திருமூலர். நாட்டில் தீ விபத்துகள் ஏற்படும், மழை பெய்யாது, போர்வரும், பஞ்சம் உண்டாகும், மன்னர்கள் ஆட்சியை இழப்பர் என்கிறார். எரிப்பதால் உண்டாகும் உற்பாதங்கள் எத்தனை எத்தனை? புதைப்பது புண்ணியம் என்கிறார்.

## திருமூலர் மரபு

## திருமூலர் - மௌனகுரு - தாயுமானவர் - வள்ளலார்

திருமந்திரம், தாயுமானவர் பாடல், திருவருட்பா - இம்மூன்றையும் முறையாக நன்காராய்ந்தால், திருமூலர் - மௌனகுரு - தாயுமானவர் - வள்ளலார் என்று ஒரு மரபுண்மை தெளிவாகத் தெளிகிறது.

தாயுமானவர் வாக்கில் திருமூலர் "சக்கரவர்த்தி தவராசயோகி" தாயுமானவர் பாடல், எந்நாட்கண்ணி, அடியார் வணக்கத்தில்.

**'சக்கரவர்த்தி தவராசயோகி எனும்**
**மிக்க திருமூலன் அருள்மேவுநாள் எந்நாளோ"**

**-8**

என்று தாயுமானவர் திருமூலரின் அருளை வேண்டுகிறார்.

தாயுமானவரின் குரு திருமூலர் மரபில் வரும் மௌனகுரு. அவருடைய மடம் மௌன மடம் என்ற பெயருடன் திருச்சிராப்பள்ளி மலைக்கோயில் வாயிலில் இன்றும் உள்ளது. முற்காலத்தின் தனி ஒரு மடமாக இருந்த அது பின்னாளில் தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்தது, இப்போது தருமபுர ஆதினத்தின் ஆளுகையில் உள்ளது.

**தாயுமானவர் தம் குருவை,**
**"மந்த்ர குருவே யோக தந்த்ர குருவே மூலன்**
**மரபில் வருமௌன குருவே"**

என்று பாராட்டுகிறார். தாயுமானவர் பாடல் மௌன குரு வணக்கம் பத்துப் பாடல்களும் இதனையே மகுடமாக உடையன. திருமூலர் முதன்முதலில் தமிழில் மந்திர தந்திரங்களை அருளியவர். அவரது மரபில் வரும் மௌனகுருவும் மந்திரகுரு, தந்திரகுரு.

தாயுமானவர் வேதாந்த சித்தாந்த சமரசங் கண்டவர். “சண்மத ஸ்தாபனமும் வேதாந்த சித்தாந்த சமரச நிர்வாக நிலையும்” என்று இன்னொரு பாடலில் (3) தாயுமானவர் குறிப்பிடுகிறார். ‘சண்மத ஸ்தாபனமும்’ என்று தாயுமானவர் கூறுவதில் ஷண்மதங்கள் வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம். பாசுபதம், சைவம் என்னும் ஆறு சமயங்களாம். சங்கர வேதாந்திகள் ஷண்மதமாகக் கொள்ளும் காணாபத்தியம், கௌமாரம், சௌரம், சாக்தம், வைணவம், சைவம் ஆகிய ஆறு மதங்களுமன்று என்று அறியவேண்டும். அடுத்து “வேதாந்த சித்தாந்த சமரச நிர்வாக நிலை” என்று குறிப்பிடுகிறார். இப்பாடலுக்கு அடுத்த பாடலின் இதனையே “வேதாந்த சித்தாந்த சமரச சிவானுபூதி என்று குறிப்பிடுகிறார்.

திருமூலரும் அவரது மரபில் வரும் மௌன குருவும் வேதாந்த சித்தாந்த சமரச நிர்வாகி நிலை கண்டவர்கள், வேதாந்த சித்தாந்த சமரச சிவானுபூதி பெற்றவர்கள். தாயுமானவரும் அவ்வாறே வேதாந்த சித்தாந்த சமரச ஞானியாய் விளங்குகிறார்.

திருமூலரும் தாயுமானவரும் வேதாந்த சித்தாந்த சமரசங்காண, தாயுமானவருக்குப் பின்வரும் வள்ளலார் ஷடாந்த சமரசம் (ஆறந்த சமரசம்) காண்கிறார். தாயுமானவரே மறுபிறப்பில் வள்ளலார். வள்ளலார் முற்பிறப்பில் தாயுமானவர் என்றொரு கொள்கை உண்டு. இக்கொள்கையுடையவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். தாயுமானவருக்கு அது இறுதிப்பிறப்பன்று, தாயுமானவருக்கு மறுபிறப்பு என்பவர் வள்ளலார். வள்ளலார் முற்பிறப்பில் தாயுமானவரே என்று வண்ணச்சரபர் வள்ளலாரிடம் கூறியபோது வள்ளலார் முற்றும் ஏற்காமலும் முற்றும் மறுக்காமலும் அடக்கமாக அதற்கு இப்போது என்ன? என்பதுபோல மழுப்பிவிட்டார். பெருமானின் பெருந்தன்மை, அடக்க ஒழுக்கம்.

**திருமூலர்**
**அவர் மரபில் வரும் மௌனகுரு**
**தாயுமானவர்**
**அவரே மறுபிறப்பில் வள்ளலார் - என்ற மரபு**
**நன்றாகவே இருக்கிறது.**

மௌனகுருவின் வரலாறு அதிகம் தெரியவில்லை. மௌனகுரு நூல் எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. தாயுமானவரே வள்ளலார் என்பதை நம்பினும் நம்புக. நம்பாதொழியினும் ஒழிக! வரலாறு மிகுதியும் விளங்காத, நூல் செய்யாத, மௌனகுருவை விடுத்து விடினும் திருமூலர், தாயுமானவர், வள்ளலார் என ஒரு மரபைக் கொள்ளலாம்.

இம்மூவர் வரலாற்றையும் திருமந்திரம் தாயுமானவர் பாடல் திருவருட்பா இம்மூன்றையும் தாயுமானவர் பாடல் திருவருட்பா இம்மூன்றையும் நன்காராய்வோர், திருமூலர் - தாயுமானவர் - வள்ளலார் என்று ஒரு மரபுண்மையைத் தெளிவாக உணரலாம்.

## காலந்தோறும் திருமந்திரம்

## திருமந்திரப் பதிப்பு வரலாறு

## (சில குறிப்புகள்)

வள்ளற்பெருமான் காலத்தில் திருமந்திரம் அச்சுக்கு வரவில்லை. பெருமான் ஏட்டுச்சுவடிகளாகவே திருமந்திரத்தைப் பார்த்திருக்கிறார்.

### மூலபதிப்புகள் - திரு.வி.க. பதிப்பு - (1909)

திரு.வி.க. வின் இளமைக் காலத்தில் அவரால் பார்வையிடப் பெற்ற திருமந்திர மூலப்பதிப் பொன்று 1909 - இல் வெளியாயிற்று. அப்போது அவருக்கு வயது 26. அப்போது அவர் (கதிரைவேற் பிள்ளையின் மாணவ நிலையிலேயே தொடர்ந்து இருந்துவந்த) வைதிகசைவர்; பின்னாளைய சீர்திருத்தச் சைவரல்லர். அந்த ஆண்டில் தான் அவர் கதிரைவேற் பிள்ளையின் வரலாற்றை எழுதியிருந்தார். அது அவர் முதன் முதலில் எழுதிய நூல். பெரியபுராணத்திற்கு ஒரு உரை எழுதிக் கொண்டிருந்தார். அது 1910 - இல் வெளியாயிற்று. அதன் இரண்டாம் பதிப்பு 1934 - இல் வெளியாயிற்று. இரண்டு பதிப்புகளுக்கும் மிகுந்த வேறுபாடுண்டு. முதற்பதிப்பின் போது (1910) அவர் வைதிக சைவர். இரண்டாம் பதிப்பின் போது (1934) சீர்திருத்தச் சைவர். அதற்கேற்ப இரண்டாம் பதிப்பு அமைந்தது.

திரு.வி.க. பதிப்பித்தவற்றுள் மேலே கூறிய திருமந்திரப் பதிப்பு தான். அவர் முதன் முதலிற் பதிப்பித்தது. அதன் பதிப்புரை அவருடைய அண்ணார் திரு.வி. உலகநாத முதலியார் எழுதியது. அதனை இன்று படித்தால் படிப்போர் அதிர்ச்சியடைவர். அந்நாளைய சைவ உலகின் நிலையை அதுகாட்டுகிறது. அனைவரும் அறியவேண்டி அப்பதிப்புரையின் ஒரு பகுதியை அப்படியே தருகிறோம்.

சற்குருபால் சமய விசேட நிருவாண தீக்கைகள் பெற்றுப் பஞ்சமா பாதகங்களைக் கனவினும் மறந்துஞ் செய்யாத சிவநேயர்களே இத்திருமந்திரத்தை யோதற்கு அதிகாரிகளாவர். இத்திருமுறையின் உண்மைப் பொருள் வடமொழிக்கலைகளையும். தென்மொழிக் கலைகளையும் உள்ளங்கை நெல்லிக்கனி போலுணர்ந்து. யோகானுட்டான முதலிய கைவரப் பெற்றுத் திருவருட் கண்ணுடைய ராயுள்ள சிவஞானிகளது நுண்ணறிவிற்கேயினது புலப்படூஉம் என்க;

* இவ்வருணூற்கும் பதவுரை வரைய முயன்று அயர்ந்தார் சிலர் முயல்கின்றார் சிலர். அவ்வுரை வெளிவரின், அஃது அறிஞர்களால எள்ளப்படுமென்பது திண்ணம். அவ்வுரையாசிரியர் எட்டாந் திருமுறைக்குச் செந்தமிழ்ப் புலமையுஞ் சிறிதும் நிரம்பப்பெறாத சில போலிப்புலவர்கள் உரையெழுதி யிடர்ப்பட்டதை யுணர்ந்திலர் போலும்.

கலைப்புலமை மாத்திரம் நிரம்பப் பெற்ற பண்டித சிரோமணிகளுக்குப் பெரும்பாலும் விளங்கா தென்பது வெள்ளிடைமலை.

இத்துணைச் சிறப்பமைந்த இத்திருமந்திரத்தைப் பலபிரதி களுக்கிணங்கத் திருவாரூர் -வி-கலியாணசுந்தர முதலியாரவர்களைக் கொண்டு பார்வையிடுவித்தும், தளை பிரித்தும், எமது ஸ்ரீபால சுப்பிரமணிய பக்தஜன சபையடியவர்கள் விழைந்த படி சில அரும்பாக்களை நட்சத்திரப் புள்ளிகளிட்டு விளங்கச் செய்தும் வெளியிட்டனம். நவையுளவேல் நவம்பொறுக்க.

**இங்ஙனம்**
**திருவாரூர் -வி.உலகநாதன்**
**வடமதுரை-மு.துரைசாமி**
**ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபை**
**இராயப்பேட்டை,சென்னை.**

பதிப்புரையின் அடிக்குறிப்பைப் பற்றி அதிகம் விளக்க வேண்டியதில்லை. அக்காலச் சைவ அறிஞருலகின் நிலை அது.

கிடைத்த வரை திரு.வி.க. வின் இவ் - 1909 பதிப்பே பழம்பதிப்பாகத் தெரிகிறது. திருமந்திரத்திற்கே இது தான் முதல் அச்சுப் பதிப்பா, அல்லது இதற்குமுன் அச்சுப்பதிப்பு உண்டா என்பது தெரியவில்லை.

**<u>சமாஜப் பதிப்பு (1933)</u>**

1933-இல் சைவ சித்தாந்த மகா சமாஜம் மூலப்பதிப்பு ஒன்றை வெளியிட்டது. (சமாஜம் இப்போது பெருமன்றம் என்று பெயர் மாற்றப்பெற்று விளங்குகிறது). அந்நாளில் சமாஜப் பதிப்புகளுக்கு மதிப்பு மிகுதி. அருமையான பதிப்புகள். பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சாத்திரங்களையும். சங்க இலக்கியங்களையும், சீவகசிந்தாமணியையும் திருப்புகழையும் செம்பதிப்புகளாக ஆய்வுப் பதிப்புகளாக வெளியிட்ட பெருமை சமாஜத்துக்கு உண்டு. அரிய ஆய்வுக்குறிப்புகள், முன்பின் இணைப்புகள் சமாஜப் பதிப்புகளின் தனிச்சிறப்பு. திருமந்திரப் பதிப்பு அவ்வாறே. ஏறத்தாழ பதினாயிரம் பாடபேதங்கள் காட்டப்பெற்றுள்ளன. பின் வந்த பதிப்புகளுக்கெல்லாம் சமாஜப்பதிப்பே ஆதாரம். பெருமன்றம் மறு பதிப்புகளை வெளியிட்டு வருகிறது.

**<u>காசிமடம் பதிப்பு (1956)</u>**

திருப்பனந்தாள் காசிமடத்துப் பதிப்பும் மூலப்பதிப்பே. சமாஜப்பதிப்பை அடியொற்றியதே. இன்று கிடைக்கும் பதிப்புகளுள் காசிமடத்துப் பதிப்பே சிறந்த பதிப்பு. மறுபதிப்புகள் தொடர்ந்து கிடைக்கின்றன.

**உரைப்பதிப்புகள் கயிலாயசித்தர் உரை**

இவ்வுரை ஏறத்தாழ இருநூறு வருடத்துக்கு முற்பட்டதாக இருக்கலாம். திருவாவடுதுறை ஆதீனவெளியீடாக 1954-இல் வெளிவந்தது. கன்னடியத் திருமேனி கம்பளிச் சட்டைக் கயிலாய சித்தர் என்பது இவ்வுரையாசிரியர் பெயர். கன்னடியத்திருமேனி - கன்னடநாட்டுத் தமிழர். கம்பளிச்சட்டை குளிர்நாடாதலின் கம்பளிச்சட்டை அணிபவர் கயிலாயசித்தர் - திருமூலரும் கயிலாயத்து ஒரு சித்தர். இவரும் பெயரால் கயிலாய சித்தர் - திருமூலரின் பேரிலுள்ள பற்றால் இப்பெயர் கொண்டார் போலும். இவ்வுரை 113 பாடல்களுக்கு மட்டுமே உள்ளது.

**மா.வே.விசுவநாத பிள்ளை குறிப்புரை (1912)**

இவரது ஊர் இலங்கை மாவிட்டபுரம் (மாவை). இவர் பிரமச்சரிய விரதத்தினர். இவரது குறிப்புரை திருமந்திரம் முழுமைக்கும் உள்ளது. நல்ல பெரியபுத்தகம். அழகான அச்சு. டாக்டர்.வி.வி.ரமண சாஸ்திரிகளின் விரிவான ஆய்வு முன்னுரை. சாஸ்திரிகள் அந்நாளில் சிறந்த ஆய்வாளர், சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். தமிழ் ஆங்கிலம் வடமொழி ஆகிய மூன்றிலும் புலமை பெற்றவர். திருமந்திரப் பதிப்புகளில் இப்பதிப்பும் சிறந்ததொரு ஆதாரப்பதிப்பு.

**திருமந்திர 100 பாட்டுக்குரை (1913)**

சேற்றூர் ரா.சுப்பிரமணியக்கவிராயரால் எழுதப்பட்டு, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ்ப் பிரசுரமாக 1913-இல் வெளிவந்தது.

**துடிசைகிழார் குறிப்புரை (1942)**

துடிசைகிழார் அ.சிதம்பரனார் தமிழ், சைவம் ஆகிய இரண்டிலும் சிறந்த ஆய்வாளர். இவரது குறிப்புரையுடன் கூடிய மூலப்பதிப்பு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக 1942-இல் வெளிவந்தது. திருமூலரின் வரலாற்றை விரிவாக இவர் ஆய்ந்துள்ளார்.

**ப.இராமநாதபிள்ளை உரை (1957)**

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு. இரண்டு பகுதிகள், இவ்வுரையைத் தனித் தமிழ் உரை எனலாம். கழகப்பதிப்பு என்பதற்குரிய சிறப்புடன் அமைந்தது.

**தண்டபாணிதேசிகர் உரை (1958)**

பஞ்சாக்கர தீபம் என்ற பெயருடன் பகுதிபகுதியாகப், பலபகுதிகளாக, ஆண்டுதோறும் திருமந்திர மாநாட்டில் திருவாவடுதுறை ஆதீனத்தால் வெளியிடப் பெற்றது. தேசிகர் காலத்திலேயே நிறைவு பெறாத பகுதியை ஆதீனப்புலவர். த.ச.மீனாட்சி சுந்தரம்பிள்ளை நிறைவுசெய்தார்.

## வரதராசபிள்ளை உரை (1971)

திருச்சிராப்பள்ளி லால்குடி (திருத்தவத்துறை) யிற் பிறந்து வாழ்ந்த இவர் திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். பணியில் இருக்கும் காலத்திலேயே திருக்குறட் பணியைத் தொடங்கினார். “திருவள்ளுவர்” என்றொரு இதழை நடத்தினார். திருக்குறள், திருமந்திரம், திருவாசகம் ஆகிய மூன்றுக்குமே இவர் உரை எழுதிய சிறப்புடையவர், இவரது திருமந்திர உரை மூன்று பகுதிகளாக வெளிவந்தது (1971;19721974). முதற்பதிப்புகளை இவரே சொந்த வெளியீடாக வெளியிட்டார். திருச்சிராப்பள்ளி ஜோதி பிரிண்டர்சில் அச்சிடப் பெற்றது. எம் இளமைக் காலத்திலிருந்தே பிள்ளையவர்களை நாம் அறிவோம். ஜோதி பிரிண்டர்ஸ் எமது திருவருட்பாப் பதிப்புகளையும், நூல்களையும் அச்சிடும் அச்சகம். அறிவுலகத் தொடர்போடு அச்சகத் தொடர்பும் எங்கள் இருவருக்கும் உண்டு. இவரது திருக்குறள், திருவாசக, திருமந்திர உரைகளைப் பழனியப்பா பிரதர்ஸ் (திருச்சிராப்பள்ளி) தொடர்ந்து வெளியிட்டு வருகிறார்கள். நன்கு எல்லார்க்கும் புரியுமாறு தெளிவான ஒரு உரை வேண்டும் என்று கேட்பார்க்கு நாம் அவரது உரையைப் பரிந்துரைப்பதுண்டு.

அண்மையில் “சைவப் பெருவெளியில் காலம்” என்ற சிறந்த ஆய்வு நூலை எழுதி வெளியிட்ட சைவ அறிஞர் பூம்புகார் மேலையூர் இரா.இராஜசேகரன் அவர்கள் இவருடைய திருக்குமாரர் ஆவார்.

## அருணை வடிவேல் முதலியார் உரை (1974)

மிகவிரிவான உரை. மூன்று பகுதிகளாக 1974; 1984;1995 - ஆம் ஆண்டுகளில் தருமபுர ஆதீன வெளியீடாக வெளிவந்தது. சிறந்த உரை.

## திருவாவடுதுறை ஆதீனவெளியீடு திருமந்திரக் கட்டுரை நூல்கள்

”திருமந்திரக் கட்டுரை” என்று ஒரு வரிசை நூல்களைப் பல பகுதிகளாகத் திருவாவடுதுறை ஆதீனம் ஆண்டுதோறும் திருமந்திர மாநாட்டில் வெளியிட்டது. உரையாக இல்லாமல் பாடலும் கட்டுரையுமாக அமைந்த இதன் ஆசிரியர்.தே.ஆ.ஶ்ரீநிவாஸாசாரியர் மிகச் சிறந்த அறிஞர். நுட்பமாக எழுதுகிறார். இவருக்குப் பின் சில பகுதிகள் பிறரால் எழுதப் பெற்றன. இக்கட்டுரை நூல்கள் மிகவும் பயனுள்ளவை.

## திருவாவடுதுறை ஆதீனவெளியீடு

## முக்கியமான சில தனி நூல்கள்

திருமந்திரம் சிவயோகப்பகுதி (1955), திருமந்திரம் சிவயோக சிந்தனை (1956), திருமந்திரம் வைத்தியப் பகுதி (1957) திருமந்திரக் கருத்து (1964) என்ற நூல்களைத் திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்டது. சிவயோகப் பகுதியும், சிவயோக சிந்தனையும் மிக அரிய நூல்கள், சிறந்த நூல்கள். இவற்றின் பதிப்பாசிரியர் த.ச.மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களை நாம் நேரில் அறிவோம். த.ச.மி(மீ) என அன்பர்கள் அவரை அன்பாகவும் மரியாதையாகவும் வழங்குவர்.

### திருமந்திர மாநாடுகள்

திருவாவடுதுறை ஆதீனம் 1954 முதல் ஆண்டு தோறும் திருமந்திர மாநாட்டை மிகச்சிறப்புடன் நடத்தி வந்தது. இருபது மாநாடுகள் வரை நடந்தன. சிறந்த அறிஞர்கள் பலர் கலந்து கொண்டனர். மாநாட்டு மலர்களும் நூல்களும் பல வெளிவந்தன.

இசைப் பேரரசி டாக்டர் சேலம். எஸ்.ஜெயலட்சுமி அம்மையார் திருமூலர் திருமந்திரத் திருமன்றம் என்றொரு அமைப்பை ஏற்படுத்தி 1969 முதல் ஆண்டு தோறும் திருமந்திர மாநாட்டை நடத்தி வருகிறார். மு.கிருஷ்ணன். ஐ.ஏ.எஸ் (ஓய்வு); க.நா.பலராமன், எஸ்.தியாகராஜன், பி.ஈ., சம்பந்தன், கே.எஸ்.ஹேமந்தகுமார் முதலிய அன்பர்கள் அவ்வமைப்பில் முக்கிய இடம் பெற்று மாநாட்டைச் சிறப்பாக நடத்துகின்றனர்.

### மொழிபெயர்ப்புகள் ஆங்கில மொழிபெயர்ப்பு

திருமந்திரம் பா. நடராசன் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பின் ஒரு பகுதி 1958 - இல் திருப்பனந்தாள் காசிமடத்து வெளியீடாக வெளிவந்தது. முழுவது இராமகிருஷ்ணமடத்து வெளியீடாக 1991 - இல் அருட்செல்வர் டாக்டர் திரு.நா.மகாலிங்கம் அவர்களின் பொருளுதவியால் வெளியிடப் பெற்றது. இராமகிருஷ்ண மடத்து வெளியீடான இது உலக முழுவதும் இன்று பரவியுள்ளது.

### இந்தி மொழிபெயர்ப்பு (1998)

ஆங்கில மொழிபெயர்ப்பைக் கொண்டு இந்தி மொழிபெயர்ப்பு ஒன்று அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்களின் ஆதரவால் டெல்லி பேராசிரியர் டாக்டர்.ரவீந்திரகுமார்சேர் (ஆர்.கே.சேத்) அவர்களால் செய்யப்பட்டு 1998 - இல் வெளியிடப் பெற்றது. வெளியீட்டு விழா டெல்லியில் குடியரசுத் துணைத்தலைவரின் மாளிகையில் சரஸ்வதி பவன் அரங்கத்தில் சிறப்பாக நிகழ்ந்தது.

# இந்நாளில் திருமந்திரம்

## திருமந்திரம் பரவிவரும் வரலாறு

திருமந்திரம் இன்று அறிஞர்கள் நிலையிலிருந்து சாதாரணப் படிப்பாளிகள் பொது மக்கள் நிலைக்குக் கூட வந்துள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் ராஜாஜியும் சோமுவும் சேர்ந்து கல்கியில் திருமந்திரக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதினார்கள். பொதுமக்களின் கவனம் ஈர்க்கப் பெற்றது. திருமந்திரத்தைப் பற்றிப் பலர் பேசவும் எழுதவும் தொடங்கினர்.

அண்மைக்கால வெளியீடுகளான நூல்கள் சிலவற்றைக் குறிப்பிடுவோம்.

பேராசிரியர் சிவலிங்கனாரின் மூலன் தமிழ் என்னும் நூல் வீரசைவப் பேரன்பராகிய ஆ.திருவாசகனாரின் அருள் - சுடர் பதிப்பக வெளியீடாக 1995-இல் வெளிவந்தது.

அடிகளாசிரியரின் இருநூல்கள் திருமூலரும் பேருரையும், (மகாவாக்கிய ஆராய்ச்சி). திருமந்திர உணர்வு 1998; 2001 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன. ஆசிரியரின் மகனாரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியருமான முனைவர் அ.சிவபெருமான் இவ்விருநூலையும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். அடிகளாசிரியரின் அழுத்தமான சைவப் பற்று, சிவபெருமான் என்று தம் மகனுக்குப் பெயரிடச் செய்திருக்கிறது. சிறந்த வீரசைவ அறிஞர்களாகிய சிவலிங்கனாரும் அடிகளாசிரியரும் திருமூலர் வீரசைவர் என்னும் கருத்தினர். வீரசைவர் பலருக்கும் இதுவே கருத்து.

கோவை ஈச்சநாரியில் கற்பகம் கலை அறிவியல் கல்லூரியை நிறுவி நடத்தும் சைவப் பெரும் பணியாளர் திரு.இரா.வசந்தகுமார் பி.இ., தம் கல்லூரியின் சார்பில் பன்னிருதிருமுறை ஆய்வுமையத்தையும் நிறுவி நடத்துகிறார். சிறந்த பல பணிகளைச் செய்து வரும் இவ்வாய்வு மையம் “என்னை நன்றாக இறைவன் படைத்தனன் திருமந்திரம் தமிழ் உரைநடை” என்றொரு பெருநூலை 2001-இல் வெளியிட்டுள்ளது. திருமந்திரத்தின் அதிகாரப் பெயர்களைத் தலைப்பாகக் கொண்டு அறிஞர் பலரைக் கட்டுரை எழுதக் கேட்டுப்பெற்றார் தொகுத்து வெளியிட்டுள்ள இப்பணி, இக்காலத்தில் பலருக்கும் திருமந்திரத்தின் மீது ஒரு வகை ஆர்வம் பெருகி வருவதைக் காட்டுகிறது.

தொழில் முறை நூல் வெளியீட்டாளர்கள் திருமந்திரத்தின் பக்கம் கவனம் செலுத்தத் தொடங்கினார், வர்த்தமானன் பதிப்பகம் வித்துவான் எம்.நாராயண வேலுப்பிள்ளையைக் கொண்டு சுருக்கமாக உரையெழுதச் செய்து திருமந்திரம் மூலமும் தெளிவுரையும் என்று மூன்று பகுதிகளாக வெளியிட்டது (1994).

தமிழ்நாட்டு அரசின் தலைமைச் செயலாளராக விளங்கிய திரு.டி.வி.வெங்கட்டராமன் திருமந்திரத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டவராகி அனுபவ

உரை என்று ஒரு உரையையே எழுதி, பாரதிபதிப்பக வெளியீடாக அது வெளிவந்தது. (1996).

செந்தமிழ் வேள்விச் சதுரர் திரு.மு.பெ. சத்தியவேல் முருகனார் திருமந்திரத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டு பேசியும் எழுதியும் வருகிறார். ஆண்டுக்கொரு முறை பகுதி பகுதியாக முற்றோதல் செய்வதோடு திருமந்திரம் சம்பந்தமான நூல்களையும் வெளியிடுகிறார். திருமந்திரச் சிந்தனைகள். திருமந்திரம் - ஓர் அறிமுகம் (பாயிரம்) என்ற அவரது இரண்டு நூல்களும் முறையே உமா பதிப்பகம், கலைஞன் பதிப்பகம் வெளியீடுகளாக 2000; 2002 - ஆம் ஆண்டுகளில் வெளிவந்துள்ளன.

அண்மையில் நிகழ்ந்துள்ள திருமந்திரப் பெரும் பணிகள் இரண்டைக் கூறி இப்பகுதியை நிறைவு செய்வோம்.

1. திருமந்திரம் மூலபாட ஆய்வுப்பதிப்பு
2. திருமந்திரந்திற்காணும் சைவ சமயக் கலைச்சொல் விளக்கம்

## திருமந்திரம் - மூலபாட ஆய்வுப்பதிப்பு

பதிப்பாசிரியர் டாக்டர்.சுப.அண்ணாமலை நான்கு ஆண்டுகள் அரிதின் முயன்று இம்மூலபாட ஆய்வுப்பதிப்பை உருவாக்கியுள்ளார். மூலத்தைச் சந்திபிரித்தும் சந்தி பிரிக்காமலும் அடுத்தடுத்துக் கொடுத்திருப்பதும் மந்திரங்கள் அனைத்துக்குமே கருத்து எழுதியிருப்பதும் குறிப்பு எழுதியிருப்பதும் ஆய்வாளர்க்கும், சாதாரண அறிவுடையார்க்கும், மிகவும் பயன்படுவதாகும். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் ஆதரவுடன் செய்யப் பெற்ற இப்பெரும் பணி, கோவிலூர் ஆதீனகர்த்தர் ஸ்ரீநாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் அவர்களின் இந்தியப் பண்பாடு - ஆராய்ச்சி நிறுவனத்தின் (கலாகேக்ஷத்ரா சாலை, திருவான்மியூர் சென்னை) வெளியீடாக அண்மையில் 1997 - இல் மூன்று பகுதிகளாக வெளிவந்துள்ளது. மிகப்பெரிய பணி. பதிப்பாசிரியர் சுப.அண்ணாமலை அவர்களையும், சுவாமிகளையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இதுவரை திருமந்திரத்தைப் பதிப்பித்துள்ள பதிப்பாசிரியர்கள் அனைவருள்ளும் இவர் ஒருவரே வள்ளலாரையும் அவரது சன்மார்க்கத்தையும் அறிந்தவர். திருமந்திர ஆய்வுக்குத் தமிழறிவு, சைவ அறிவு மட்டும் போதாது தத்துவ அறிவு சித்தமார்க்க அறிவு வள்ளலாரின் சன்மார்க்க அறிவு ஆகியனவும் இருக்க வேண்டும். மற்றவற்றோடு வள்ளலாரைப் பற்றியும் இப்பதிப்பாசிரியர் நன்கறிந்தவர். இவரது டாக்டர் பட்ட ஆய்வே வள்ளலாரைப் பற்றியது தான். அது பாரதிய வித்யா பவன் வெளியீடாக வெளிவந்தது. அண்ணாமலையாரின் மூலபாட ஆய்வுப்பதிப்பு அறிவுலகத்திற்கு ஒரு கொடை.

## திருமந்திரத்திற்காணும் சைவ சமயக்

## கலைச்சொல் விளக்கம்

அண்ணாமலையாரின் கொடைக்கு அடுத்த இரண்டாவது கொடையான இது தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கொடை. 2002 - இல் வெளிவந்த இக்கலைச்சொல் விளக்க நூலின் ஆசிரியர் திரு.அ.மா.பரிமணம் அவர்கள் அண்மையில் அமரராகிவிட்டார் என்பது வருந்தத்தக்கது. நீண்டகாலத் தேவையை நிறைவு செய்யும் இந்நூல் வருங்காலத்தில் திருமந்திர உரையாளர் பலரை, ஆய்வாளர் பலரை உருவாக்கும். சிறந்த இந்த நல்ல பணிக்காகத் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப் பாராட்டி நன்றி கூறவேண்டும்.

மூலபாட ஆய்வுப் பதிப்பின் ஆக்கம்; கலைச்சொல் விளக்கத்தின் ஆக்கம் ஆகிய இரண்டுமே பல்கலைக் கழகங்களின் பணிகள். பல்கலைக் கழகம் போன்றவையால் தான் இத்தகைய பெரும் பணிகளைச் செய்ய இயலும்; மேலும் பல செய்ய வேண்டும்.

## இனிச் செய்யவேண்டிய திருமந்திரப் பணிகள்

இனிச்செய்ய வேண்டிய திருமந்திரப் பணிகள் பல உள. அவற்றுட் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுவோம்.

1. திருக்குறள் ஆய்வுமையம், சேக்கிழார் ஆய்வுமையம் போன்று திருமூலர் ஆய்வுமையம் அல்லது திருமந்திர ஆய்வுமையம் ஒன்று வேண்டும்.

2. கம்பன் ஆய்வடங்கல், பாரதியார் ஆய்வடங்கல் முதலியன போன்று திருமூலர் ஆய்வடங்கல் அல்லது திருமந்திர ஆய்வடங்கல் (ஒரு பிபிலியோகிராபி Bibliography) உருவாக வேண்டும்.

3. திருமூலர் திருமந்திரம் சம்பந்தமான நூல்கள் வெளியீடுகள் அனைத்தையும் தொகுத்து திருமந்திர நூலகம் என்று திருமந்திரத்திற்கு மட்டும் ஒரு தனி நூலகம் அமைக்க வேண்டும். வள்ளலார் கம்பர் சேக்கிழார் போன்றார்க்கும் இப்படி அமைக்க வேண்டும்.

4. சொல் அடைவு, பொருள் அடைவு, கலைச் சொல் விளக்கம் முதலிய பல அங்கங்களுடன் பெரிய அளவில் திருமூலர் கலைக்களஞ்சியம் அல்லது திருமந்திரக் கலைக்களஞ்சியம் ஒன்று உருவாக்க வேண்டும்.

அகாடமிம் பிபிலியோகிராபி, என் சைக்ளோபீடியா இப்படிப்பட்ட பெரிய வேலைகளில் இனிக் கவனஞ் செலுத்த வேண்டும்.

திருக்குறள் திருமந்திரம் திருவாசகம் இம்மூன்றையும் பிரதான, பிரமாண நூல்களாகக் கொண்டு வள்ளலார் தன் மார்க்கத்தையும் திருவருட்பாவையும் ஆக்கியருளியிருக்கிறாராதலின் இனித் திருக்குறள் திருமந்திர திருவாசக ஆய்வாளர்கள் பதிப்பாளர்கள் வள்ளலார் கண்ணோட்டத்தில் காணவேண்டும்.

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

**தயவு**

